பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 10 வெள்ளிக்கிழமை (23.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 148

# சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம் பேணுதலை புதிய நாடாளுமன்றிலிருந்து ஆரம்பிப்போம்

## சரத் பொன்சேகா தமது கன்னி உரையில் அறைகூவல்



கொழும்பு, ஏப்ரல் 23

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் நடவடிக்கையையும் ஜனநாயக விழுமியங்களைப் பேணும் முறைமையையும் புதிய நாடாளுமன்றத்தில் இருந்து ஆரம்பிப்போம் என நாடாளுமன்றத்தில் அறைகூவல் விடுத்தார் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகத் தேசிய முன்னணியின் தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகா.

இராணுவத் தடுப்புக் காவலில் இருந்து நேற்று நாடாளுமன்றுக்குக் கூட்டி வரப்பட்ட ஜெனரல் பொன்சேகா, நாடாளுமன்றில் தமது கன்னி உரையை ஆற்றியபோதே இவ்வாறு அறைகூவல் விடுத்தார்.

புதிய நாடாளுமன்றம் நேற்று முதல் தடவையாகக் கூடியபோது, அங்கு எம். பியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப் பட்ட சமல் ராஜபக்ஷவைப் பாராட்டி உரை யாற்றிய சமயமே அவர் இப்படிக் குறிப் பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புதிய சபாநாயகராகிய உங்களுக்கு நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது பணியை மிகவும் திறம்படச் செய்ய உங்களுக்கு ஆற்றல் கிடைக்கவேண்டும்.

நாடாளுமன்றத்தின் மரபு, ஜனநாயக விழுமியம் போன்றவற்றை நீங்கள் உரிய முறையில் பாதுகாப்பீர்கள் என்று நாம் நம் புகிறோம். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நடைமுறை இந்த நாடாளுமன்றில் இருந்து தான் ஆரம்பமாகவேண்டும்.

மக்களுக்கு நீதி கிடைத்தல், சட்டத்தின் சுயாதீனத்தைப் பாதுகாத்தல், மக்களின் உரிமையைப் பாதுகாத்தல், ஊடக சுதந்தி ரத்தைப் பேணுதல் உட்பட அனைத்து ஜனநாயக (24ஆம் பக்கம் பார்க்க)

## 48 மணி நேரத்தில் முடிவுற்ற கடத்தல் நாடகம்

## இருவரையும் கொலைசெய்து புதைக்கத் தயார்! பொலிஸாரின் அதிரடி வேட்டையில் சிக்கினர் மூவர்!!

சண்டிலிப்பாய், ஏப். 23

மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையினால் கடந்த செவ் வாய்க்கிழமை காலை கடத்திச் செல்லப் பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவரும், இளை ஞர் ஒருவரும் கொலை செய்யப்பட் டுக் குழியில் புதைக்கப்பட விருந்தவேளை, 48 மணி நேரத்திற்குள் குருநகரி லுள்ள ஒரு வீட்டிலிருந்து மீட்கப் பட்டனர். பொலிஸா ரின் தீவிர முயற்சியினாலும் சாதுரியத்தா லும் கடத்தல் கோஷ்டியைச் சேர்ந்த குரு நகரைச் சேர்ந்த மூவரும் கைது செய்யப் பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை மோட் டார் சைக்கிளில் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சந்தேகநபர் கைவிலங்கை உடைத்துக்கொண்டு தப்பினார்!

யாழ்ப்பாணம், ஏப். 23

மானிப்பாய், கட்டுடைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு யுவதி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய தாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைதாகிப் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று அதிகாலை அங்கிருந்து தப்பித் துச் சென் றுள்ளார்.

இவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நட வடிக்கையைப் பொலிஸார் முடுக்கிவிட் டுள்ளனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறைச்சாலைக் கைதிகள் நேற்றுமுதல் உண்ணாவிரதப் போர்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.சிறைச்சாலையில் நீண்டகாலமா கத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட் டத்தை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத் திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் 16பேரை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதை ஆட்சேபித்தே உண்ணாவிர தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் நீதிமன்றத் தால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப் பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப் பட்டுள்ள (24ஆம் பக்கம் பார்க்க)



## இனியாவது தீர்வு காண முன்வாருங்கள்; சபையில் நேற்று சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, ஏப்.23

''இந்த நாட்டில் அறுபது வருடங்களாக இருந்துவரும் பிரச் சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் காண இனியாவது நாம் அனைவரும் ஒன்றி ணைந்து செயற்பட முன்வர வேண்டும். 30 வருடகால யுத்தம் முடிந்து விட்டதால், சமாதானம் பிறந்துவிட்டது என்று கூறப் படுவதையோ, மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் நிலை உருவாகிவிட்டது என்று" கூறப்படுவதையோ எம் மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப் பட்ட சமல் ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று நாடாளுமன்றில் உரை நிகழ்த்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் ஆர்.சம்பந்தனே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஏழாவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்ட உங்களுக்கு எமது கட்சியின் சார்பில் நாம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கி றோம். (24ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகராகச் சமல் ராஜபக்ஷ தெரிவு பிரதிச் சபாநாயகர் பதவி பிரியங்கரவுக்கு

### ஈ.பி.டி.பியின் சந்திரகுமார் குழுக்களின் பிரதித் தலைவர்

கொழும்பு, ஏப்.23

ஏழாவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளாலும் வாக்கெடுப் பின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவருடன் சேர்த்து முன்னாள் பிரதி சபாநாயகர் பிரியங்கர ஜயரட்ண பிரதி சபாநாயகராகவும், யாழ். மாவட்டத்தில் ஆளுங்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற - ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவ ரான (24ஆம் பக்கம் பார்க்க)

BLACK & DECKER® Home Made in England



உலகின் தலைசிறந்த பிரித்தானிய உற்பத்தி மின் உபகரணங்கள்

இன்று 23.04.2010 தொடக்கம் யாழ்.நகரில்....

உங்கள் வீட்டின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய அனைத்து மின் உபகரணங்களும்

E.S.P Trading Co (Pvt) Limited

DELMEGE WARRANTY

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

No.05, Jummah Mosque Lane, off Kasthuriyar Road, Jaffna. T.P. 021 222 2281 / 8162

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு பெரிய எரிமலை ஐஸ்லாந்தில் குமுறும் ஆபத்து!

ரெய்க்ஜாவிக், ஏப். 23

ஐஸ்லாந்தில் இப்போது இன்னும் ஓர் எரிமலை வெடிக்கவிருக்கிறது. இது முந்தைய எரிமலையை விட 10 மடங்கு பெரியது. இது வெடித்தால் பாதிப்பு இன்னும் அதிகமாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

எய்ஜாப்ஜலாஜோகுல் என்ற எரிமலை கடந்த மாதம் வெடித்தது. அது எரிமலை குழம்புகளைக் கக்கியது. அதனுளிருந்து எழுந்த புகையும், சாம்பலும் ஐரோப்பா முழுவதும் பரவின. இதனால், விமானசேவைகள் பாதிப்படைந்தன. நூற்றுக்கணக்கான விமானசேவைகள் இரத்து செய்யப்பட்டன.

இதனால் உலக முழுவதும் விமான பயணிகள் கடந்த ஒரு வாரமாக தாங்கள் செல்லவேண்டிய இடங்களுக்கு செல்ல முடியாமல் தத்தளித் வண்ணமுள்ளனர். இந்த பிரச்சினை இதோடு முடியவில்லை.

எய்ஜாப்ஜலாஜோகுல் எரிமலைக்கு அருகில் 20 கி.மீ. தொலைவில் உள்ள கட்லா என்னும் இன்னுமோர் எரிமலை, விரைவில் வெடிக்கவிருக்கிறது. இது வெடித்து சீறி, எரிமலை குழம்புகளைக் கக்கினால், அதன் பாதிப்பு மிகப்பெரிய அளவில் இருக்கும் என்று விஞ்ஞானிகள் அஞ்சுகிறார்கள்.

இது எய்ஜாப்ஜலாஜோகுல் எரிமலையை விட 10 மடங்கு பெரியதாகும். இது வெடிக்குமானால், இதிலிருந்து வெளிப்படும் புகையும் சாம்பலும் அதிக உயரத்துக்கு கிளம்பும் என்று அஞ்சப்படுகிறது. இதை 500 மீற்றர் கனத்துக்கு பனி மூடி உள்ளது.

அடுத்தடுத்து உள்ள 2 எரிமலைகளில் ஒன்று வெடித்தால், அது அடுத்ததையும் வெடிக்க செய்யும். கடந்த காலத்தில் இந்த 2 எரிமலைகளும் ஒரே நேரத்தில் வெடித்துள்ளன. கடந்த காலத்தில் 3 தடவைகள் இந்த 2 எரிமலைகளும் ஒரே நேரத்தில் வெடித்துள்ளன என ஐஸ்லாந்து பல்கலைக்கழகப் புவி இயற்பியல் துறை பேராசிரியர் பால் எய்னார்சன் தெரிவித்தார்.

கட்லா எரிமலை 80 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெடிப்பது வழக்கம். இது கடந்த முறை வெடித்தது 1918 ஆம் ஆண்டாகும்.

எனவே, கட்லா எரிமலை எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் என்பதால் அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் அச்சம் அடைந்துள்ளனர். அவர்கள் அந்தப் பகுதியை காலி செய்து விட்டு வெளியேறவிருக்கிறார்கள்.

## வெப்ப வெளிப்பாட்டால் பூமி பாதிக்கப்படலாம்

வாஷிங்டன், ஏப்.23

கடந்த சில ஆண்டுகளாகப் பூமியின் மேற்பரப்பில் நிலவிய வெப்பத்தைப் பூமி உள் இழுத்துக் கொண்டிருக்கிறது. அடுத்த சில ஆண்டுகளில் அது மீண்டும் வெளிப்பட்டு, பூமிக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என, அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் கொலரோடாவைச் சேர்ந்த, தேசிய காலநிலை ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் இது குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:-

கடந்த 2003இல் இருந்து பூமியில் நிலவிய வெப்பத்தைக் கணக்கிட்டுப் பார்த்ததில், ஓர் அதிர்ச்சியான விடயம் தெரிய வந்தது. இந்த ஏழு ஆண்டுகளில், பூமியில் ஏற்பட்ட வெப்பத்தின் ஒரு பகுதியைக் காணவில்லை. அது எங்கோ ஓரிடத்தில் மர்மமாக மறைந்துள்ளது.

இந்த வெப்பம் எங்கே மறைந்துள்ளது என்பதைக் கண்டுப்பிடிப்பதற்கு, தற்போது நம்மிடமுள்ள கருவிகளில் போதிய வசதி இல்லை. இந்த ஆராய்ச்சி தவறாகவும் இருக்கலாம். அல்லது, கடலின் மிக அதிக ஆழத்தில் இந்த வெப்பம் மறைந்திருக்கலாம்.

கடந்த ஆண்டு, 'இ1 நினோ' என்று பெயரிடப்பட்ட, கடல்நீர் வெப்பநிலை கூடிய விவகாரம், மறைந்திருக்கும் வெப்பத் தின் தாக்கமாகக்கூட இருக்கலாம். பூமியின் மேற்பரப்பிலுள்ள நச்சு வாயு, சூரியனிடமி ருந்து அதிக வெப்பத்தை ஈர்த்த வண்ணம் உள்ளது என, செய்மதிக் கருவிகள் தெரிவிக் கின்றன.

பின்னொரு நாளில், இந்த வெப்பம் மீண்டும் வெளிப்பட்டு பூமிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதனால், கால நிலையிலும் பாதிப்பு ஏற்படலாம். எங்கோ ஒரு பகுதியில் மறைந்துள்ள இந்த வெப்பம், வெகு விரைவிலோ அல்லது சிறிது காலம் கழித்தோ வெளிப்படலாம்.

பனி மலை அடுக்குகள் உருகுவதன் மூலமாகவோ, கடல்நீர் மட்டம் அதிகரிப்பதன் மூலமாகவே இந்த வெப்பம் வெளியாவதற்கு வாய்ப்பு உள்ளது.இவ்வாறு இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# தென்னாபிரிக்க ரயில் விபத்தின்போது குழந்தை பிரசவம்; தாயும் சேயும் பலி!

பிரிட்டோரியா, ஏப். 23

தென்னாபிரிக்காவில் சொகுசு ரயிலொன்று தடம் புரண்ட சமயத்தில் பிறந்த சிசுவும், அதைப் பிரசவித்த தாயும் அதே விபத்தில் பலியாயினர். இந்த விபத்தில் இருபத்தைந்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 18 பேர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.





உல்லாச பயணிகளுக்கான இந்த சொகுசு ரயில்வண்டி, தென்னாபிரிக்க தலைநகரான பிரிட்டோரியாவுக்கருகில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. ரயில் பெட்டிகளில் சில ஒன்றின்மீது ஒன்று புரண்டு கிடக்கின்றன. பல பெட்டிகள் முற்றாக சிதைந்துள்ளன என அதிகாரிகள் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தனர்.

ரோவஸ் ரயில் நிறுவனத்தால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இந்த சொகுசு ரயில் வண்டியின் சில பெட்டிகள் குளிரூட்டப்பட்டவை. அதேவேளை, வெந்நீர் குளியலுக்கான வசதிகளையும் கொண்டவை. விபத்துக்குள்ளான இதில் வெளிநாட்டினரும், தென்னாபிரிக்கரும் பயணித்துள்ளனர் என அவசரகாலச் சேவை ஊழியர் கிறிஸ்போத்தா குறிப்பிட்டார்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் வெளிநாட்டினரும், தென்னாபிரிக் கரும் அடங்குவர். வெளிநாட்டினர், எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் உடனடியாக வெளியாகவில்லை என அவசர கால மருத்துவச் சேவை பேச்சாளர் ஜோன் பீட்டர்ஸ், 'தென்னாபிரிக்க பிஸ்னஸ் டே' செய்தித்தாளுக்குத் தெரிவித்தார்.

இந்த சொகுசு ரயில் 55 பயணிகளுடன் கேப்டவுனிலிருந்து புறப்பட்டு வந்துள்ளது. பிரிட்டோரியாவிலுள்ள 'புளூ ரயில் டிப்போ'வுக்கு எதிரே இது தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் சேதமடைந்த ரயில்பாதை, மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை மூடப்பட்டுவிட்டது என ரயில்வே பிரிவு அதிகாரியொருவர், ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

"புளூ ரயில் சேவை நிறுவனமும், சுற்றுலா பயணிகளுக்காக சொகுசு ரயில் சேவைகளை நடத்துகின்றது. இதன் சொகுசு ரயில்கள் கேப்டவுனுக்கும், பிரிட்டோரியாவுக்குமிடையே சேவையில் ஈடுபடுகின்றன. எனினும், பிறிதொரு ரயில் சேவை நிறுவனமான 'ரோவஸ்' ரயில் நிறுவனம் புனரமைப்புச் செய்யப்பட்ட பழமையான ரயில்களையே சேவையில் ஈடுபடுத்துகின்றது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இதயத்தை மாற்றிய பின்னரும் இரட்டைப் பெண் குழந்தைகள்!

வாஷிங்டன், ஏப். 23

இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெண், ஒரே பிரசவத்தில் இரு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இது போன்று உலகில் நடப்பது இதுவே முதல் முறை. அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனைச் சேர்ந்தவர் ஸ்டெப்பானியா டிமேயோ (வயது - 29). இவருக்கு இதயத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டமையால், 2008ஆம் ஆண்டு மாற்று இதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து டாக்டர்கள் அவரிடம் குறைந்தது ஓராண்டிற்காவது கர்ப்பம் தரிக்காமல் கவனமாக இருக்க வேண்டும் என்ற கடும் நிபந்தனை விதித்தனர். இருப்பினும், டாக்டர்களின் நிபந்தனைகளைப் புறந்தள்ளி விட்டு அவர் அடுத்த சில மாதங்களிலேயே கர்ப்பிணியா னார்.

அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் மாற் றிப் பொருத்தப்பட்ட இதயம் விரைவில் செயலிழந்து விடும் என்று அஞ்சினர். ஆனால், டாக்டர்களின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கி விட்டுத் தன் வயிற்றில் வளரும் சிசுக்களைக் கண்ணும் கருத் துமாக ஸ்டெப் பானியோ டிமேயோ வளர்த்து வந்தார்.

இதற்கிடையே அவரது வயிற்றில் வளர்ந்து வந்த சிசுக் களுக்கு டவுண் சின்ட்ரோம் என்ற நோய் தாக்கியிருக் கலாம் என டாக்டர்கள் சந்தேகித்தனர். ஆனால், அவற்றை எல்லாம் கண்டு கொள் ளாமல் அப் பெண் தன் குழந்தைகளைப் பிரசவிக்கத் தயாரானார். தன் வயிற்றில் வளரும் குழந் தைகளுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என்று அப் பெண் நம்பினார்.

இறுதியில் அவரது நம்பிக்கை வென்றது. சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம், இரு பெண் குழந்தைகளை அவர் பெற்றெடுத்தார். அக்குழந்தைகள் இரண்டும் ஆரோக்கியமாக இருக்கின்றன. அக்குழந்தைகளுக்கு அவர், மெலானியா, நடாலியா என்று பெயரிட்டுக் கொஞ்சி மகிழ்ந்து வருகிறார்.

இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் ஓராண்டுக்குள்ளாகக் கர்ப்பம் தரிப்பதையோ, பிரசவிப்பதையோ டாக்டர்கள் அனுமதிப்பதில்லை. இது மிகவும் அபாயகரமானது. உயிருக்கே ஆபத்தானது என்பதால், டாக்டர்கள் அதற்கு அனுமதிப்பதில்லை. ஆனால், இவற்றை எல்லாம் கடந்து நவீன மருத்துவ முறைக்கு சவால் விடும் இத்தகைய பிரசவம் உலகில் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரி. நாடாளுமன்றத் தேர்தலில் 89 ஆசிய நாட்டவர்கள் போட்டி

லண்டன், ஏப். 23

பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 89 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் 30 பேர் கன்சர்வேடிவ் கட்சி சார்பில் போட்டியிடுகின்றனர். இந்தத் தேர்தல் அடுத்த மாதம் (மே) மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் இங்கு குடியேறியுள்ள இந்தியர்களும் பெரும் அளவில் போட்டியிடுகிறார்கள்.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 58 பேர் போட்டியிட்டனர். அவர்களில் 15 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


COMPUTER MAGA SALE

2010 ஏப்ரல் 24, 25, 26 ஆம் திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரியில்
10,000/= ரூபாவில் இருந்து
கணனியைப் பெற்றுக்கொள்ளலாம்.
அரச உத்தியோகத்தர், மாணவர்களுக்கு
விசேட விலைக்கழிவு.
மேலதிக தொடர்பு:
0718570609, 0715680707



ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English பயிற்சி மையம்
An ISO 9001:2000 Certified Company
veta
Experts in English Training
April 24



Come, let's speak fluent English
Batch I - Sat,Sun 9.30 a.m.
Batch II - Sat,Sun 3.30 p.m.
Batch III - Mon,Wed,Fri 9.30 a.m.
Batch IV - Mon,Wed,Fri 5.00 p.m.
நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.
DMI COMPUTER EDUCATION
No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403



Barnabas இன் மலிவு விற்பனை
247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
5 வருட உத்தரவாதம்
★ 40 % Special Offer, 40% கழிவுடன்...
★14" Wega Sony, 21" Wega Sony, 29" Wega Sony மற்றும் G 21 T.V. கள்
★DVD Player, Amp, Box, Dish Antenna, Home தியேட்டர் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மிகக்குறைந்த விலையில்
Life Time Free Service
பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0217900728, 0777448668
மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
0217901574, 0777448668.



தவறிவிட்டது

கட்டப்பிராயைச் சேர்ந்த மோ.லிங்கேஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (773403805V), வங்கிப் புத்தகம், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் ஆகியவை அடங்கிய பை (பேர்ஸ்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 0779003158, 0779749345


## மரண அறிவித்தல்

### திருமதி சிவப்பிரகாசம் விசாலாட்சி

மணல் வளவு, அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் விசாலாட்சி 21.04.2010 புதன்கிழமை கனடா நேரப்படி மாலை 5 மணிக்கு இறைபதமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.04.2010) சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: 0014163213191
0014166092832
0112559363
0213216632

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை மஹிந்த அரசுக்குக் கிட்டுவது உறுதி

மிகப் பலமான ஆளுங்கட்சி, மிகவும் பலவீனமான எதிர்க்கட்சி - என்ற நிலையில் புதிய அரசின் நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

புதிய நாடாளுமன்றின் கன்னி அமர்வில் புதிய சபாநாயகர் தெரிவாகிவிட்டார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரே புதிய சபாநாயகர்.

இதன்மூலம் நாடாளுமன்றின் அன்றாட நிர்வாகக் கட்டுப்பாடுகளும் ராஜபக்ஷ குடும்பத்தின் பிடிக்குள் அழுத்தமாக வீழ்ந்துவிட்டன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் தவறிழைக்கும்போது - அல்லது நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் இழைக்கும்போது - அதற்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ள ஒரே வாய்ப்பு அவருக்கு எதிராக நாடாளுமன்றம் ஊடாக குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதேயாகும். ஜனாதிபதி பிரேமதாஸா பதவியிலிருந்தபோது அத்தகைய முயற்சி ஒன்று அவருக்கு எதிராகக் கிளம்பிய காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி போன்றோரால் கொண்டுவரப்பட்டமை நினைவுகூரத்தக்கது. ஜனநாயகக் கட்டமைப்பில் ஒழுங்கான - நீதி முறையான - ஆட்சி முறைமையை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளுள் குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான வாய்ப்பும் முக்கியமானதாகும். ஜனநாயக மாண்புகளில் அந்த வசதியும் குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தச் செயன்முறையை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்ற வேண்டிய - நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்திருக்க வேண்டிய - பொறுப்பு சபாநாயகருடையதாகும். அந்தப் பதவியும் இப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் மூத்த சகோதரர் வசமாகிவிட்டது.

இனி என்ன? இப்போதே கொடிகட்டிப் பறக்கும் 'ராஜபக்ஷ அண்ட் கோ'வின் குடும்ப ஆட்சி இனி கோபுர உச்சிக்கு உயரப் போகின்றது. தனது கைப்பிடியில் பலமான நாடாளுமன்றம் - சபாநாயகரும், முக்கிய அமைச்சர்களும் தமது சகோதரர்கள் - பாதுகாப்பு அமைச்சு தமது மற்றொரு சகோதரரின் முழுக் கட்டுப்பாட்டில் - என்ற இத்யாதி ரத,கஜ, துரக பதாதிகளோடு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி இலங்கைத் தீவை ஆட்டிப்படைக்கப்போகின்றது.

இத்தனை வலுவான ஆளும் தரப்புக்கு எதிராகத் தப்பிப் பிழைத்திருக்கும் எதிர்த்தரப்போ மிகப் பலவீனமானதாக உள்ளது. அந்தப் பலவீனத்துக்கு மத்தியில் இருக்கும் கொஞ்ச நஞ்சப் பலம் கூட ஆரம்பத்திலேயே சிதறிவிடும் போலத் தோற்றுகின்றது.

ஐ.தே.முன்னணியின் கயிற்றைப் பற்றி ஏறி எப்படியாயினும் எம்.பியாக வேண்டும் என்று துடியாய்த் துடித்த தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் திகாம்பரம், எதிர்பார்த்தபடி தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டார். எம்.பியான முதல்நாளே - இவ்வளவு சீக்கிரத்திலேயே - அவரது 'அந்தர் பல்டி'யைப் பலரும் எதிர்பார்க்கவில்லைத்தான். ஆனால் கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக 'ஆயாராம், காயாராம்' பாணியில் ஊசலாடி, அணி மாறிக்கொண்டிருந்த அவர், இப்படித்தான் நடப்பார் என ஊகிப்பது யாருக்கும் கஷ்டமானதாக இருந்திருக்க மாட்டாது.

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, நாடாளுமன்றத்துக்கு வந்த அவர், வந்த முதல் நாளே அரசுப் பக்கம் போய் அமர்வது கஷ்டமானதுதான். அவரைச் சேர்க்க வேண்டிய கட்டாயமும் அரசுத் தரப்புக்கு இல்லைத்தான். ஆகவே, இப்போதைக்கு 'தனித்துச் செயற்படல்' என்ற கயிறை அவர் விடுத்திருக்கின்றார். அந்தக் கயிறு 'அரசுப் பக்கம் பாய்வதாக' விரைவில் உருமாறும் என நம்பலாம்.

இதேசமயம், மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் முரண்டு பிடித்துக்கொண்டு கடும் எதிர்ப்பைக் காட்டி வருகின்றது. இதனால் அக்கட்சியின் சார்பில் கொழும்பில் ஐ.தே.முன்னணியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய - மனோகணேசனின் சகோதரரான - பிரபா கணேசனும் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து வெளியேறும் நிலைமை கருக்கட்டி வருகின்றது.

இதேவேளை, மொனறாகலை மாவட்ட வேட்பாளர் பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் அந்த மாவட்டத்திலிருந்து ஐ.தே. முன்னணியில் தெரிவுசெய்யப்பட்ட ரஞ்சித் மத்துமபண்டார, தமது கட்சியோடு முரண்பட்டிருக்கின்றார். தமது கட்சியின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு எதிராக அவர் நீதிமன்றத்தில் வழக்குக் கூடத் தாக்கல் செய்துள்ளார். எனவே அவரும் எந்நேரத்திலும் அணிமாறும் சூழ்நிலை காணப்படுகின்றது.

தவிரவும், எதிரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான ஓரிரு எம்.பிக்கள் குறித்தும் அரசில் புரசலாக சில செய்திகள் கசியத் தொடங்கியிருக்கின்றன. கடந்த ஞாயிறன்று கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்றக் குழு திருகோணமலையில் முதல் தடவையாகக் கூடிய போது வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பிக்கள் இருவர் அரசுத் தரப்புடன் சேர்ந்து செயற்படவேண்டும் என்று அளவுக்கு அதிகமாக வலியுறுத்திப்பேசினர் என்றும் கூறப்படுகின்றது. அவர்களின் உள்நோக்கம் விளங்காத போதிலும், எதிர்ப்பு அரசியலில் - எதிரணி அரசியலில் - அவர்கள் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க மாட்டார்கள் என்பது தெளிவாகின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, மஹிந்த அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை சுலபமாக - மிகச் சுலபமாக - மிக விரைவில் - கிட்டிவிடும் என்பது ஓரளவுக்கு உறுதியாகி வருகின்றது.

### குறிப்பிட்ட காலத்துக்கு சேவை புரிந்த

# யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் விரைவில் வன்னிப் பகுதிக்கு இடமாற்றம் பெறுவர்

அச்சுவேலி,ஏப்.23

யாழ்.மாவட்டத்தில் குறிப்பிட்ட காலத்துக்குமேல் சேவை புரிந்த 45 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்களில் பொருத்தமான சேவை நிபந்தனையை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களின் விவரங்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் திரட்டப்படுகின்றது. இவர்கள் வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள பாடசாலைகளுக்கு எதிர்காலத்தில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தகவல் தெரிவிக்கையில், வெளிமாவட்டத்தில் தொடர்ச்சியாக 5வருட சேவையை நிறைவு செய்தவர்கள் ஆசிரியர் இடமாற்றுக் கொள்கைக்கு அமைய இடமாற்றம் பெறுவதற்கு தகைமை பெறுகின்றனர். இந்த வகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட வன்னிப் பெருநிலப்பரப்பில் சேவை செய்த ஆசிரியர்களின் கணிசமான எண்ணிக்கையினர் 5வருடங்களுக்கு மேல், 20 வருடங்கள் வரை சேவை புரிந்தவர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்கு இடமாற்றம் வழங்கும் அதே நேரத்தில் இந்த ஆசிரியர்கள் பணிபுரிந்த இடங்களுக்கு யாழ். மாவட்டத்தில் கடமைபுரியும் ஆசிரியர்களில் பொருத்தமான ஐந்து வகையான சேவை நிபந்தனையைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்களில் இருந்து நிரப்பவேண்டியதேவைஏற்பட்டுள்ளது.

* வெளிமாவட்ட சேவை இன்றி தொடர்ச்சியாக யாழ்.மாவட்டத்தில் சேவை புரிபவர்கள்.
* தமது சேவைக் காலத்தில் கஷ்ட பிரதேச சேவையைப் பூர்த்தி செய்யாதவர்கள்.
* 45வயதுக்கு உட்பட்டவர்கள்.
* வெளிமாவட்டத்தில் கஷ்டப் பிரதேச சேவையைப் பூர்த்தி செய்தவர்கள்.
* மோசமான நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகாதவர்கள் இத்தகைய ஆசிரியர்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து பொருத்தமான ஆசிரியர்களை வன்னிப் பெருநிலப்பரப்பில் கடமை புரிவதற்கு ஏற்பாடுகள் செய்த பின்னர் அங்கு குறிப்பிட்ட காலம் சேவையை நிறைவு செய்தவர்களுக்கு இடமாற்றம் விரும்பிய இடங்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஓ-11)

# கிளிநொச்சி ரயில் பாதையின் இரு மருங்கிலும் வியாபார நிலையங்களை அமைப்பதற்குத் தடை

### கரைச்சி பிரதேச சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22

கிளிநொச்சி ரயில் பாதையில் இரு மருங்கிலும் வியாபார நிலையங்கள், கடைகள் போன்றவற்றை அமைக்க வேண்டாம் என சம்பந்தப்பட்டோருக்கு கரைச்சிப் பிரதேச சபை அறிவுறுத்தியுள்ளது.

மீள்குடியேற்றம் கிளிநொச்சிப் பகுதியில் துரிதமாக நடைபெற்று வரும் இவ்வேளையில் கிளிநொச்சி ரயில் நிலையத்தின் வடக்கு - தெற்குப் பக்கமாக ரயில் பாதையின் இரு மருங்கிலும் வியாபார நிலையங்கள் கடைகள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வருகின்றன. இதனையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் வெ.குலேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவுக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் ரயில் பாதை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுவருவதால், அமைக்கப்படும் வியாபார நிலையங்கள் கடைகளினால் பெரும் இடைஞ்சல்கள், தடைகள் ஏற்படும் என்பதைக் கருத்திற் கொண்டே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. (50-236)

### தனியார் வைத்திய நிலையங்களில்

# குழந்தைநல வைத்திய நிபுணரின்மையால் சிகிச்சைபெறமுடியாது சிறுவர்கள் அவதி!

யாழ்ப்பாணம்,ஏப்.23

தனியார் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் குழந்தைகளுக்கான மருத்துவ நிபுணர்கள் இல்லாததினால் தமது குழந்தைகளுக்குரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கு பல பொதுமக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி வந்த ஒரேயொரு குழந்தை வைத்திய நிபுணர் அண்மையில் விடுமுறையில் வெளியூர் சென்றுள்ளார்.

எனவே தற்போது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் குழந்தைகளுக்கான வைத்திய நிபுணர்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குழந்தைகளுக்குரிய நோய்களுக்கு சிகிச்சையைப் பெறமுடியாது மக்கள் அல்லற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

# வீதியோரத்தில் நிற்கும் மரங்களை வெட்டவோ, அழிக்கவோ வேண்டாம்

### பொதுமக்களுக்கு பிரதேச சபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.23

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள வீதிகளில் இரு மருங்கிலும் நிற்கும் மரங்கள் எதனையும் வெட்டவோ, அழிக்கவோ வேண்டாம் என கரைச்சிப் பிரதேச சபை மீள்குடியேறியுள்ள மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மிகத் துரிதமாக கிளிநொச்சிப் பகுதியில் மீள்குடியேறி வருவதையடுத்து அவர்களால் குடிசைகள் கட்டவும் ஏனைய தேவைகளுக்குமாக கண்டபடி வீதி ஓரங்களில் நிற்கும் மரங்கள் வெட்டி அழிக்கப்படுகின்றன.

கடந்த கால யுத்தத்தினால் கிளிநொச்சிப் பகுதியில் பெருமளவு மரங்கள் அழிந்துள்ளன. மரவளத்தைப் பாதுகாக்கவே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்படுவதாக கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் வெ.குலேந்திரன் தெரிவித்தார்.

இந்த அறிவுறுத்தல்களை மீறி வீதியோரங்களில் உள்ள மரங்களை வெட்டுவோர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (50-236)

# காணி உறுதி வழங்கப்படாமையால் வீட்டுத் திட்டத்தை இழந்த குடும்பங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ பகுதியில் தமது காணிகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் சில காணி உறுதி இல்லாமையால் வீட்டுத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினரால் அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.


அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 40இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு காணி உறுதி இல்லை என்பதால் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை எனச் சம்பந்தப்பட்டோர் தெரிவித்தனர்.

1985ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தின் போது இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியிருந்த இந்தக் குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவினர் காணியினைக் கொள்வனவு செய்து வழங்கியதாகவும் இந்தக் காணிகளுக்கு இதுவரை உறுதி வழங்கப்படாமையால் வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (50-236)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 11 | 24.04.2010 |
| | சனிக்கிழமை |
| திதி : | ஏகாதசி |
| | பி.இ.2.01 வரை |
| நட்சத்திரம் : | மகம் |
| | மு.ப.10.28 வரை |
| சுபநேரம் : | 03.00 -04.30வரை |
| ராகுகாலம் : | 09.00-10.30 வரை |

# கருவாடா? கண்காட்சியா? இருநாள்களாக நாறிய நாய்!



யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.நகரில் அதிகரித்துள்ள வாகன நெரிசலில் சிக்குண்டு பலியான நாயின் உடல் ஒன்று இரண்டு நாள்களாக அகற்றப்படாமல் கருவாடு போடப்பட்டதைப் போல் முற்றவெளி தனியார் பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாகக் காணப்பட்டது.

தற்போதைய கடும் வெப்பத்தினால் நாயின் உடல் பழுதடைந்து துர்நாற்றம் வீசியது. இதனால் மக்கள் மூக்கைப் பொத்தியபடியே இப்பகுதியூடாகச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

இறந்த நாயின் உடலை அப்பகுதியில் நின்றவர்கள் உடனேயே அகற்றியிருந்திருந்தால் கண்காட்சிக்கு வைக்கப்பட்டதைப் போல் நாயின் சடலத்தால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதைத் தடுப்பதோடு பொதுமக்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களையும் தவிர்த்திருக்கலாம் எனப் பலர் விசனமுணுத்தனர்.

இதேவேளை, இரண்டு நாள்களாக நாற்றமடிக்கும் நாயின் சடலத்தை அகற்ற மாநகர் சபையும் எவ்வித அக்கறையும் காட்டாமை குறித்தும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கடமைக் கொடுப்பனவு

பொதுத் தேர்தல் 2010, தேர்தல் பணிகளில் ஈடுபட்ட தென்மராட்சி கல்விவலய உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைக் கொடுப்பனவுக்கான உறுதிச்சீட்டை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக வலயக் கல்வி அலுவலக நிதிப்பிரிவில் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)


## தேவை

★ தாதிப்பயிலுனர்
★ மருந்தாளர்.
★ கணக்குப் பதிவாளர்.
★ காது கேட்கும் கருவி பொருத்துநர் (இவர்களுக்கான பயிற்சி இந்தியாவிலும்,கொழும்பிலும் அளிக்கப்படும். இதற்கான அனைத்துச் செலவுகளும் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்)

நாளை (24.04.2010) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

(சி/567133)

**நியூ யாழ்.வைத்தியசாலை,**
இல.315, பலாலிவீதி, திருநெல்வேலி.



## காணி விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் ஆலயத்துக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 0771390328**

## வீடு வாடகைக்கு தேவை

ஐந்துபேர் அடங்கிய குடும்பத்திற்கு குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய்,உடுவில் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.
**தொடர்புகளுக்கு. 0772299900**


## தவறவிடப்பட்டுள்ளது

21.04.2010அன்று சபாபதிப்பிள்ளை சிவகாந்தன் அவர்களது NPGD 5531 இலக்க மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் சேர்பொன் இராமநாதன் வீதிக்கும் பலாலி வீதி திருநெல்வேலி சந்திக்கிடையிலோ தவறியுள்ளன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் திரு.சி.தங்கேஸ் வரன், 316, கே.கே.எஸ் வீதி, கௌரி அழகு மாடம் என்பவரிடம் ஒப்படைக்கவும்.

**தொ.பே.இல.0779919506**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியை திருமதி மீனலோஜினி உதயகுமாரன் அவர்களது பாசமிகு மாமியார்

திருமதி **இராசம்மா செல்லத்துரை**

அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. (567429)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி நிர்மலா சுதர்ஸன் அவர்களின் அன்புத் தந்தையார்

**புண்ணியமூர்த்தி துரைசிங்கம்**

அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி. (97333)

## மரண அறிவித்தல்கள்

### ஆனந்தம் வசந்தன் (கண்ணன்)



உசனைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தம் வசந்தன் 21.04.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் உசனைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆனந்தம்- நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மீசாலையைச் சேர்ந்த இரத்தினசிங்கம்- அரியேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் ராஜினியின் அன்புக் கணவரும் நிலக்ஷன், நிலக்ஷி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தி, முகுந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜலிங்கம் (கிராம உத்தியோகத்தர்), டொறிஸ்காமினி(ஜேர்மனி), சகீலன்( சுவிஸ்), கோகுலன்(அபிஷா ரெக்ஸ்), ஜிவாஜினி (பிரான்ஸ்), பகீரதி(கனடா), சுகல்யா ஆகியோரின் அன்பு மைத்துனரும் மயூரன், மாதங்கி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டெனீஷன், லேனி( ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. இராஜலிங்கம்(மைத்துனர்)
கிராம உத்தியோகத்தர், மாசேரி.
021 321 7340, 0776183152

உசன்,
மிருசுவில். (97326)

### திருமதி மார்க்கண்டு சின்னாச்சி



பெரியடைப்பு, யார்க்கரு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு சின்னாச்சி நேற்று (22.04.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் வேலக்களி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(மு.கனகசபை-மருமகன்)

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (சி/567135)

### திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி (விசாலாட்சி ரீச்சர்)

(ஓய்வுபெற்ற உபஅதிபர், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)



பழையவீதி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், சிவன் வீதி, ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி (விசாலாட்சி ரீச்சர், ஓய்வுபெற்ற உப அதிபர், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) நேற்று (22.04.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை கந்தசாமியின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் லோகாம்பாள் (ஆசிரியர், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ஜெகதாம்பாள் (ஆசிரியர், யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்), பாலாம்பாள், முருகதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஈஸ்வரதேவன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி வலயம்), நவலோகநாதன் (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி, அச்சுவேலி), அமரர் ராசன், தாரணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோபிதன், பிருந்தன், ஸ்ரீஜெனா, யதுர்ஷன், சுவேதா, வினுஷன், இலக்ஷி (முகாமைத்துவ உதவியாளர், வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்), சசிக்கா, சஞ்சிதன், டயானா, டிலக்ஷி (லண்டன்), கோபிஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தங்கம்மா (கனடா), சுப்பிரமணியம் (கனடா), இராசம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்ஆவரங்கால் கரதடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவன் வீதி, ஆவரங்கால்.
தொ.பே: 0213212914 (97336)


The President and Members of the Executive Committee of the

**Jaffna Science Association**

have pleasure in inviting

**presidential Address on the beauty and magic of numbers**

by:

**Dr.S.Srisatkunarajah**

B.Sc (Jaffna) Dip.in Ed.(OUSL),PhD (Heriot-Watt), Department of Mathematics and Statistics,University of Jaffna.

**on**

**23.April 2010at 14.30hrs at the library Auditorium, University of Jaffna.**

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் மேற்படி நிகழ்விற்கு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினர். (97332)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் செல்லையா

(இளைப்பாறிய ஆய்வுகூட உதவியாளர், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)



பழைய வீதி, கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லையா (இளைப்பாறிய ஆய்வு கூட உதவியாளர், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) நேற்று (22.04.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசகாரி - மாணிக்கம் தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரஜிதா (ஆசிரியை, யா/காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), காலஞ்சென்ற சசிக்குமார் மற்றும் சுதாகர் (விற்பனைப் பிரதிநிதி, டயாணா பிஸ்கட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பூமணி (மலேசியா), மகேஸ்வரி (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனேஷ்குமாரின் (அதிபர், யா/சின்னமடு றோ.க.வித்தி- வேலணை) அன்பு மாமனும், ஆருத்திரன், ஆரமுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (சி/567140)

தகவல்:
செ. சுதாகர் (மகன்)

## இலக்கிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.
ஏப்.23

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இலக்கிய கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஜும்மாப்பள்ளி வாசல் வீதியிலுள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் (எம்.ஆர்.ரி.சி) நடை பெறவுள்ளது.

கருத்துரையை 'இலக்கியத்தில் பாடுபொருள்' என்ற தலைப்பில் கலாநிதி. சி.சிவசேகரம் நிகழ்த்தவுள்ளார்.

இந்தக் கருத்தரங்கைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும். இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் [illegible]. (ஒ-10)


**இலங்கை மாணவர்கள் இந்தியாவில் உயர் கல்வி கற்பதற்கான ஓர் அரியவாய்ப்பு.**

சேவாலங்கா உயர் கல்வி நிறுவனமும் பெங்களூர், ரஜீவ்காந்தி, விஸ்வேஸ்வராய, பாரதியார் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இலங்கை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெற முடியாத மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கான ஓர் அரியவாய்ப்பை வழங்குகிறது. பாடநெறிகள் பின்வருமாறு.

**UNDERGRADUATE COURSES**

- Bachelor of Physiotherapy
- Bachelor of Computer Application
- B.Sc-Nursing
- B.Sc-Biotechnology
- B.Sc-MLT
- B.Sc-Biochemistry
- B.Sc - Fashion & Apparel Design
- B.Sc-Genetics
- B.Sc-Micro biology
- B.Sc-Computer Science
- BDS- Dental Science.
- BBM- Business management
- BHA- Hospital Administration
- B.Com
- B.Pharma (Pharmacy)
- B.E(Computer Science &Engineering)
- B.E(Electronics and Communication)
- B.E(Civil Engineering)
- B.E(Mechanical Engineering)
- B.E(Information Science &Engineering)
- B.A-Journalism, Psychology, English, Law, tourism, History,
- BHM-Hotel Management

**DIPLOMA COURSES**

- Diploma in general Nursing and midwifery ,Pharmacy ,Electronics & Communication, Electrical & Electronic, Mechanical, Computer science, Civil, Architecture, Information Technology, Hotel management, X-Ray Technician's & Hospital management

**Post Graduate Courses**

- MBA
- M.Sc-Computer science, Electronics & communication, Mathematics, Physics, Chemistry (Bio & Organic), Microbiology, Bio technology, Genetics, Food Processing, Apparel Technology & Management, Nursing
- M.Com
- MBA
- M.Pharmacy
- M.A
- Master of Physiotherapy
- Master of Tourism Administration
- Master of Social Work

விண்ணப்பங்கள் கல்விசார் விவரக் கொத்துகள் சேவாலங்கா மாவட்டகாரியாலயத்திலும் மற்றும் சேவாலங்கா உயர் கல்வி நிறுவனத்திலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 15/05/2010 ஆகும். விண்பதாரிகள் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சேவாலங்கா உயர் கல்வி நிறுவனம்
சேவாலங்கா மன்றம்
216/1, தெகிவளை வீதி,
மகரகம.
Tel:- 0113166334/0113166335
Fax:- 0112850622
E mail:-anavaloga22@gmail.com

54/2 சேவாஇல்லம்,
பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
Tel:- 0217451760/0217451761
E mail:- jaffna@sewalanka.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் திருடர்களின் அட்டகாசம் குடாநாடு பூராவும் விழிப்புக் குழுக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.குடாநாட்டில் கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் இரவு வேளைகளில் திருடர்களின் கைவரிசை தினமும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

இந்தத் திருடர்களின் அட்டகாசத்தால் மக்கள் இரவுப் பொழுதை பீதியுடனேயே கழித்து வருகின்றனர்.

திருடர்களின் கட்டுமீறிய செயலைத் தடுக்கும் முகமாக கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கு பொது நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிராமங்கள் தோறும் அமைக்கப்படும் இந்த விழிப்புக் குழுக்கள் இரவில் தமது காவல் கடமைகளை முறையாக மேற்கொள்வதற்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இதேசமயம் குடாநாட்டில் ஏற்கனவே சில இடங்களில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவை சிறப்பான முறையில் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(04-224)

# 'தைரொயிட்' நோயாளர்களுக்கான இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

'அபொட்' நிறுவனம் லாவா வைத்திய சாலையுடன் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தைரொயிட் நோய்க்கான இலவச இரத்தப் பரிசோதனையும் இடம்பெறும்.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் ஆலோசனை வழங்கப்படும் இந்த மருத்துவமுகாமில் தொண்டையில் வீக்கம், அதிகரித்த உடல்பருமன், மறதி, உடல் சோர்வு, மாதவிடாய் ஒழுங்கீனம், மலச்சிக்கல் சம்பந்தமான உபாதைகள், அதிகரித்த நித்திரை ஆகிய அறிகுறிகள் உள்ளவர்களை இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

# குடாநாட்டில் பெற்றோலின் விலையைக் குறைக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை

வலி.வடக்கு,ஏப்.23

யாழ்.குடாநாட்டில் பெற்றோலின் விலையைக் குறைக்க நடவடிக்கை யெடுக்க வேண்டும் என நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெற்றோலின் விலை யாழ் குடாநாட்டில் ஏனைய மாவடங்களிலும் பார்க்கக் கூடிய விலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பெற்றோல் 110 ரூபாவில் இருந்து 110.50 வரையே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

கொழும்பிலிருந்து தூர இடத்தில் உள்ள மாவட்டங்களில் 50 சதம் போக்குவரத்துக் கட்டணமாக வைத்து விற்பனை செய்யப்படுகின்றது.

கிளிநொச்சியிலும் கூட 50சதம் மட்டுமே அதிகரித்த விலையில் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் யாழ்.மாவட்டத்தில் நிர்ணய விலையை விட 4 ரூபா அதிகரித்த விலையில் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த விலை அதிகரிப்பைக் குறைத்து ஏனைய மாவட்டங்களில் உள்ளதைப் போன்று நியாய விலையில் பொற்றோலை விற்பனை செய்யும்படி குறித்த அமைப்பின் செயலாளர் சு.பரமநாதன் அனுப்பிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(04-86)




# இன்னும் வீதிகளை நிறைத்தபடி தொங்கும் தேர்தல் காலப் பதாகைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிவடைந்து கிட்டத்தட்ட இரு வாரங்களாகியும் கூட தேர்தலுக்காக கட்சிகளால் வீதியோரங்களில் அமைக்கப்பட்ட பாரிய பதாகைகள் இன்றுவரை அகற்றப்படாத நிலையில் உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

பலவித வர்ணங்களில் அமைக்கப்பட்டுள்ள இத்தகைய பதாகைகள் பயணிப்போரின் கவனக் கலைப்பான்களாக மாறி விபத்துக்கள் இடம்பெறவும் வழிவகுக்கின்றன என்று பொதுமக்கள் தரப்பிலிருந்து சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே மாநகரசபையினர் உடன் நடவடிக்கை எடுத்து குறித்த தேர்தல் பதாகைகளை அகற்றி மக்களின் இடையூறினைக் களைய வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(04-300)



கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் விநாயகன் மாணிக்கத்தின் மணி விழாவும் சேவை நலன் பாராட்டும் நிகழ்வு பிரதி அதிபர் செ.உதயகுமார் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கல்லூரி அதிபருக்குப் பொன்னாடை போர்துக் கௌரவிப்பதையும் பாடசாலை மாணவர்கள் வாழ்த்துப்பா வழங்குவதையும் மாணிக்கஜோதி மணிவிழா மலரை பிரதி அதிபர் வெளியிடுவதையும் முதல் மூன்று படங்களில் காணலாம்.

யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜலிங்கம், நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி சி.மாணிக்கராசா, கோப்பாய் ஆசிரிய பீயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களிலும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்:ரட்ணம்)

# இரவில் இருளாகும் இராஜவீதி; விழுந்தெழும்பும் பயணிகள்!

யாழ்ப்பாணம்,ஏப்.22

கோப்பாய் இராஜ வீதிக்கு மின்சார விளக்குகள் போடப்படாததினால் இரவு நேரத்தில் இப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்களின் எண்ணிக்கையும் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இரவில் இந்த வீதியில் இருள் சூழ்ந்து காணப்படுவதால் பாதசாரிகளும் பயணிகளும் போக்குவரத்துச் செய்வதில் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதனால் சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் பயணிப்போர் வீதிகளில் உள்ள குழிகளில் விழுந்து காயப்படும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(04-224)

# இரண்டு பவுசர்களில் வந்து சேர்ந்தது தார்

யாழ்ப்பாணம்,ஏப்.23

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இரண்டு பவுசர்களில் தார் எடுத்துவரப்பட்டுள்ளது.

பவுசர்களில் கொண்டுவரப்பட்ட இந்தத் தார் உடனடியாகவே வெற்று பரல்களில் நிரப்பப்பட்டது.

குடாநாட்டில் சேதப்பட்டிருக்கும் வீதிகளை இந்தத் தாரைக் கொண்டு சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கையிருப்பில் இருந்த தாரைக் கொண்டு வீதிகள் தார்கலவை மூலம் சீர்செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(04-224)

# கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு நியமனக் கடிதம் வழங்குவது ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்குவது பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை சனிக்கிழமை திருகோணமலையில் வைத்து வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த நியமனக் கடிதங்கள் வழங்குவது திடீரென மறுஅறிவித்தல் வரும் வரை பிற்போடப்பட்டுள்ளதாக வடமாகாணக் கூட்டுறவு ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நியமனக் கடிதங்களைப் பெறுவதற்காக ஏற்கனவே சிலர் திருகோணமலைக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நியமனக் கடிதங்களை வழங்கும் திகதி அறிவிக்கப்படவில்லை. (50-224)

# முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்துக்கு பகுதி நேரப் பிரதேச இணைப்பாளர்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ் மாவட்ட முன்பள்ளி ஆசிரிய ஒன்றியத்தால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட பகுதி நேரப் பிரதேச இணைப்பாளர்களின் விவரம் வருமாறு:

திருமதி ச.செல்வறஞ்சனா(வலி. வடக்கு), செல்வி சி.கார்த்திகாயினி( யாழ்ப்பாணம்), திருமதி வி.மாலதிதேவி(நல்லூர்), திருமதி இ.தவலட்சுமிதேவி(வடமராட்சி வடக்கு), திருமதி சு.சுதாஜினிதேவி(வடதெற்கு மேற்கு), திருமதி பி.விசாகினி( வலி கிழக்கு), திருமதி யோ.பாரதி( ஊர்காவற்றுறை), திருமதி செ. இராசவதனி( தென்மராட்சி),

திருமதி அ.அனுஷா( வலி.மேற்கு), செல்வி அ.புஸ்பராணி(காரைநகர்), திருமதி சி.குணலட்சுமி( வடமராட்சி கிழக்கு), செல்வி க.லோஜினி(வலி. தெற்கு), திருமதி ச.சர்மிளா ( வடமராட்சி கிழக்கு), திருமதி கா. சந்திரவதனி( வலி. தென்மேற்கு), திருமதி உ.பூமணி(வலி.தென்மேற்கு), செல்வி அ.ஜெகமலர்( வேலணை), திருமதி சு.புஸ்பராணி( தென்மராட்சி), திருமதி தே.வசந்தசகாயராணி (நெடுந்தீவு).


(50-201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை தம்பிமுத்து செல்வரத்தினம் (அர்ச்சுனா)

(முன்னாள் கிராம சேவையாளர், நீர்வேலி மேற்கு )



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து செல்வரத்தினம் (21.04.2010) புதன் கிழமை லண்டனில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லம்மா (சங்கானை) தம்பதியரின் ஆசை மருமகனும் ஜெயலக்சுமி அம்மாவின் (லண்டன்) அருமைக் கணவரும் சுபேஷ்குமார் (லண்டன்), சுவர்ணலதா (லண்டன்), ரமேஷ்குமார் (கனடா), சுபத்திரன் (லண்டன்), நந்தகுமார் (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்), செல்வகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பராசக்தி, சுரேஷ், ஜெயந்தி, குணாளன், சொரூபகாந்தி, துளசிபவானி ஆகியோரின் மாமனும் விதுரன், பிருந்தன், சாயி, சாரா, சயித், ஜெனனி, ஜெசினா, ஜெசிகா, டிலானி, டிலோஜி, தனுசு, அஞ்சலி, நவீன், பிருத்திகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, ஆனந்தவேல் மற்றும் சோதிலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ருக்மணி, இராசேஸ்வரி, கனகரத்தினம் அம்மா (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பிமுத்து சோதிலிங்கம்
(சமாதான நீதவான் - சகோதரர்)
தொ.பே: 021 321 3443

தொ.பே:(லண்டன்), 2085500504. (97321)

## கணபதிப்பிள்ளை அருளம்பலம்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு நாமகள் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அருளம்பலம் நேற்று (22.04.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள கணபதிப்பிள்ளை - சின்னா[illegible] பிள்ளை தம்பதியரின் அன்பு ம[illegible] காலஞ் சென்றவர்களான சுப்[illegible]யம்- சரஸ்வதியின் மருமகனும் கமலாதேவியின் அ[illegible]புக் கணவரும் காலஞ்சென்ற ஞானம்மா மற்றும் நாகரத்தினம் (பாக்கியம்), மகேஸ்வரி (முத்து) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவானந்தி (யாழ். மாநகரசபை), உருத்திரானந்தன் (கொழும்பு மாநகரசபை) ஆகி யோரின் பாசமிகு தந்தையாரும் காசிலிங்கம் (உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம், வடக்கு வலயம், யாழ்ப்பாணம்) அனுஷா ஆகியோரின் மாமனாரும் கஜானன், கஜனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்-உருத்திரானந்தன்
மருமகன்-காசிலிங்கம்.
தொ.பே:0213007075

நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (97309)

## அப்புத்துரை செல்வநாயகம்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை செல்வநாயகம் (ஓய்வுபெற்ற உதவிப்பதிவாளர், காணிக்கந்தோர்) 21.04.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பன்னாலை சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சரஸ்வதி, சுந்தரலிங்கம் (M.L.T), பரமேஸ்வரி (ஜேர்மனி), இரட்ணகோபால் (லண்டன்), கமலாதேவி (ஜேர்மனி), வசந்தகுமாரி, தேவகுமாரன் (மக்கள் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உமாராணி (லண்டன்), உஷா (லண்டன்), கௌரி (ஆசிரியர், யாழ்/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை), தாரணி (ஜேர்மனி), சுகந்தினி (ஆசிரியர் யாழ்/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார், சண்முகேஸ்வரன், சயந்தராஜன், நித்தியானந்தன், மதியழகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பாடசாலை ஒழுங்கை,
தாவடி தெற்கு, கொக்குவில். (97317)

# ஆயுதப் போர் வெடிக்குமா, இல்லையா? ஈழத்திலுள்ள சூழ்நிலையே தீர்மானிக்கும்

## ஜூனியர் விகடன் செய்திக்கு உருத்திரகுமாரன் மறுப்புப் பதில்

கொழும்பு, ஏப். 23

எதிர்வரும் காலத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப்போராட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை என தான் தெரிவித்தார் என வெளிவந்துள்ள செய்திகளில் உண்மையில்லை - என்று நாடு கடந்த தமிழீழ அரசின் இணைப்பாளர் உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். இனி எங்கள் அகராதியில் ஆயுதமே இருக்காது என உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார் என இந்தியச் சஞ்சிகையான 'ஜூனியர் விகடனி'ல் வெளிவந்த நேர்காணல் தொடர்பில் உருத்திரகுமாரன் மேற்கண்டவாறு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

தாயகத்தில் ஆயுதப்போராட்டம் வெடிக்குமா, இல்லையா என்பதை அங்கு தோற்றுவிக்கப்படும் சூழ்நிலைகளே தீர்மானிக்கும். அதனை நாம் எதிர்வுகூறமுடியாது. ஆனால் அனைத்துலகத்தில் முன்னெடுக்கப்படும் எமது நடவடிக்கைகள் எந்த விதத்திலும் வன்முறைகளை கொண்டனவாக அமையாது.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு உரிய அரசியல் தீர்வை இலங்கை அரசு முன்வைக்காது விட்டால் அங்கு ஒரு ஆயுதப்போராட்டம் மீண்டும் வெடிக்கலாம் என மேற்குலக நாடுகள் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருவதையும் நாம் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும் - என்றார். (ர)

## விசேட தேவையுடைய இருவருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 23

தென்மராட்சிப் பிரதேசத்தை சேர்ந்த விசேட தேவையுடைய இருவருக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த இரத்தினம் கந்தராசா, மீசாலை தெற்கைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தசாமி ஆயோருக்கு மாதாந்தம் ரூபா 3 ஆயிரம் வீதம் வழக்குவதற்கு சமூக சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி இருவரும் தமது கொடுப்பனவினைப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். கடந்த வருடம் முதல் பிரதேசத்தைச் சேர்ந்த 5 பேருக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (04-207)

## தேர்தல் கொடுப்பனவு

யாழ்ப்பாணம் ஏப் 23

ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் கடமைபுரிந்த யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் வைத்திய சாலைகளில் சேவைபுரிபவர்களுக்கான ஜனாதிபதித் தேர்தல் கடமைக் கொடுப்பனவுகள் தற்போது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இக்கொடுப்பனவு[illegible] யாவும் சம்பந்தப்பட்ட ஊழியர்க[illegible]ாகக் கொடுப்பனவாக வழங்கப்[illegible]வதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவை க[illegible]ளர் அலுவலகம் தெரிவித்து[illegible] (04-300)

## கரைச்சிப் பிரதேச சபையில் பணியாற்றியோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம் ஏப் 23

கரைச்சிப் பிரதேச சபையால் ஒப்பந்த, நாளாந்த சமயாசமய அடிப்படையில் பணியாற்றிய ஊழியர்கள் அனைவரும் தாமதமின்றி பிரதேச சபையில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்தம், இடப்பெயர்வுக்கு முன்னர், சபையிலும் இடப்பெயர்விற்குப் பின்னர் நலன்புரி நிலையங்களிலும் பணியாற்றிய ஊழியர்கள் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேசசபைச் செயலாளர் வெ.குலேந்திரன் தெரிவித்துள்ளார். ( 50-236)

## பாவனைக்கு உதவாத கோதுமை மா விற்பனை

ஊர்காவற்றுறை,ஏப்,23

ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பழுதடைந்த கோதுமைமா விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

ஒருவித மஞ்சள் பழுப்பு நிறத்தில் காணப்படும் இந்தக் கோதுமை மாவில் துர்மணம் வீசுவதாகவும் கோதுமை மாவினுள் புழுக்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய மனித பாவனைக்கு உதவாத கோதுமை மாவை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (04-21)

## சட்ட விரோத மின்பாவனை; பாதிக்கப்படும் பொது மக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

வரணி இடைக்குறிச்சி,கரம்பைக் குறிச்சி ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மின் பாவனையாளர்களால் மின் விநியோகம் சீர்குலைந்துள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வரணி சந்தைப் பகுதியில் உள்ள மின் மாற்றி மூலம் மின் விநியோகம் இடம்பெறும் பகுதிகளில் தினமும் இரவு வேளைகளில் குறைந்த அளவு மின்சாரமே கிடைப்பதாகவும் சில வேளைகளில் இரவு முழுவதும் மின்தடை ஏற்படுவதாகவும் இதற்கு சட்டவிரோதமான மின்பாவனையே காரணமெனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

எனவே உரியவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (04-207)


ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 14
திகதி - 21.04.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: E அதிர்ஷ்ட இலக்கம்: 08 வெற்றி இலக்கம்: 7 9 8 7 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு எண்ணிக்கை |
| --- | --- | --- | --- |
| சுப்பர் பரிசு | E 08 7 9 8 7 3 | ரூ. 22,223,039.00 | - |
| 1 பரிசு | 08 7 9 8 7 3 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 7 9 8 7 3 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 9 8 7 3 | ரூ. 10,000.00 | 24 |
| 4 பரிசு | 8 7 3 | ரூ. 1,000.00 | 243 |
| 5 பரிசு | 7 3 | ரூ. 50.00 | 2414 |
| 6 பரிசு | 3 | ரூ. 20.00 | 23263 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு எண்ணிக்கை |
| --- | --- | --- | --- |
| 7 பரிசு | 7 9 8 7 | ரூ. 1,000.00 | 23 |
| 8 பரிசு | 7 9 8 | ரூ. 100.00 | 238 |
| 9 பரிசு | 7 9 | ரூ. 50.00 | 2441 |
| 10 பரிசு | E | ரூ. 20.00 | 9446 |
| 11 பரிசு | E 08 | ரூ. 100.00 | 1108 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,737,530.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 22,223,039.00

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2114 திகதி 21-04-2010

ஆங்கில எழுத்திற்கும் M
வெற்றி எண்கள் 04 28 45 61
போனஸ் இல: 50

ஜக்பொட் பரிசு ரூ. 16,050,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 1 இல | 162894 | 20/- | 3,257,880/- |
| 2 இல | 11719 | 100/- | 1,171,900/- |
| 3 இல | 250 | 1,000/- | 250,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6509 | 40/- | 260,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 373 | 1,000/- | 373,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 04 | 10,000/- | 40,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,050,700/- | - |
| 1 இல + போனஸ் இல | 7779 | 100/- | 777,900/- |
| 2 இல + போனஸ் இல | 351 | 500/- | 175,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 310 | 200/- | 62,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 7,844,040/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 190221 | | 8,444,040/- |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - M.M.D.R. பிரேமஜித் முதலிகே - குவைன்வல்ல.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - W.M. சுரவீர குமார விக்ரமசிங்க - பதுளை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
| --- | --- |
| பொலன்னறுவை | 201820584-6-42 |
| மொணராகலை | 201814616-1-20 |
| இரத்தினபுரி | 201812321-6-15 |
| கொழும்பு | 201809031-6-11 |
| கம்பஹா | 201809687-0-36 |
| களுத்துறை | 201822675-1-35 |
| வவுனியா | 201809160-0-49 |
| அம்பாறை | 201821025-1-37 |
| அம்பாந்தோட்டை | 201815548-9-32 |
| மாத்தறை | 201808631-3-22 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 16,495,350/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 24 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

174 வது மைல்கல்



# மானிப்பாய்

ஒரு நாட்டின் ஆட்சி மாற்றம் ஏற்படும் பட்சத்தில் புதியதோர் உயர்தர வர்க்கம் உருவாகுவதற்கு காரணமாக அமைகிறது. இதன் நிமிர்த்தம் 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய வருகையின் காரணமாக கண்டி இராட்சியத்தின் சிங்கள அரசாட்சியின் பிடியானது உடரட உயர்குல பரம்பரைகளிடமிருந்து கைநழுவி பாஹதரெட்டிய கரையோர மக்களுக்கும் ஆட்சியில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. பிரித்தானிய ஆட்சியின் போதே யாழ் குடா நாட்டின் "பெரிய புலத்தில்" தமிழ் செல்வந்தர்களான முதலியார் பரம்பரை மிகவும் துரித வளர்ச்சி கண்டது. தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மிஷனின் ஆதிக்கம் மானிப்பாய் பிரதேசத்தில் மேலோங்க சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் வளர்ச்சியடைந்தது. அதே போல் நம் தேசத்தின் தேசப்பற்றுள்ள தேசபிமானிகள் வாழ்ந்த பூமியான மானிப்பாய் பல கல்விமான்களை நாட்டுக்கு உருவாக்கி தந்துள்ளது. பிற்காலத்தில் மானிப்பாயிலிருந்து தலைநகருக்கு குடிபெயர்ந்த தமிழ் செல்வந்தர்களில் பெரும்பாலானோர் கொழும்பு 07 கருவாத்தோட்டத்தில் குடியேறினார்கள். நம் தேசத்திற்கு உன்னத மனிதர்களை பெற்று தந்த மானிப்பாய் பிரதேசத்திற்கு இலங்கையின் முதற்தர வங்கியான கொமர்ஷல் வங்கி கிளையினை திறந்து வைத்து, விஷேட வங்கிச் சேவையினை வழங்குவதானது எமக்கும் கௌரவமாகும்.

கொமர்ஷல் வங்கியின் மானிப்பாய் கிளை, இல. 244 & 246 யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரியில் 2010 ஏப்பிரல் 23ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.07 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அழைக்கிறோம்.

தொலைபேசி (முகாமையாளர்) 021-2221841, (பொது) 021-2221842, 021-2221843, (ஃபக்ஸ்) 021-2221844

COMMERCIAL BANK

# எப்போது புனரமைப்பு நடக்குமென ஏங்கி நிற்கும் பண்ணைப் பால வீதி

பண்ணைப்பாலம் யாழ்ப்பாணத்திற்கான தீவுப்பகுதியின் முக்கிய வழித்தடம். ஆயினும் கடந்த இரண்டு வருடங்களாகப் பாதிக்கப்பட்ட நிலையில் கவனிப்பாரின்றித் திருத்தப் பணிகளை எதிர்பார்த்தபடி மோசமான நிலையில் கிடக்கிறது 50 ஆண்டுகளுக்கும் அதிகமான வயதுடைய இந்த முதியவீதி.

பாலத்தின் தாரிடப்படாத சில குழிகள்



பாலத்தின் இரு பக்க ஓரங்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் வாகனங்கள் ஒன்றையொன்று வழிவிட்டு விலகிக் கொள்வதில் சிரமங்களை எதிர் கொள்வதுடன் நீண்ட தாமதமும் ஏற்படுகிறது. சில வேளைகளில் துரதிஷ்டவசமாக வாகனங்கள் பயணிகளுடன் கடலில் பாயும் சம்பவங்களும் இடம் பெறத்தான் செய்கின்றது. பாலத்தின் ஓரங்களுக்கே இந்த நிலைமை என்றால் வீதியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. குண்டும் குழியும், மேடும் பள்ளமுமாக பயணிகளை உலுப்பி எடுத்துவிடும் நிலையில்தான் இவ்வீதி உள்ளது.

'பாலத்தில் வேலைகள் இடம்பெறுகின்றன என்பதைக் காட்ட ஆங்காங்கே தார்க் கலவையிடப் படுவதைக் காணலாம். ஆனால் அது கூட உரிய முறையில் போடப்படுகிறதா என்பதுதான் கேள்வி? யாழ்ப்பாணத்தில் பண்ணைவீதி ஆரம்பமாகும் பகுதியில் இருந்து சில யார் தூரத்திற்கு சேதமுற்ற பகுதிகள் நிரவப்பட்டுத் தார்க்கலவையிடப்பட்டுள்ளன. அது ஓரளவு நல்ல முறையிலேயே செயற்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் ஒழுங்கான முறையில் இடம் பெற்றதாக இல்லை. சில குழிகளில் கற்கள் தூவிவிடப்பட்டதைப் போன்று காணப்படுகின்றது. சில குழிகளில் கலவையிட்டதற்கான அடையாளமே காணப்படவில்லை. அதிகரித்த வாகனப் போக்குவரத்துக் காரணமாக, போட்ட கற்கள் சிதறுண்டு விட்டதாகவும் கூறலாம் இதனைப் பார்த்த பொதுமக்கள். வீதிப்புனரமைப்பில் இது ஒரு நவீன தொழில் நுட்ப முறையாக இருக்குமோ (?) என்றும் ஐயப்படுகின்றார்கள்.

கடந்த 2008இல் இடம் பெற்ற நிஷா அனர்த்தத்தினால் இந்தப் பாலம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு தீவுப்பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் தமது பயணத்தைத் தொடர வேண்டியேற்பட்டது. இந்தப் பாலத்தின் முக்கியத்துவம் அதை நல்ல முறையில் செப்பனிட வேண்டிய கட்டாயம் என்பன அதிகாரிகள் முதற்கொண்டு அமைச்சர்கள் மட்டம் வரை சுட்டிக்காட்டப்பட்டது. தற்போதும் கூட அது நிகழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட வீதியை விரைந்து புனரமைக்க வேண்டிய கடப்பாடு பூர்த்தி செய்யப்பட்டதா? அதற்காக பெரிய அளவில் அக்கறை காட்டப்படுகிறதா? என்பது குறித்து எதுவுமே தெரியவில்லை.

இந்தப் பாலத்தின் வேலைகளை உடன் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலில் ஒரு கிலோ மீற்றர் வரையான தூரம் அகலப்படுத்தப்பட்டுச் செப்பனிடப்படும் என்றெல்லாம் தகவல்கள் வெளிவந்து கொண்டிருந்தன.


செய்தியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இது குறித்து அதிகாரிகளும் அமைச்சர்களும் அறிவிப்புக்களை வெளியிட்டனர். வடக்கின் வசந்தத்தில் இந்த வேலைகளும் இடம்பெறும் என்றார்கள்.

குளிர்ச்சியூட்டும் வசந்த அறிவிப்புக்களால் 'ஜில்'லாகிப் போன மக்கள் மீண்டும் கடும் வெப்பத்துள் கரைந்து கொண்டிருப்பதுதான் மிச்சம். மேடை மேடையாக வீசிய வசந்தம் ஜாடை மாடையாக மறைந்து போய்விட்டது.

தாரிடும் பணியில் ஊழியர்கள்



இந்த வீதியைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தம் (முதல் ஒரு கிலோ மீற்றர்) தென் பகுதியைச் சேர்ந்த ஒப்பந்த காரரிடம் வழங்கப் பட்டுள்ளதாகவும் இது நடந்து ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டதாகவும் அரசல் புரசலாகச் செய்திகள் கசிகின்றன. ஒப்பந்தகாரர் அதற்கான



செயற்பாடுகளைத் துரிதப்படுத்தாத நிலையில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தாரக மந்திரத்திற் கமைய, வீதி அபிவிருத்தித் திணைக் களம் வீதிகளுக்குத் தார்க் கலவை யிடும் முறையில் 'தன் கடன் தார் அப்பி முடிப்பதே' என்றவாறு பணி செய்கின்றது போலும்!


வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது என்பதை வெளிக்காட்ட பாலத்தின் மேற்குக் கரையோரத் தில் குறிப்பிட்ட தூரம் வரை அளவிட்டு கடலில் மண் மூடைகள் போடப்பட்டுள்ளன. அந்த ஒரு செயற்பாட்டுடன் எல்லாமே நின்றுவிட்டது போல் தெரிகின்றது. புனரமைப்புக் கதையையும் காணவில்லை; இது கவனத்தில் எடுக்கப்படுவதாகவும் இல்லை. இதனால் மக்களும் மௌனித்து விட, 'போடா! வருவது வரட்டும் என்ப வனே நல்ல ரசிகன்' என்று முணு முணுத்தபடி தமது வாகனங்களில் மூச்சு விட முடியாத அளவுக்கு மனிதர்களை அடைத்துக் கொண்டு கடும் வேகத்தில் போட்டிக்கு ஓடிக்கொண்டிருக்கும் வாக னங்களை ஆட்டி அசைத்துக் குலுக்கி நிமிர்த்தியபடி விபத்தும் ஏற்படலாம் என்ற எச்சரிப்புடன் நல்ல சிகிச்சையை எதிர்பார்த்துக் கிடக்கிறது பண்ணைப் பால வீதி. ✱ ✱

– நம்பி


# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்.....



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திரு விழாவின் தேர்த்திருவிழா கடந்த புதுவருடத் தினத்தன்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விநாயகப் பெருமான் தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும் பக்தர்கள் புடைசூழ சுவாமி தேரில் ஆரோகணித்து வருவதை அடுத்த படத்திலும் காணலாம்.



சங்கத்தானை பிட்டியம்பதி பத்திரகாளிஅம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திரு விழாவில் ஏழாம் திருவிழாவின்போது பக்தர்கள் புடைசூழ அம்பாள் வீதியுலாவருவதைப் படத்தில் காணலாம்.



நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழாவில் சுவாமி திருமஞ்சத்தில் வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம். (படம்: [illegible] செய்தியாளர்)



யாழ். அத்தியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழாவின் போது விநாயகப் பெருமான் பக்தர்கள் புடைசூழ வீதியுலாவரும் காட்சியைப் படத்தில் காணலாம். (படம்: சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்குரிய அந்தஸ்து வழங்கப்படாவிடில் இலங்கையில் நிலைமைகள் சீராகமாட்டா

## டில்லி மாநாட்டில் சர்வதேச பிரமுகர்கள் கருத்து

ஏப்ரல் 15ஆம் திகதி டில்லி தமிழ் மாணவர் சங்கமும், ஜனநாயக மாணவர் சங்கமும் இணைந்து வெளியில் தெரிய வராத இனப்படுகொலை; இலங்கையில் யுத்தக் குற்றங்கள் என்னும் தலைப்பில் மாநாடொன்றினை நடத்தினர். டப்ளினைத் தளமாகக்கொண்ட மக்கள் தீர்ப்பாயத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள இலங்கையரசின் யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பாக அங்கு உரையாற்றியவர்கள் மனிதப்படு கொலைகளுக்காக இலங்கை அரசாங்கத்தையும், இலங்கை அரசால் மேற் கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்களுக்கு ஆதரவு நல்கிய சர்வதேச சக்திகளையும் விமர்சித்து உரையாற்றினார்கள். *(இந்த மாநாடு தொடர்பான ஒரு செய்தி ஏற்கனவே உதயனில் வெளியாகியுள்ளது. மாநாட்டில் உரையாற்றிய பிரமுகர்களின் பேச்சுக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன).*

டில்லி உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியான ராஜேந்திர சச்சார் தமது ரையில்: தமிழர்களை சம அந்தஸ்து உள்ள பிரசைகளாக, கௌரவமான இடத்தில் வைக்கும்வரை இலங்கை நிலவரத்தில் முன்னேற்றம் காண்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்று கூறினார். உடனடியாகவே இலங்கை அரசு அவர்களுக்கு சமத்துவமான, கௌரவமானதொரு இடத்தை வழங்காவிடின் தமிழர்கள் வேறு தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தள்ளப்படலாம் என்றும் அவர் சொன்னார். இதனை முன்னாள் இந்திய உயர் நீதிமன்ற நீதிபதியான வி.ஆர். கிருஷ்ண ஐயர் ஆமோதித்ததுடன், இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டுள்ளன என்று கூறினார்.

### 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய மனிதப் படுகொலை

சர்வதேச மக்கள் போராட்டக்குழு அமைப்பின் உப தலைவரான பேராசிரியர் ஜி.என். சாய்பாபா இலங்கையிலும், தெற்காசியாவிலும் ஏனைய பகுதிகளிலும் என்ன நடைபெறு கின்றன என்பதைத் தொடர்புபடுத்தி உரையாற்றினார். தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட போர் 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய மனிதப் படுகொலை எனவும் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு சர்வதேச சமூகத்திற்கு அழுத்தங்கள் தரப்படவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார். சர்வதேச சமூகம் தமிழர்களைக் காப்பதில் தவறுமேயானால் அவர்கள் இந்தியாவின் காஷ்மீர் பிரச்சினையில் தலையிடுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவார். எமது முக்கியமான பணி என்னவென்றால் இத்தகையதொரு நிலைமைக்கு முகம்கொடுக்கும் சகல இனங்களின் பிரச்சினை தொடர்பாக ஒன்று சேர்ந்து நாம் குரல் கொடுக்க வேண்டும் என்றும் பேராசிரியர் மேலும் கூறினார்.

இங்கு உரையாற்றிய காஷ்மீர் அனைத்துக் கட்சிகுரிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்த சையட் அலிஷா கிலானி, ஈழத் தமிழர்களின் போராட்டத்திற்கு தாம் ஆதரவு வழங்குவதாகவும், இந்திய மக்களும் ஆதரவு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். மேலும் எவ்வாறு அரச பயங்கரவாதம் இலங்கை, காஷ்மீர், ஈராக், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம் ஆகிய நாடுகளில் மக்களின் வாழ்க்கையை பரிதாபகரமாகச் சீரழிக்கின்றன என்பதை அவர் விளக்கிக் கூறினார். அனைத்து மக்களும் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக ஒன்று பட்டு அணிதிரள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

சண்டிகர் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜித்சிஸ் பெயின்ஸ் உரையாற்றுகையில், எப்போது ஒரு அரசாங்கம் பயங்கரவாதியாக மாறுகின்றதோ அங்கே சட்டமும், ஒழுக்கமும் இருக்காது என்றார். இலங்கை அரசின் அக்கிரமத்தை ஆராய்வதற்கு ஐ.நா. ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

### திட்டமிட்ட படுகொலை

இங்கு உரையாற்றிய பெரியார் திராவிடக் கழகத் தலைவர் கௌத்துதூர்மணி, இலங்கை அரசாங்கம் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் சர்வதேச படைகளின் உதவியுடன் இந்த இனப்படுகொலையைச் செய்து முடித்துள்ளது. இந்திய அரசும் இதற்கு உடந்தையாக இருந்துள்ளது. இந்தியர்கள் என்ற வகையில் எமது கரங்கள் இரத்தத்தில் தோய்ந் துள்ளன. இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கான முகாம்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன என்று அவர் கூறினார்.

இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ற் கட்சியைச் சேர்ந்த கவிதா கிருஷ்ணன் இங்கு உரையாற்றும்போது லட்சக் கணக்கான தமிழர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தபோது அமைதிப் பேச்சுவார்த்தை எனக்கூறுவது கேலிக்குரியது என்றார்.

### போராடுங்கள் ஒன்றிணைய வேண்டும்

உலக சீக்கிய செய்திகள் பத்திரிகையின் ஆசிரியர் ஜக்மோகன் சிங் உரையாற்றுகையில்; தமது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார். அவர் தமிழீழப் போராளிகளின் மகத்தான பங்களிப்பைப் பாராட்டினார். இங்கு உரையாற்றிய மேலும் பலர் பிரபாகரனையும், தமிழீழ இயகத்தினையும் விதந்துரைத்தனர்.

புரட்சிக் கவிஞரான வராவரராவ் தாம் அனுப்பிய செய்திக்குறிப்பில் ஈழத்தமிழர்களின் படுகொலைக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்காக அதனைக் கண்டித்தார். பிரபாகரன் தலைமையிலான ஈழத்தமிழர்களின் படுகொலைகளுக்கு இந்திய அரசே உறுதுணையாக இருந்துள்ளது. தமிழ் நாட்டின் பெரிய அரசியற் கட்சிகள் ஈழத்தமிழர்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்ததைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. பிரபாகரனுக்குக் கௌரவம் கொடுக்கும் முகமாக இவரால் எழுதப்பட்ட கவிதையொன்றும் இங்கு வாசிக்கப்பட்டது.அரசியற் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்பினைச் சேர்ந்த எஸ்.ஏ.ஆர்.கிலானி இங்கு உரையாற்றுகையில் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களின் விடயத்தில் இந்திய அரசாங்கம் போதுமான அக்கறை காட்டவில்லை என்றார். பிரபாகரனின் தியாகம் சுயநிர்ணயத்திற்கான போராட்டத்திற்கு முடிவு என்று ஒருபோதும் சைகை காண்பிக்காது என்றும் அவர்மேலும் கூறினார்.

ஜேர்மனியைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த விராஜ் மெண்டிஸ் இந்தியா வருவதற்கான விசா அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் தமது உரையை வீடியோவில் பதிவு செய்து அனுப்பி வைத்திருந்தார். இந்தியாவின் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே இந்த இனப் படுகொலை நிகழ்ந்துள்ளது என்று கூறிய அவர் சமாதானப் பேச்சுக்கள் முறிந்து போனமைக்காக சர்வதேச சக்திகளைச் சாடினார்.

மேலும் கே.ஜி.கண்ணபிரான், ஜெனனி ஜனநாயகம் ஆகியோரின் பதிவு செய்யப்பட்ட உரைகள் கிடைத்தபோதும் தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாக ஒளிபரப்புச் செய்ய முடியவில்லை. இங்கு உரையாற்றிய மேலும் பலர் ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு தமது ஆதரவினைத் தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து தீர்மானங்கள் சபையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. அவை வருமாறு:


1) தமிழர்கள் மீது இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பான போர்க் குற்றங்களுக்காக இந்தச் சபை தனது கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், இதற்காக நீதி விசாரணைக்கு முன்பாக இலங்கை அரசாங்கம் நிறுத்தப்படல் வேண்டும்.

2) கட்டாயமாக தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்கள் விடுவிக்கப்பட்டு அவர்களது சொந்த வாழ்விடங்களில் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்.

3)தமிழர் பிரதேசத்தில் நடைபெறும் இலங்கைக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென இந்தச் சபை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

4) இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்கிவரும் அரசியல், இராணுவ மற்றும் உதவிகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும்.

5) தமது சொந்த இலட்சியங்களுக்காகப் போரிடும் பல்வேறு தேசிய இனங்கள் மீது இந்திய அரசால் மேற்கொள்ளப்படும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய தையல், மனையியல் கண்காட்சி யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும்-

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் [illegible] ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் முதல் மூன்று படங்களிலும்-

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.ந.ஜெயராஜன் சான்றிதழ் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு - 01 | பகுதி - I

01. கணக்கீட்டுத் தகவல்கள் கொண்டிருக்க வேண்டிய முதன்மைப் பண்பு,
1) அளவு ரீதியானவை. 2) பயன்பாடு உடையவை.
3) பணப்பெறுமதி உடையவை. 4) வருமானம் ஈட்டக்கூடியவை.
5) மேற்கூறிய யாவும் சரி.

02. நடைமுறையல்லாச்சொத்திலும் உரிமையாண்மையிலும் குறைவை ஏற்படுத்தும் நிகழ்வு ஒன்று,
1) தளபாடம் நட்டத்தில் விற்பனை செய்தல்.
2) தளபாடம் கடனுக்குக் கொள்வனவு செய்தல்.
3) இருப்புக்கள் இலாபத்தில் விற்பனை செய்தல்.
4) நடைமுறையல்லாச் சொத்துக்களின் பாவனை விரயம்.
5) கடன்பட்டோரிடம் பதிவழித்த அறவிடமுடியாக்கடன்.

03. தேறியசொத்து அதிகரிப்பு என்பதற்கு பின்வருவனவற்றில் சரியானது,
a - இறுதி மூலதனம் + பற்று - ஆரம்ப மூலதனம்.
b - இறுதி மூலதனம் - ஆரம்ப மூலதனம்.
c - தேறிய இலாபம் + பற்று - மேலதிக மூலதனம்.
d - தேறிய இலாபம் - பற்று + மேலதிக மூலதனம்.
1) aயும் bயும். 2) bயும் cயும். 3) aயும் dயும்.
4) bயும் dயும். 5) c மட்டும்.

*** 4ஆம், 5ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பெறுமதிசேர் வரிப் பதிவுள்ள நிறுவனம் 10% வரி உட்படுத்திய கடன்விற்பனை பெறுமதி 165,000 ரூபா. பெறுமதிசேர் வரியுடன் கடனுக்குக் கொள்வனவு செய்த முழுப்பண்டங்களும் கிரயத்தில் 25% இலாபத்தில் விற்பனை செய்யப்பட்டன.

04. மேற்தரப்பட்ட தகவல்களின்படி கொள்வனவுக் கணக்கிலும், கடன்கொடுத்தோர் கணக்கிலும் பதியும் தொகைகள் முறையே,
1) 132,000 ரூபா, 145,400 ரூபா. 2) 120,000 ரூபா, 132,000 ரூபா.
3) 150,000 ரூபா, 165,000 ரூபா. 4) 135,000 ரூபா, 146,300 ரூபா.
5) மேற்கூறிய எதுவுமில்லை.

05. மேற்கூறப்பட்ட தகவல்கள் உட்பட செயற்பாட்டுச் செலவுகள் 8,000 ரூபா ஏற்படின் வருமானத்தை உழைப்பதற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு யாது?
1) 128,000/= 2) 140,000/= 3) 158,000/=
4) 132,000/= 5) 8,000/=

06. கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் எதில் பொருத்தம்காண் கோட்பாடு (Matching Concept) பிரயோகிக்கப்பட்டுள்ளது?
1) ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்தல்.
2) விற்பனையொன்று மேற்கொள்ளப்படும்போது வருமானத்தினை ஏற்பிசைவு செய்தல்.
3) சொத்தொன்றினை கொள்வனவு செய்வதற்காக செலுத்திய விலையில் அதனைப் பதிவு செய்தல்.
4) மொத்த இலாபத்தை கணித்தறிதலில் விற்பனையிலிருந்து விற்பனைக் கிரயத்தைக் கழித்தல்.
5) மேற்கூறிய அனைத்தும்.

07. தொக்குகள் கிரயத்திலும் தேறிய நிகரப்பெறுமதியிலும் எது குறைவானதோ அந்தப்பெறுமதியில் மதிப்பிடப்படும். அங்கு பிரயோகிக்கப்படும் அடிப்படை கணக்கீட்டுக் கோட்பாடு,
1) தொடர்ந்து இயங்கும் கோட்பாடு. 2) அட்டுறுக் கோட்பாடு.
3) கொள்கைமாறாக் கோட்பாடு. 4) முன்னெச்சரிக்கைக்கோட்பாடு.
5) மேற்கூறிய எவையுமீல்ல.

08. வருட முடிவில் ஆதவன் கம்பனியில் இரு உற்பத்திப்பொருட்கள் தொடர்பாக பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| | பொருள் P | பொருள் Q |
|---|---|---|
| அலகுக் கிரயம் | 90 | 70 |
| அலகு மதிப்பிடப்பட்ட விற்பனை விலை | 100 | 50 |
| அலகு விற்பனைக் கிரயம் | 10 | 20 |

வருடமுடிவில் பொருள் P 300 அலகுகளும் பொருள் Q 100 அலகுகளும் இருப்பாக உள்ளன. வருட முடிவில் காணப்படும் நிதிக்கூற்றிலுள்ள இருப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய இருப்பின் பெறுமதி மொத்த அடிப்படையில் தெரிவுசெய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவு,
1) இருப்புக் கணக்கு வரவு 33,000/=, வியாபாரக் கணக்கு செலவு 33,000/=.
2) இருப்புக் க/கு வரவு 30,000/=, இருப்பு வீழ்ச்சி நட்டக்க/கு வரவு 4,000/= வியாபாரக் கணக்கு செலவு 34,000/=.
3) இருப்பு கணக்கு வரவு 34,000/=, வியாபாரக் கணக்கு செலவு 34,000/=
4) இருப்புக் கணக்கு வரவு 30,000/=, இருப்பு வீழ்ச்சி நட்டக் கணக்கு வரவு 3,000/= வியாபாரக் கணக்கு செலவு 33,000/=
5) மேற்கூறிய எவையுமல்ல.

09. இணைதல் எண்ணக்கருவினை மீறும் செயற்பாடாக அமையக்கூடியது,
1) சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துள்ளதால் பெறுமானத்தேய்வு பதிவுசெய்யப்படாமை.
2) உரிமையாளர் பற்று இலாபநட்டக் கணக்கில் செலவாக காட்டப்பட்டமை.
3) சிறிய கோவைகள் வாங்கியது சொத்தாக காட்டப்பட்டமை.
4) நிலம் அதன் சந்தைவிலையில் பதிவுசெய்யப்பட்டிருந்தமை.
5) கொடுக்கவேண்டிய இரண்டுமாத வாடகை செலவாக காட்டப்பட்டமை.

10. கிரயத்தின் மீது நேர்கோட்டுமுறையில் ஆண்டுக்கு 20% பெறுமானத்தேய்வு செய்த கணினி இயந்திரத்தின் 31.03.2008 இல் தேறிய பெறுமதி 66,000/= ஆகும். இக்கணினி இயந்திரம் 01.01.2006 இல் கொள்வனவு செய்யப்பட்டது. நிறுவனம் 01.04.2008 இல் இருந்து ஒடுங்குபாக முறை பின்பற்றப்படுமாயின், 31.03.2009 இற்கான பெறுமானத்தேய்வாக அமைவது,
1) 13,200/= 2) 18,000/= 3) 8,400/=
4) 20,000/= 5) மேற்கூறிய எவையுமல்ல.

*** கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு நிறுவனம் பொருட்களை ரூ.75,000 இற்கு கடனுக்கு விற்பனை செய்தது. இது தொடர்பாக வாடிக்கையாளரிடம் இருந்து ரூபா 65,500 பெறப்பட்டதுடன் மிகுதிப் பணத்தைப் பெறமுடியவில்லை.

11. மேலே கூறிய கொடுக்கல்வாங்கல்களை பதிவதற்குத் தேவையான மூல ஆவணங்கள்,
1) பட்டியல், பற்றுச்சீட்டு, வரவுத்தாள்.

SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

2) பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு.
3) பட்டியல், பற்றுச்சீட்டு, செலவுத்தாள்.
4) பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, வரவுத்தாள்.
5) நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு, செலவுத்தாள்.

12. மேலே கூறிய கொடுக்கல்வாங்கல்களைப் பதிவிடுவதற்கான முதன்மைப் பதிவேடுகள்,
1) விற்பனை நாளேடு, காசேடு, விற்பனைத் திரும்பல் நாளேடு.
2) விற்பனை நாளேடு, காசேடு, பொதுநாட்குறிப்பேடு.
3) விற்பனை நாளேடு, காசேடு.
4) விற்பனை நாளேடு, பொது நாட்குறிப்பேடு.
5) பொது நாட்குறிப்பேடு, காசேடு.

13. மிக விரைவாகப் பழுதடையும் கணினி போன்ற சொத்துக்களுக்கு ஒடுங்குபாக மீதி முறையிலான பெறுமானத் தேய்விடல்முறை பொருத்தமானது எனக் கருதப்படுகின்றது. அதற்கான அடிப்படைக் காரணிகளாக அமைவன,
1) கணினியின் பெறும்தி அதிகமாக இருப்பதனால்.
2) கணினியின் தொடர்ச்சியான பயன்பாடு அதிகமாக இருப்பதால்.
3) கணினியின் பராமரிப்புச் செலவு அதிகரித்துச் செல்லல்.
4) கணினியில் இருந்து பயன் காலப்போக்கில் குறைவடைந்துச் செல்லல்.
5) வழக்கிழத்தல் தொழில்நுட்ப மாற்றங்கள்.

14. நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் தகவல்களுக்கு அளவுசாராப் பண்புகளை வழங்குவதற்கு வழிகாட்டியாக அமையாதது,
1) இலங்கைக் கணக்கீட்டு நியமம்.
2) நிறுவனக் கணக்காளரின் தனிப்பட்ட தீர்மானம்.
3) இறைவரித் திணைக்கள சட்டப்பிரமாணங்கள்.
4) கம்பனிச்சட்டம். 5) எண்ணக்கருக்கள்.

*** பின்வரும் தரவுகளைக் கொண்டு 15ஆம், 16ஆம் வினாக்களுக்கு விடைதருக.**

2008 ஆம் ஆண்டில் Star விளையாட்டுக் கழகத்தில் பெற்ற சந்தா

| | | |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டுக்கு | - | 8,000/= |
| 2008 ஆம் ஆண்டுக்கு | - | 29,000/= |
| 2009 ஆம் ஆண்டுக்கு | - | 6,000/= |
| | | 43,000/= |

| | | 01.01.2008 | 31.12.2008 |
|---|---|---|---|
| வருமதிச் சந்தா | 2007 இற்கு | 10,000/= | - |
| | 2008 இற்கு | - | 5,000/= |
| முற்பணச் சந்தா | | 3,500/= | |

15. வருமானச் செலவுக்கணக்கிற்கு மாற்றவேண்டிய சந்தாவை அட்டுறு அடிப்படையில் கணிக்குக.
1) 43,000/= 2) 53,500/= 3) 30,500/=
4) 36,500/= 5) 37,500/=

16. காசு அடிப்படையில் சந்தா மதிப்பிடும்போது வருமானச் செலவுக்கணக்கிற்கு தாக்கல் செய்யவேண்டிய தொகை,
1) 40,500/= 2) 20,500/= 3) 30,500/=
4) 37,500/= 5) 36,500/=

17. வரையறுத்த கம்பனி ஒன்றில் 31.12.2009 இல் தயாரித்த கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 75,000/= ஆகும். இக்காலப்பகுதியில் கடன்கொடுநர் பட்டோலை மீதியைத் தயாரித்தபோது 7,000/= தவறவிடப்பட்டது. வெளித் திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை 8,000/= கூட்டியும் கூட்டப்பட்டு இருந்தது. மேற்கூறிய தகவல்களைக் கருத்திற்கொண்டு திருத்தமுன் உள்ள கடன்கொடுநர் பட்டோலை மீதியைத் தருக.
1) 70,000/= 2) 74,000/= 3) 62,000/=
4) 88,000/= 5) இவை அனைத்துமல்ல.

18. பெற்றகழிவு 500/= பெற்றக்கழிவுக் கணக்கில் இருமுறை பதியப்பட்டமைக்கான சீராக்கற் பதிவு,
1) கடன்கொடுநர் கணக்கு வரவு 1,000/=, பெற்ற கழிவுக்கணக்கு செவவு 1,000/=
2) பெற்ற கழிவுக்கணக்கு வரவு 1,000/=, கடன்கொடுநர் கணக்கு செலவு 1,000/=
3) பெற்ற கழிவுக்கணக்கு வரவு 500/=, தொங்கல் கணக்கு செலவு 500/=
4) பெற்ற கழிவுக் கணக்கு வரவு 1,000/=, தொங்கல் கணக்கு செலவு 1,000/=
5) தொங்கல் கணக்கு வரவு 1,000/=, பெற்ற கழிவுக்கணக்கு செலவு 1,000/=

19. ஊழியர் சேமலாபநிதி தொடர்பாக தொழில்தருநரின் பங்களிப்புக்கான இரட்டைப் பதிவு,
1) ஊழியர் சேமலாபநிதி செலவுக்கணக்கு வரவு, ஊழியர் சேமலாபநிதியக் க/கு செலவு.
2) ஊழியர் சேமலாபநிதியக் கணக்கு வரவு, இலாபநட்டக் கணக்கு செலவு.
3) ஊழியர் சேலாபநிதியக் கணக்கு வரவு, ஊழியர் சேலாபநிதிச் செலவுக் க/கு செலவு.
4) மேற்கூறிய எதுவுமல்ல. 5) மேற்கூறிய அனைத்தும் பொருந்தும்.

20. இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல.18 இன்படி ஈட்டப்பட்ட ஆதனம், இயந்திரம், உபகரணம் ஆகிய சொத்துக்களை ஆரம்பத்தில் இனங்காணும்போது அவைகள்,
1) நியாயமான விலையில் மதிப்பிடப்படல் வேண்டும்.
2) கிரயத்தில் மதிப்பிடப்படல் வேண்டும்.
3) நியாயமான பெறுமதியில் அல்லது கிரயத்தில் மதிப்பிடப்படல் வேண்டும்.
4) நியாயமான பெறுமதி, கிரயம் இவற்றில் எது குறைவோ அதன்படி மதிப்பிடப்படல் வேண்டும்.
5) நிகழ்காலப் பெறுமதியில் மதிப்பிடப்படல் வேண்டும்..

*** 21-30 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடைதருக.**

21. தனிவியாபார நிறுவனம் ஒன்றில் ஆரம்ப இருப்பு ரூபா 5,000 கூடுதலாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வழுவினைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவைத் தருக.

..............................................................................................

22. இருப்பு மதிப்பீட்டின்போது பன்படுத்தப்படும் விதி யாது?

..............................................................................................

23. கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 2009.04.01 இல் ''நிமால்'' வியாபாரத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதியைக் காண்க.

| | ரூபா |
|---|---|
| 2010.03.01 இல் உள்ள தேறிய சொத்துக்கள் | 800,000.00 |
| வருட இலாபம் | 150,000.00 |
| உரிமையாளர் காசுப்பற்று | 50,000.00 |
| கணக்கிலிடப்படாத உரிமையாளரினால் பற்றுதல் செய்யப்பட்டப் பொருள் | 50,000.00 |

2009.04.01 இல் தேறியச்சொத்துக்களின் பெறுமதி (ரூ. ..............................

(15 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: திரு.R.ஜனதன் B.BA (Hons)
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.
உதவி: R.ருஷாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகரசபையின் நூலக சேவைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அவ்வேளையில் மேல்மாடி 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில நூல்களைக் கொண்ட இரவல் கொடுக்கும் பகுதியும் கீழ்த் தளத்தில் 2 ஆயிரம் புத்தகங்களைக் கொண்ட உசாத்துணைப் பகுதியும் பத்திரிகை, சஞ்சிகைப் பகுதியும் இயங்கின. சகல வசதிகளும் கொண்டவகையில் நூலகம் அமைக்கப்பட்டிருந்ததால் மீண்டும் முதன்மை பெற்ற நூலகமாகச் செயற்பட்டது.

இந்தப் பொது நூலகத்திற்கு வரும் வாசகர்களின் தொகை அதிகரித்ததையடுத்து நுணாவிலிலும் மீசாலையிலும் கிளை நூலகங்கள் 1992ஆம் ஆண்டில் தனியார் கட்டடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. நுணாவில் நூலகம் அமைக்க அப் பகுதியைச் சேர்ந்த நலன் விரும்பியொருவர் 190ஆம் கட்டையில் 2 பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கி அந்த வருடமே மாடிக் கட்டடத்திற்கான அத்திபாரம் போடப்பட்டது. பௌதிக வளங்கள் இல்லாததால் வேலைகள் இடைநிறுத்தப்பட்டு 1998இல் தள வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

இந்த நூலகங்களினால் பயன்பெற்ற பல மாணவர்கள் இன்று பட்டதாரிகளாக, சட்டத்தரணிகளாக,கணக்காளர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர்களாக, விரிவுரையாளர்களாக மற்றும் உயர் அதிகாரிகளாக உள்ளனர்.

மீண்டும் 1996ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் நூலக வளர்ச்சிக்குப் பெரும் பாதிப்பை உண்டாக்கியது. இலங்கை இராணுவத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக எடுத்த நடவடிக்கையினால் மக்கள் வேறு இடங்களுக்குச் செல்ல நேரிட்டது. நான்கு தினங்களின் பின்னர் நகரசபை அலுவலகமும் பொது நூலகமும் பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டது.


நகர்ப் பகுதியில் பொது நூலகம் செயற்பட வேண்டுமென அப்போதைய படைக் கட்டளைத் தளபதியின் உத்தரவின்பேரில் நகர்ப் பகுதியில் உள்ள இரும்பு விற்பனை நிலையத்தில் நூலகம் இயங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு படையினரின் அனுமதி பெற்று நூல்கள், தளபாடங்கள், ஆவணங்கள், பதிவேடுகள் பலவற்றை இழந்தநிலையில் கிடைத்தவற்றை மீட்டு நூலக சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இழப்புக்களை நிவர்த்தி செய்து வசதிகள் இல்லாத போதிலும் மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கிவந்த வேளையில் 2000ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு மீண்டும் பாரிய பாதிப்பையே ஏற்படுத்தியது.

28 மாதங்களின் பின்னர் வந்தபோது நூலகம் இயங்கிய கட்டடம் பாரிய சேதங்களுக்கு உள்ளான நிலையில் காணப்பட்டது. பெருமளவு நூல்கள் காணாமல் போயிருந்தன. பல நூல்கள் இடிபாடுகளுக்குள் அழிவடைந்த நிலையில் காணப்பட்டன. நுணாவில் கிளை நூலகத்தில் இருந்த 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் காணாமல் போயிருந்தன. மீசாலைக் கிளை நூலகத்தில் விஷமிகளால் விலை உயர்ந்த தமிழ், ஆங்கில நூல்கள் காணாமற்போய் 270 நூல்களே எஞ்சியிருந்தன. 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது 22 ஆயிரம் தமிழ்,ஆங்கில நூல்கள் அழிந்து போயின. 2003ஆம் ஆண்டு நூலகங்கள் புனரமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. 2009ஆம் ஆண்டு மீசாலைப் பகுதி கிளை நூலகத்திற்கு மீசாலை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கட்டடம் நிர்மாணிக்கப்பட்டும் பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. நுணாவில் நூலகக் கிளைக்கு மாடிக் கட்டடமும் அமைக்கப்பட்டு வருகின்றது. (முற்றும்)

# சாவகச்சேரி - கச்சாய் வீதி புனித அல்போன்சஸ் லிகோரியார் தேவாலயம்

தொகுப்பு: ஜயந்தன்



சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள ஆலயங்களில் சாவகச்சேரி, கச்சாய் வீதியில் உள்ள புனித அல்போன்சஸ் லிகோரியார் தேவாலயமும் ஒன்றாகும். தற்போது இப்பகுதி கத்தோலிக்க மக்களின் பங்கின் தலைமைத் தேவாலயமாகத் திகழும் தேவாலயம் பற்றி இன்று ஆராய்வோம்.

சாவகச்சேரி நகரிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இந்தத் தேவாலயம் சாவகச்சேரி கடலேரியின் அருகில் கிழக்கு, மேற்குப் பகுதியில் இரு சைவ ஆலயங்களுக்கு நடுவில் உள்ளது.

இந்து, கத்தோலிக்கம் என்று வேறுபாடின்றி சகோதரத்துவ ரீதியில் வழிபடும் தேவாலயமாகத் திகழ்கின்றது.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க மதம் நாடளாவிய ரீதியில் பரவி வந்த வேளையில் தற்போது தேவாலயம் அமைந்துள்ள பகுதி பாரிய தென்னம் தோட்டமாக இருந்தது. தென்னந் தோட்டத்தின் உரிமையாளரான கார்டி ஸ்ரீபன் என்பவர் கத்தோலிக்க மதத்தில் கொண்ட பற்றுக் காரணமாக தனது தென்னந்தோட்டத்தின் ஒரு பகுதியினை கத்தோலிக்க திருச்சபையிடம் 1854ஆம் ஆண்டு கையளித்தார். ஆரம்பத்தில் தென்னந் தோட்டத்திலிருந்து ஓலைக் கொட்டில் ஆலயமாகவும் தோட்டத்தில் வேலை செய்தோரின் வசிப்பிடமாகவும் இருந்தது. 10.04.1869 ஆம் ஆண்டு இத்தேவாலயத்தை தரிசிக்க வந்த திருக்குடும்ப கன்னியர்கள் ஆலயம் அமைந்துள்ள கொட்டகையைப் பார்த்து பெத்தலகேம் தொழுவம் போல் இருப்பதாக நகைச்சுவையாகச் சுட்டிக் காட்டியிருந்தனர். ஆரம்ப காலத்தில் சாவகச்சேரிப் பகுதியில் கத்தோலிக்க மக்கள் இல்லாததால் மன்னாரிலிருந்து 15 கத்தோலிக்க குடும்பங்கள் அழைத்துவரப்பட்டு ஆலய சுற்றாடலில் தங்க வைக்கப்பட்டனர்.

33 வருடங்களின் பின்னர் 1887 இல் கல்லினால் சிறிய கட்டடம் அமைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது.இவ் ஆலயத்தினை தரிசிப்பதற்காக யாழ்.குரு மட மாணவர்கள் கோடை விடுமுறைக் காலத்தில் வந்து தங்கிச் செல்வர். இந்த மாணவர்களின் நலன் கருதி 1896இல் ஆலயத்திற்குக் கிழக்குப் புறமாகப் பெரிய மண்டபம் அமைக்கப்பட்டது.

மேற்படி ஆலயத்தின் பெயர் கொண்ட புனிதர் சாந்த அல்போன்சஸ் லிகோரி என்பவர் 1696இல் இத்தாலி நேபிள்ஸ் பட்டணத்தின் பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்தார். சட்ட அறிஞராகப் பட்டம் பெற்ற இவர், செல்வந்த வாழ்வினையும் இல்லற வாழ்வினையும் வெறுத்து 1736 இல் குருவாக மாறினார். ஒழுக்கவியல் தத்துவம் சார்ந்த பல நூல்களை எழுதியதுடன் 'மீட்பர் சபை' என்னும் துறவற சபையினையும் நிறுவினார். 1762இல் இவரது 66ஆவது வயதில் பலத்த வற்புறுத்தல்களினால் ஆயராகப் பதவியேற்ற இவர், ஐந்து வருட சேவையின் பின்னர் கடும் சுகயீனத்திற்கு உள்ளாகி தனது 91ஆவது வயதில் இறைபதமெய்தினார்.

(தொடரும்)

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுப்பு சொல்வது: துழாவி



வியர்க்க, விறுவிறுக்க யாழ்.நகருக்குள் அவசரமாகச் சென்றுகொண்டிருந்தேன். ஒரு சில மாதங்களுக்குக்கு முன்னர் நகரின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த கே.கே.எஸ்.வீதி நகருக்குள் உட்செல்லவும் கஸ்தூரியார் வீதியூடாக வெளிவரவும் கூடியதான முறையில் ஒருவழிப் பாதைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. எனவே நானும் கே.கே.எஸ்.வீதியூடாக நகருக்குள் உள்நுழைய எத்தனித்தேன். ஆனாலும் எலியை விழுங்கிய சாரைப்பாம்பு போல நகரமுடியாத நெருக்கடி. ஒன்றால் கே.கே.எஸ்.வீதி அந்தரப்பட்டுக்கொண்டிருந்தது. தென்னிலங்கைப் பயணிகளை ஏற்றிக்கொண்டுவந்த பெரிய பஸ்ஒன்று குறுகலான அந்த வீதியால் வெளிவரமுடியாது திணறிக்கொண்டிருந்தது; அதுவும் தடைசெய்யப்பட்ட பக்கமாக. வழமையாக நகரில் இருந்து வெளிவரும் வாகனங்கள் கஸ்தூரியார் வீதியூடாகவே வரவேண்டும். ஆனால் குறித்த பஸ் அதற்கு மாறாக கே.கே.எஸ். வீதியூடாக அந்த பஸ் வெளியேற முற்பட்டதாலேயே இவ்வாறு போக்குவரத்துச் செய்யமுடியாதவாறு வீதியே இறுகிப்போயிருந்தது. உண்மையில் குறித்த சாரதிக்கு அது ஒருவழிப்பாதை என்பது தெரியாததாலேயே இந்தச் சிக்கல்.

தென்னிலங்கைச் சாரதிகள் என்றில்லாது சாதாரணமாக வாகனங்களில் பயணிக்கும் எம்மவர்களும், யாழ்.நகருக்கான புதிய வீதி ஒழுங்குகளைச் சரிவர அறிந்திருக்காமையால் இந்த வீதியூடாகப் பயணித்து ஆங்காங்கே ஒளிந்திருக்கும் பொலிஸாரிடம் மாட்டுப்பட்டு தலையைச் சொறிவது வழமையாகிவிட்ட ஒன்றுதான். பொதுவாக இவ்வாறு தவறு நிகழ்வதற்கு சாரதிகளின் அலட்சியப் போக்கு மட்டுமல்லாது இன்னொரு காரணமும் இருக்கிறது. அது, ஒருவழிப் பாதைகளைக் காட்டி நிற்கும் குறியீட்டுப் பலகைகள் சிறிய அளவில் இருப்பதால் அவற்றினை சாரதிகள் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். எனவே நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க இனியாவது மாநகர சபை விழித்துக்கொண்டு தெளிவான, பெரியளவிலான குறியீட்டுப் பலகைகளை அமைக்க முன்வருமா?

★★★

# முத்துப் பல்லக்கு



ஓர் ஊரில் பள்ளிக்கூடம் இருந்தது. அந்தப் பள்ளிக் கூடத்தில் இரண்டு மாணவர்கள் படித்து வந்தார்கள். ஒரு மாணவன் பெயர் மாசிலாமணி. மற்றொரு மாணவன் பெயர் ஆதிசேடன்.

மாசிலாமணி வகுப்பில் முதல் பையனாகத் திகழ்ந்தான். ஆதிசேடனோ முப்பதாவது பையனாக இருந்தான். இருந்தாலும் இரண்டு பேருமே ஆசிரியரிடம் அடி வாங்க மாட்டார்கள். வகுப்பிலுள்ள மற்றப் பையன்கள் தாம் அடி வாங்குவார்கள். மாசிலாமணி கேட்ட கேள்விக்குச் சரியாகப் பதில் சொல்லிவிடுவான். அதனால் ஆசிரியர் அவனை அன்பாக நடத்தினார். ஆதி சேடன் அந்த ஊர்ப் பெரிய வழக்கறி ஞரின் பிள்ளை; பணக்காரப் பிள்ளை. ஆகவே ஆசிரியர் அவனைத் தொட அஞ்சுவார்.

மாசிலாமணி ஏழை நெசவாளி ஒருவனின் மகன். அவன் எப்படியாவது படித்து முன்னேற வேண்டும் என்ற ஆசையுடன் கவனமாகப் படித்து வந்தான். அத்துடன் எல்லோருடைய அன்பையும் கவரும்படியான நற்குணங் களைப் பெற்றிருந்தான். பள்ளி ஆசிரியர் கள் மட்டுமல்லாமல் ஊரில் இருந்த பெரியவர்களும், அவனிடம் அன்பாக இருந்தார்கள். மாசிலாமணி தான் ஓர் ஏழை நெசவாளியின் மகனாக இருந்தாலும் மற்றவர்களுக்குத் தன்னால் ஆன உதவிகளை அவ்வப்போது செய்து வருவான்.

ஆதிசேடனோ, பணக்காரருக்குப் பிள்ளையாகப் பிறந்திருந்தும், நல்ல குணங்கள் இல்லாதவனாக இருந்தான். கூடப்படிக்கும் சிறுவர்களுடைய புத்தகங்களையும், எழுதுகோல்களையும் திருடிவிடுவான். மற்ற மாணவர்களை அடித்து அழவைத்து வேடிக்கை பார்ப்பான். யாருக்கும் எவ்விதமான உதவியும் செய்யமாட்டான். போதாக் குறைக்கு மற்ற தீய மாணவர்களுடன் சேர்ந்து சூதாடுதல், சீட்டாடுதல் போன்ற தீய வழக்கங்களிலும் ஈடுபட்டான். அவனுடைய நண்பர்கள் யார் யார் என்று தெரிந்து கொண்டாலே அவன் எப்படிப் பட்டவன் என்று தெரிந்து கொள்ளலாம்.

பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறி வெளியேறிய மாசிலாமணி, கல்லூரியில் சேர்ந்து உதவிப் பணம் பெற்றுப் பட்டதாரியானான். பட்டம் பெற்றவர்களெல்லாம் தேடுகின்ற அரசாங்க பதவிகளைத் தேடியலைய வில்லை அவன். நாட்டுத் தொண்டு செய்யும்தேசிய இயக்கத்திலே சேர்ந்து பாடுபட்டான். அப்போது வெள்ளையர்கள் நாட்டையாண்ட காலம். நாட்டுத் தொண்டு செய்பவர்களை யெல்லாம் குற்றவாளிகளாகக் கருதியது அக்காலத்து அரசாங்கம்.

ஆட்சியை எதிர்த்து விடுதலை வேண்டிப் போராடிய காந்தியடிகள், பண்டித நேரு போன்ற தலைவர்களை யெல்லாம் பிடித்துச் சிறையில் அடைத்த அரசாங்கம், கடமை வீரன் மாசிலாமணியையும் விட்டு வைக்க வில்லை. தமிழ்நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத் தொண்டர் தலைவனாக விளங்கிய மாசிலாமணியையும் அரசாங்கம் சிறையில் வைத்தது. மாசிலா மணிக்குத் தண்டனை விதித்த நீதிபதி, அவன் மிகப் புரட்சிகரமான தேசபக்தன் என்று சொல்லிப்பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையளித்தார்.

இதற்கிடையில், பள்ளியில் மேற்கொண்டு படிக்காமலே ஆதிசேடன் படிப்பை நிறுத்தி விட்டான். ஒரே பிள்ளையான அவன். தறுதலையாகத் திரிவதைக் கண்ட அவனு டைய தந்தையும், அதே மனக் குறையால் நோய்வாய்ப் பட்டு இறந்துவிட்டார். அவர் இறந்தபின் இருந்த பணத்தையெல்லாம் சூதாடியும் பிற தீய வழிகளிலும் செலவிட்டு விரைவில் ஏழையாகி விட்டான் ஆதிசேடன். ஏழையான பின்னும் அவன் திருந்தவில்லை. கடைசியில் தீயவர்கள் சிலருடன் சேர்ந்து கொண்டு ஒரு வீட்டுக்குத் தீ வைக்கச் சென் றான். தீ வைத்ததோடு நில்லாமல் அந்த வீட்டைக் கொள்ளையடித்தார்கள். அப்போது தீவட்டியும் கையுமாக.அவனைப் பொலிஸார் பிடித்துவிட்டார்கள்.

கொள்ளையடிக்கச் சென்றதற்காகத் திருட்டுக் குற்றம் சாட்டி அவன்-மீது வழக்கு நடந்தது. வழக்கின் முடிவில் அவனுக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றது. சிறைத் தண்டனைக் காலம் முடிந்து ஒரு நாள் அவன் விடுதலையாகி வெளியே வந்தான்.

அப்போது சிறைச்சாலைக்கு வெளியே மக்கள் மூவண்ணக் கொடிகளுடனும், மலர் மாலைகளுடனும் கூட்டம் கூட்டமாக நின்றார்கள்.தேசபக்தர் ஒருவர் அன்று விடுதலையாகிப் போவதாகவும், அவரை வரவேற்கவே கூட்டம் கூடியுள்ளதென்றும் ஆதிசேடன் தெரிந்து கொண்டான்.

சிறைச்சாலையை விட்டு வெளியே வந்த ஆதி சேடனுக்கு அன்று சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்ற கவலை ஏற்பட்டது. அதே சமயம் அந்தத் தேசபக்தரை ஏற்றிச் செல்ல வந்திருந்த முத்துப் பல்லக்கைத் தூக்கி வந்தவர்களில் ஒருவன் கால் சுளுக்கிக் கொண்டதால் வேறு ஓர் ஆள் தேடிக் கொண்டிருந்தார்கள். பல்லக்குத் தூக்கினால் கிடைக்கக்கூடிய கூலிக்காக ஆதிசேடன் அந்த வேலையைத் தான் செய்வதாக முன்வந்தான்.

குறிப்பிட்ட நேரத்தில் சிறைச்சாலைக் கதவுகள் திறக்கப்பட்டன. உள்ளேயிருந்து மாசிலாமணி விடுதலையாகி வெளியில் வந்தான். தேசபக்தர்கள் திரண்டு சென்று அவன் கழுத்தில் மாலைகளைச் சூட்டினார் கள். அவனைப் பல்லக்கில் ஏற்றி, ஊருக்குள் அழைத்துச் சென்றார்கள். ஆதிசேடன் அவன் ஏறியிருந்த பல்லக்கைத் தூக்கிக் கொண்டே நடந்து சென்றான். தன்னோடு கூடப் படித்த மாசிலாமணியைத் தான் தூக்கிக் கொண்டு போகிறோம் என்று நினைத்த போது அவனுக்குத் துன்பமாயிருந்தது. ஆனால், எல்லாம் தானாகத் தேடிக் கொண்ட வினைதானே என்று தன்னைத்தானே நொந்து கொண்டான்.

கருத்துள்ள நல்ல வழியில் நடந்தால் பல்லக்கிலும் செல்லலாம். தீயவழியில் சென்றால் அதைச் சுமக்கத்தான் நேரிடும்.

மனித வர்க்கம் பரபரப்பான வாழ்க்கையை மேற்கொண்டு விட்டது. இதுவே கலியுகத்தின் முடிவு போலத் தோன்றுகிறது.

அடிப்படைப் பண்புகள், அடிப்படை நியாயங்கள் எல்லாம் தொட்டுக்கொள் என்றாகிவிட்டன. தாய்மை தன் பரிபூரண ஆதிக்கத்தையும் இழந்துவிட்டது. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதே குறைந்து விட்டது. கற்பு, அடக்கம், இவையெல்லாம் இலக்கியங்களோடு நின்றுவிட்டன. ஹோட்டல்களிலும் தெருக்களிலும் ஆண்களும், பெண்களும் இனந் தெரியாமல் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

வாகனங்களின் புகை, வானத்தை அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது. வியாபாரத்தில் நாணயம் அடியோடு படுத்துப்போய்விட்டது. பள்ளிகள், கல்லூரிகளின் ஒழுங்கீனம் வளர்ந்துவிட்டது. எல்லாமே போலித்தனம். மனித உடம்பில் பாதியும் போலி வேஷம். நான் நினைத்துப் பார்க்கிறேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு.... நகரங்களும் , கிராமங்களும் எவ்வளவு பரிசுத்தமாக இருந்தன. சென்னை நகரம் கூட எவ்வளவு அழகாகவும் அமைதியாகவும் காட்சியளித்தது. கிராமங்கள் எவ்வளவு நிம்மதியாக இருந்தன. தேர்த்திருவிழா, திருமணம் எல்லாமே எவ்வளவு ஜாம் ஜாம் என்று நடந்தன! பெரியவர்களுக்கு மரியாதை; கல்விக் கூடங்களில் பக்திப் பண்பாடுகள். காந்தி எப்போது ராஜ்யத்தை விரும்பினாரோ அப்போது கூடுமானவரை ராமராஜயமே நடந்து கொண்டிருந்தது. இப்போதோ? என்னதான் வாழ்க்கை வசதிகள் பெருகட்டும். பழைய பண்பாட்டின் சுகம் வரவே வராது.

ஆயிரம் ஷவர்பாத்கள் கட்டினாலும் ஆற்றிலே குளிக்கும் சுகமாகுமா? என்ன தான் மின்சார விசிறி ஓடினாலும் வேப்பமரத்துக் காற்றின் இனிமை வருமா?

போலித்தனமான நாகரிகத்தின் உச்சகட்டமே கலியுகத்தின் முடிவாக இருந்தால் கூட யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. நாகரிகத்தின் உச்சாணிக் கொம்பில் வாழ்ந்து பார்த்த அமெரிக்கர்கள் ஆன்மீகத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், ஆன்மீகத்தின் உச்சத்திலிருந்த இந்தியர்கள் போலி நாகரிகத்தைப் புகலிடமாகக் கொண்டுவிட்டார்கள்.

# கண்ணாடியின் பின்பக்கம்



கட்டுகின்ற வீடுகள் எல்லாம் காலால் உதைத்தால் பொல பொலவென்று உதிர்ந்து விழும்.

தலையை மொட்டையடித்துக் கொண்டு வாழ்ந்த என் தாத்தாவை விட இன்றைய ஹிப்பித் தலையர்கள் ஆரோக்கியமாகவா இருக்கிறார்கள்?

ஒரு மாத்திரையும் பாராமல் கண்மாயில் குளித்துக் கரையில் உலாவிய என் தந்தையைவிட, நான் ஆரோக்கியமாகவா இருக்கிறேன்? வாழ்க்கையைச் சுலபமாக்குவதற்காக வந்த வசதிகள் அதைப் போலித்தனமாக்கி விட்டன.

பெண்ணுக்குப் பெண்மையும் போய் ஆடவனுக்கு ஆண்மையும் போய், வெள்ளம் போகிற வேகத்தில் எல்லோருமே போய்க் கொண்டிருக்கிறோம். 'அத்தனையும் மோசமானவை' என்று நான் மொத்தமாக ஒதுக்கி விடவில்லை. சில பயனுள்ள வசதிகளும் வந்திருக்கின்றன. அவை எண்ணிக்கையில் மிக மிகக் குறைவு.

நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் உலகம் அழிவை நோக்கியே போய்க் கொண்டிருக்கிறது.

எனது தலைமுறை முக்கால் தூரத்தைக் கடந்து விட்டது. நான்தப்பிவிட்டேன். ஆனால் என் குழந்தைகள்...?

ஒரு இட்லி பத்து ரூபாய் விலையாவதை அவை பார்க்கப் போகின்றன. அச்சம், நாணம் இல்லாத உலகத்தில் அவை வாழப் போகின்றன. தனி மனிதனின் சாப்பாட்டுச் செலவே மாதம் இரண்டாயிரம் ரூபாயை எட்டும் கோரத்தை அவை காணப் போகின்றன.

எல்லாமே தாறுமாறாக ஒரு காட்டுமிராண்டிக் காலத்தை அவை எதிர் நோக்கி நிற்கின்றன. என் பேரக் குழந்தைகள் அதிருஷ்டக்காரர்கள். காட்டுமிராண்டிகளாகவே வாழ்ந்து பார்க்கிற வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கப் போகிறதல்லவா? ✱✱✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியும் பாடலும் நிறைந்திருந்த இனியவாழ்வு இல்லம் கொடும்போரினால் இப்பொழுது சிதைந்து போயிருக்கிறது

அந்தப் பிள்ளைகளிடம் இருக்கும் வலிமை எங்க ளிடம் இருப்பதில்லை. அவர்களிடம் இருக்கும் ஒளி எங்களிடமிருப்பதில்லை. அவர்களிடம் இருக்கும் பாடல் எங்களிடம் இருப்பதில்லை. அவர்களிடம் இருக்கும் மொழி எங்களிடமிருப்பதில்லை. இப்படி எங்கள் தேசத்தின் நம்பிக்கை ஊட்டுகிற இனிய வாழ்வு இல்லத்தின் பிள்ளைகளைச் சந்திக்க நேர்ந்தது.

இனிய வாழ்வு இல்லத் தலைவர் ராஜ்குமார் புது வருடத்துக்கு முதல்நாள் மாலைநேரம், பிள்ளைகள் அணியும் புதுவருடத்திற்கான ஆடைகளை வேண்டிக்



கொண்டு, கைதடியில் தற்காலிகமாக உள்ள விழி, செவிப்புலனற்ற பிள்ளைகளின் இல்லத்தில் தங்கி யிருக்கும் தனது பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக வந்து கொண்டிருந்தார். அந்தப் பிள்ளைகள் மகிழ்வு டன் இருக்க வேண்டும், நாளைய புதுவருடத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்று ராஜ்குமார் செலுத்தும் அன்பும் அக்கறையும் மிகவும் மதிக்கப்பட வேண்டியது.

1997இல் மாசிலாமணி என்ற விழிப்புலனற்றவரால் இந்த இல்லம் தொடங்கப்பட்டது. கிராமசேவையாளராக இருந்த மாசிலாமணி தனது சொந்த முயற்சியால் விழிப்புலனற்று செவிப்புலனற்று ஆதரவற்று அலைந்த குழந்தைகளைத் தேடி தனது இல்லத்தில் சேர்த்து வைத்தார். ஓலைக்கொட்டில் ஒன்றில் எட்டுப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டு அந்த இல்லத்தை அவர் தொடங்கினார். நாளடைவில் மாற்று வலுவுள்ள பிள்ளைகள் தங்கள் படிப்பு மற்றும் எதிர்காலம் என்பவற்றைக் கருதி இனிய வாழ்வு இல்லத்தில் சேர்ந்து கொண்டார்கள். இந்தப் பிள்ளைகள் எமது சமூகத்தில் தங்களை அடையாளங் காட்டுவது அல்லது அதன் ஓட்டத்தில் எப்படி இணைத்துச் செல்வது என்ற உபாயங்களை அவர்கள் இனிய வாழ்வு இல்லத்தில் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

பல்கலைக்கழகத்தில் இந்த இல்லத்தைச் சேர்ந்த



மாணவர்கள் பலர் படித்தார்கள். உண்மையில் அவர்கள் நாங்கள் படிக்கும் விடயங்கள் குறித்து எழுப்பும் கேள்வி அது பற்றி கொண்டிருக்கும் எழுச்சிகரமான எதிர்பார்ப்பு என்பன எங்களிடமிருக்கும் சோம்பலைப்போல இருப்பதில்லை. அது ஆழமான கேள்விகளைக் கொண்டது. எப்பொழுதும் விழித்திருக்கும் ஆர்வத்தின்பாற்றப்பட்டது. விரிவுரைகளின் பொழுது நாங்கள் எங்கோ நிற்க அவர்கள் வகுப்பறைக்குள் எப்பொழுதும் நிற்பார்கள். அப்படியான உபாயங்களையும் விழிப்பு நிலைகளையும் அவர்கள் கொண்டிருந்தார்கள். அவர்களின் விசேடமான ஆளுமைகளாக அவை இருக்கின்றன.

இனிய வாழ்வு இல்லத்தில் படித்த மாணவர்களில் பலர் 2000ஆம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதர பத்திர சாதாரணதரப் பரீட்சை எழுதினார்கள். பின்னர் உயர்தரம் படித்த பிள்ளைகளில் யசோதரன், அனுராதா, சிவகுமார், இராஜகுமார் என நான்கு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியிருந்தார்கள். விழிபுலனற்ற இந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியிருந்தது இனியவாழ்வு இல்லம் கொண்டிருந்த நம்பிக்கையைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியது. நம்பிக்கையின் அர்த்தம் வெளித் தெரிந்தது. இதில் சித்தியடைந்த யசோதரன் என்ற விழிப்புலனற்ற சிறுவன் எங்கோ இருக்கிறான் என்பதை அறிந்த மாசிலாமணி பாய்ந்து கொண்டிருக்கும் பாலியாற்றைக் கடந்து சென்று அவனை இல்லத்திற்கு கூட்டிக்கொண்டு வந்தார். யசோதரன் போன்ற மாணவர்கள் இப்படிச் சாதனை செய்திருப்பதை மாசிலாமணி அவர்கள் தாய் தந்தையாக இருந்து அந்த வெற்றியில் ஆறுதல் பெற்றுக் கொண்டிருந்தார். தொடர்ந்து 2003இல் சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த ப.இராசகுமார், அ.சந்திரகுமார், ஆ.நகுலேஸ்வரன் முதலானவர்களும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி தற்பொழுது படித்துக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது 9 மாணவர்கள் உயர்தரத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படித் தனது பயணத்தை வெற்றிகரமாக இனியவாழ்வு இல்லம் நடத்திக் கொண்டிருந்தது. போர் எப்பொழுதும் இரையாக்கிக் கொண்டிருந்த வன்னிப் பெருநிலத்தில் முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் இனியவாழ்வு இல்லம் ஆரம்பித்து இயங்கிக் கொண்டிருந்து. வன்னியில் லட்சக்கணக்கானவர்கள் நிலம்பெயர்ந்து அலையத் தொடங்கியபொழுது தனது பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு மாசிலாமணி நடக்கத் தொடங்கினார். அப்பொழுது 150 வரையான பிள்ளைகள் இந்த இல்லத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிள்ளைகள் தங்களிடமிருந்த பொருள்களை எல்லாம் சுமந்து கொண்டு அலையத் தொடங்கினார்கள். சில பிள்ளைகளின் கண்களுக்கு அங்கு நடந்த கொடுமையான சண்டைகள், இரத்தங்கள், சதைகள் தெரியாமலிருந்தன. எதுவும் தெரியாமல் அவற்றின் கொடுமையான ஓசைகளை கேட்டபடி அவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். சில பிள்ளைகள் குண்டுகளின் சத்தங்கள், ஷெல்களின் சத்தங்கள், அழுகைகள் என்பனவற்றை கேட்காமல் எந்தச் சத்தமுமில்லாது தங்களுக்கும் முன்னால் நடக்கும் கொடுமைகளைப் பார்த்தபடி அவற்றுக்கு உள்ளாக்கப்பட்டபடி சென்று கொண்டிருந்தார்கள்.

வழியில் காயங்களுக்கும் மரணங்களுக்கும் முகம் கொடுத்தபடி அவர்கள் செல்கிறார்கள். அந்தப் பிள்ளைகளைக் காத்துவந்த மாசிலாமணி அவர்கள் ஷெல் தாக்குதலினால் பலி கொள்ளப்படுகிறார். பிள்ளைகள் ஆதரவற்று அனாதைகளாகின்றனர். இறுதியில் சமர் மிகத் தீவிரம் அடையும் பொழுது பெற்றோர்களுடன் பிள்ளைகள் எல்லோரும் சிதறியபடி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லுகிறார்கள். இப்பொழுது ஏற்கனவே பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மேலும் பாதிப்புக்களுடன் இழப்புக்களுடன் எங்கெங்கோ இருக்கிறார்கள். அவர்களை இணைத்து மீண்டும் இல்லத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை ராஜ்குமார் தொடங்கியிருக்கிறார்.

ராஜ்குமார் யாழ்.பல்கலைக்கழகத்தில் மூன்றாம் வருடத்தில் படித்துக் கொண்டிருக்கிறார். மாசிலாமணியின் ஆத்மா அமைதியடைய வேண்டும் என்றால் அந்த இல்லத்தை மீள உருவாக்க வேண்டும் விழிபுலனற்ற செவிப்புலனற்ற பிள்ளைகள் படித்து அவர்களின் எதிர் காலம் பயன் பெற வேண்டும். அதற்காக என் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிப்பேன் என்று கூறுகிறார். இனிய வாழ்வு இல்லம் என்னை அப்படியான ஒரு மனிதனாகவே வளர்த்திருக்கிறது என்று கூறும் ராஜ்குமாரின் கதையோ மிகுந்த துயரமானது.

ராஜ்குமார் யுத்தத்தினால் தனது பார்வையை இழந்தவர்.



அம்பலகாமத்தி லிருந்து இராணுவம் ஷெல்களை வீசும் பொழுது அந்த ஷெல் வீச்சில் ராஜ்குமாரின் தந்தை பலி கொள்ளப்பட்டார். பின்னர் தாயாரும் நோயாளியாக இறந்து போயிருந்தார். அதன் பிறகு வீட்டுக்கு ஒரே பிள்ளையான ராஜ்குமார் ஆதரவற்ற அனாதைச் சிறுவனாகி விடுகிறார். 5ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக் கொண்டு மாடு மேய்க்கும் தொழில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் ஷெல் தாக்குதலில் அவரது இரண்டு கண்களும் காயத்திற்கு உள்ளாகி பார்வை இழந்து போய்விட்டது.

கண்களை இழந்து இனிய வாழ்வு இல்லத்திற்கு வந்து சேரும் ராஜ்குமார் அந்த இல்லம் அவருக்கு கொடுத்த நம்பிக்கை செறிந்த கல்வியால் சாதாரண தரம் உயர்தரம் என்று படித்து சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினார். இப்பொழுது அதன் இயக்குனராகி சிதைந்த இல்லத்தை மீள ஒருங்கிணைக்கவும் அல்லது சிதறுண்ட பிள்ளைகளை மீள இணைக்கவும் தனது பணிகளைத்



தொடங்கியிருக்கிறார். சில பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் இருக்கிறார்கள். யாரும் இல்லாதவர்களும் இழப்புக்களை சந்தித்தவர்களும் இப்பொழுது கைதடியில் உள்ள இல்லம் ஒன்றில் தற்காலிகமாகத் தங்கியிருக்கிறார்கள். எங்கள் பிள்ளைகள்; உடுப்பதற்கு உடுப்பில்லாமல், உண்பதற்கு உணவு இல்லாமல், இருப்பதற்கு இடமில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்று ராஜ்குமார் மிக வேதனையுடன் குறிப்பிடுகிறார்.

அவர்கள் தற்காலிகமாக தங்கியுள்ள அந்த இல்லத்தில் புதிய ஆடைகளை பெறுவதற்காக பிள்ளைகள் எல்லோரும் ஒன்று கூடியிருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வாய்பேசாத பிள்ளைகள் உரையாடும் மொழி மனதை அவர்கள் பக்கம் இழுத்துக் கொண்டிருந்தது. அவர்களின் உடையின் அளவு, உடைகளின் விருப்பம் போன்றவற்றுக்கு ஏற்ப அவர்களுக்கான உடைகள் வாங்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு முன்னால் நான் பேசும் பொழுது தைரியத்தை இழந்து போயிருந்தேன். நீங்கள் தைரியமானவர்கள், ஒளி பொருந்தியவர்கள், பாடல் நிறைந்தவர்கள், உங்களிடமிருக்கும் தைரியம், ஒளி, பாடல் என்னிடம் இல்லை என நான் மிக மனம் கலங்கி சில வார்த்தைகளை பகிர்ந்தேன். நான் சொல்பவற்றை வாய்பேசாத குழந்தைகளுக்கு பிரமிளா என்ற கண் பார்வை குறைந்த பிள்ளை ஒன்று அவர்களுக்குரிய மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் ஒவ்வொருவரும் என்னுடன் உரையாடத் தொடங்கினார்கள். விஜலாதன் என்ற மாணவன் இப்பொழுது சாதாரண தரத்தில் படித்துக் கொண்டிருக்கிறான். அவனின் தந்தை சுதந்திரபுரத்தில் (23.01.2009) இடம்பெற்ற ஷெல்தாக்குதலினால் உயிரிழந்து போனார். அண்ணா பிறப்பிலேயே கால் வலுவற்றவர். தம்பி, அக்கா, இவர்களுடன் அம்மா கொக்குவிலில் தற்காலிக வீடு ஒன்றில் தங்கியிருக்கிறார் என்று

தீபச்செல்வன்

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்

வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உங்களின் சில வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். பெண்கள் உடன் பிறந்தவர்களின் உதவிகளைப் பெறலாம். சிறு உடல் உபாதைகளால் உற்சாகம் குறைந்து சோர்வு, வெறுப்பு ஆட்கொள்ளும்.

### இடபம்

மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்ப வரலாம். காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அரசு தொடர் பான காரியங்களில் அலைச்சல், திரிச்சல் ஏற்படலாம். கனவு கள் பலிக்கும்.

### மிதுனம்

பணம் கொடுத்தும் சில விடயங்களில் கஷ்டங்களைச் சந் திக்கலாம். கவனக்குறைவான செயற்பாடுகளால் சில வேலை களை ஒன்றுக்கு இரண்டு முறை செய்யலாம். சக ஊழியர் களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் உண்டாகும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். திடீர் செலவு உண்டு.

### கடகம்

பாதகமாகுமோ என நினைத்த காரியம் ஒன்று சாதகமாக அமைந்து விடலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவர். தவறு என, தெரிந்தும் சில காரியங்களைத் துணிச்சலாக செய்வீர்கள்.

### சிங்கம்

தொழில் ரீதியான நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். சிலர் உடல் நலக்குறைவால் விடுமுறை எடுக்கலாம். கலைஞர்கள் திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். தொழில் ரீதியாக சிலர் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். நீங்கள் நல்லவர் என, நினைத்த ஒருவரே விரோதமாக செயற்படுவது கண்டு வருத்தம் அடையலாம்.

### கன்னி

காலதாமதமாக சில வேலைகளை தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப் பீர்கள். வியாபாரிகளுக்கு பணப் புழக்கம் கூடும். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக் களைத் தவிர்க்க வேண்டும். விவசாயிகள் விளைபொருட்கள் விற்பனையால் லாபம் அடையலாம். தொழிலில் புதியவர்கள் அறிமுகம் கிட்டும்.

### துலாம்

உறவினர்கள் சிலர் உங்கள் மூலம் ஆதாயம் பெறலாம். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை வழியில் உருவான சிரமங்கள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். ஆனைமுகன் வழிபாடு ஆறுதல் தரும்.

### விருச்சிகம்

அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். ஓய்வாக கிடைக்கும் நேரத்தை வீணடித்து விட்டு பின்னர் அவசரமாக செயற்படுவீர்கள். பிரியமான ஒருவர் மூலம் உதவிகள் கிடைத்து பெருமை அடைவீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணியாற்றலாம்.

### தனுசு

புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பற்றாக்குறையைத் தவிர்க்க செலவுகளில் நிதானம் காட்ட வேண்டும். பிறரை நம்பி ஒப்படைத்த வேலை முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்ய் நேரிடலாம்.
உறவினர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படலாம்.

### மகரம்

தண்டச் செலவுகளைக் குறைத்து சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். வரவேண்டிய பண வரவுகள் வரலாம். நீங்கள் கேட்காமலேயே சில உதவிகள் உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆனந்த மான நாள்.

### கும்பம்

குடும்ப உறுப்பினர்களுடன் ஆலோசித்து சில முக்கிய காரியங்களைச் செய்வீர்கள். மற்றவர்களும் ஆதாயம் பெறட்டும் என்ற எண்ணத்தில் சில விஷயங்களில் செயற்படுவீர்கள். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்ப்பீர்கள். நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள்.

### மீனம்

மற்றவர்கள் பாணியை பின்பற்றாமல் நீங்கள் தனித்தன்மையோடு செயற்படுவீர்கள். கடந்த காலத்தில் விமர்சித்த ஒருவரே இப்போது உங்களைப் பாராட்டலாம். பிறரை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். தூக்கமின்மையால் அவதிப்படலாம். சிலரிடம் கோபம், வேகமாகப் பேசுவீர்கள். தடுமாற்றங்கள் நேரும்.

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்:மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

*2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.*



## ஜெயந்தி அருளானந்தம்
### வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

எனது பெயர் ஜெயந்தி அருளானந்தம். அப்பாவின் தொழில் விவசாயம். நான் ஆரம்பக் கல்வியை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கற்று வந்தேன். புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளேன். எனது பாடசாலையில் நான் முதலாம் இடத்தையும் பெற்றேன். பின்னர் தரம் 6 இல் இருந்து வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றேன். நான் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் கூடுதலான பெறுபேற்றை எதிர்பார்த்தேன். எனினும் 5ஏ,2பி,2சி கிடைத்துள்ளது. இதற்கு முதலில் இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு பெற்றோர், சகோதரர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்வி நிலைய ஆசிரியர்கள், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் துணைபுரிந்தனர். பரீட்சைக்கு முன்னர் மாதிரி வினாத்தாள்களைச் செய்து பார்த்து என்னைத் தயார்ப்படுத்திக் கொண்டேன். மாதிரி வினாத்தாள்களைச் செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகளை ஆசிரியர்களிடம் கேட்டு விளங்கிக் கொண்டேன். பரீட்சையின்போது மழைக்காலமாக இருந்ததால் பரீட்சைக்குச் சென்று வருவதும், பரீட்சை எழுதுவதும் கடினமாக இருந்தது. மற்றும் அதிக நேரம் கண் விழித்து படிப்பதும் கஷ்டமாக இருந்தது. எனினும் அவற்றைச் சமாளித்து என்னால் முடிந்தவரை கண்விழித்துப் படித்து, அதிகாலையிலும் எழுந்து படித்து பரீட்சைக்குத் தோற்றினேன். தற்போது நான் உயர்தரத்தில் வணிகத்துறையைத் தெரிவு செய்துள்ளேன்.இத்துறையில் அதிக பெறுபேறுகளைப் பெற்று கணக்காளர் ஆவதே எனது இலட்சியம் ஆகும். இச் சந்தர்ப்பத்தில் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எனது குடும்பத்தவர்களுக்கும் உறவினர்கள், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## தனுஷா குலநாதன்
### வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

எனது ஆரம்பக் கல்வியை நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையில் கற்றேன். 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் [illegible] புள்ளிகளைப் பெற்று எனது தற்போதைய பாடசாலைக்குள் நுழைந்தேன். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இப்பெறுபேற்றை நான் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தேன். இந்தப்பெறுபேற்றைப்பெற எனக்குத் துணைநின்ற எனது பாடசாலைக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பரீட்சைக்குப் படிக்கும்போது முக்கிய பாடத் தொகுதிகளைப் படித்தும், ஆசிரியரின் துணையுடன் கடந்தகால வினாப் பத்திரங்களை பயிற்சி செய்தும் படித்துக் கொண்டேன். ஞாபகசக்தியின்மை,தலைவலி,பதற்றம் ஆகிய சிக்கல்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்தும்போதும் பரீட்சையின் போதும் எதிர்கொண்டேன். இறுதி நேரம் படித்த பாடங்களை வைத்துக்கொண்டு பரீட்சையை எதிர்கொண்டேன்.உயர்தரத்தில் வர்த்தகத் துறையைத் தெரிவு செய்துள்ளேன். எதிர்காலத்தில் மக்களுக்கு சேவையாற்றக்கூடிய ஒரு தொழிலில் பணிபுரிய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.



## உஷ்சாந்தி புலேந்திரராஜ்
### வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

எனது பெயர் உஷ்சாந்தி புலேந்திரராஜ். யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கல்வி பயில்கின்றேன். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் எனது பெறுபேறான 5ஏ, 2பி, 2சி ஐ நான் எதிர்பார்க் கவில்லை. ஆனால் நான் ஒவ்வொரு பாடமும் பரீட்சை நடைபெற்று முடியும் போது அண்ணளவாக என்ன முடிவு வரும் என ஓரளவு கணித்துவிடுவேன். அந்தக் கோணத்தில் நான் எதிர்பார்த்ததை விட சிறிது வேறுபட்டு உள்ளது. இதனால் எனக்கு எந்தவித தாக்கமும் ஏற்படவில்லை. காரணம், நாம் ஆங்கிலமொழி மூலத்தில் பரீட்சை எழுதியமையும் , விருப்பத்திற்குரிய பாடங்களில் தரமான பாடங்களைத் தெரிவு செய்தமையுமே ஆகும்.

இப் பெறுபேற்றை நான் பெறுவதற்கு எமது பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், பாட ஆசிரியர்களும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியரும், பிற பாட ஆசிரியர்களும் உறு துணையாய் இருந்தார்கள். என் அப்பா ஒரு கட்டடத் தொழிலாளி [ மேசன் ] என் அம்மா வீட்டுப்பணி செய்கிறார். இதனால் வீட்டில் சொல்லித் தருவதற்கென யாரும் இல்லை. இருந்தாலும் படிப்பதற்குரிய சூழலை எனக்கு ஏற்படுத்தித் தந்தார்கள்.

பரீட்சைக்கென்று நான் எதையும் தயார் செய்யவில்லை. கடினமாக இருக்கும் பாடங்களை காலையில் படிப்பேன். சிறு குறிப்பு எடுத்துப் படிக்கும் பழக்கம் இல்லை.

பொதுவாக எல்லாப் பாடங்களையும் பரவலாகப் படித்து உள்ள அறிவோடு பரீட்சைகளை எழுதுவேன். கடந்தகால வினாத்தாள்களை விட மாதிரி வினாத்தாள்கள் செய்வதில் ஏதோ எனக்கொரு ஆர்வம்.

பரீட்சைக் காலங்களில் கற்றலுக்கேற்ற வசதியை வீட்டிலும், கற்பதற்கு கற்றல் விடுமுறையை பாடசாலையிலும் செய்து தந்தார்கள். உடல் நலக்குறைவைத் தவிர வேறு எந்தச் சிக்கலும் எனக்கு ஏற்படவில்லை.

க.பொ.த உயர் தரத்திற்கு என் எதிர்கால இலட்சியத்திற்கேற்ப உயிரியல் துறையினைத் தெரிவு செய்துள்ளேன். எனது எதிர்கால இலட்சியம் ஒரு பெண்ணியல் வைத்திய நிபுனராக [Gynaecologist ] வரவேண்டும் என்பதுதான்.

இது என் சிறுவயதில் இருந்து மனதில் எழுந்த இலட்சியம் ஆகும்.நான் இப்புள்ளிகளை பெற உதவிய அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைக் கூறுகின்றேன்.

நேர்காணல்: வடநம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கீடு -01, பகுதி I: தொடர்ச்சி....

24. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது மூடப்படுகின்ற ஏதாவது ஒரு கணக்கைக் குறிப்பிட்டு அக்கணக்கை மூடுவதற்கான பதிவுகளைத் தருக.

| கணக்கு | மூடும் பதிவு |
|---|---|
| .............................. | .............................................................. |
| .............................. | .............................................................. |

25. பின்வரும் நிதிக்கூற்றுக்களின் கூறுகளுக்குரிய நோக்கங்களைக் குறிப்பிடுக.
ஐந்தொகை ..................................................................
வருமானக் கூற்று ..................................................................
உரிமைமாற்றல்கூற்று ..................................................................

26. ஆயுட்கால அங்கத்துவம் பெற்ற ஓர் அங்கத்தவர் பணம் செலுத்தப்பட்ட காலம் முடிவடைய முன்னர் இறப்பாராயின், அத்தொகைக்கான நாட்குறிப்புப் பதிவைத் தருக.
..................................................................................................

27. பின்வரும் கணக்குகளைத் தயாரிப்பதற்கான பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக.

| கணக்கு | நோக்கம் |
|---|---|
| 1) கொள்ளல் கொடுத்தல் கணக்கு | .............................. |
| 2) வருமானச் செலவுக்கணக்கு | .............................. |

28. 01.01.2003 இல் 80,000/= கொள்விலையான இயந்திரமொன்று வாங்கப்பட்டது. அதனைக் கொண்டுவரும் லொறிக்கூலியாக 4,000 ரூபாவும் பொருத்துதல் கூலியாக 12,000 ரூபாவும் செலுத்தப்பட்டது. இயந்திரத்தின் ஆயுட்காலம் 6 வருடாங்கள் எனவும் எஞ்சிய பெறுமதி 6,000/= எனவும் தீர்மானிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுத்தொகை யாது?
..................................................................................................

* **29ஆம், 30ஆம் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குப் பின்வரும் தகவல்களைப் பன்படுத்துக.**

| | 31.12.2008 | 31.12.2009 |
|---|---|---|
| மூலப்பொருள் | 60,000 | 70,000 |
| குறைவேலை (மூலச்செலவில்) | 90,000 | 40,000 |
| 2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவுகள் | | |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 670,000 | |
| திருப்பி அனுப்பிய மூலப்பொருட்கள் | 30,000 | |
| மூலப்பொருட்களுக்கான உட்ச்சுமைக்கூலி | 20,000 | |
| நேர்ச்செலவுகள் | 70,000 | |

29. 2009 இல் மூலப்பொருள் பாவனை ரூ. ..............................................
30. 2009 ஆம் ஆண்டில் மூலச்செலவு ரூ. ..............................................

* **31-36 வரையான கூற்றுக்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.**

31. நிறுவனங்களின் நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்காகவும், முறையாகவும் கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்தல் .............................................. ஆகும்.

32. நிலையான சொத்து கடன் கொள்வனவு, கடன் விற்பனை என்பவற்றைப் பதிவு செய்யப் பயன்படும் மூலப்பதிவுப் புத்தகம் .................................. ஆகும்.

33. வியாபார நிறுவனம் ஒன்றின் நடைமுறைச்சொத்துக்கள் ஐந்தொகையில் ........... ................ என்ற ஒழுங்குமுறையில் சாதாரணமாக ஒழுங்கமைக்கப்படுகின்றன.

34. தேவை குறிப்பிடப்பட்டு பெறப்படுகின்ற நன்கொடை .......................... ஆகும்.

35. கொடுக்கல்வாங்கல்கள், நிகழ்வுகள், நிலைமாற்றங்கள் என்பன கணக்கீட்டின் .............................. எனப்படும்.

* **36-40 வரையான கூற்றுக்கள் சரியாயின் ''சரி'' எனவும் பிழையாயின் ''பிழை'' எனவும் குறிப்பிடுக.**

36. பரீட்சைமீதி இணங்காமைக்கு வெளிக்காட்டும் வழுக்கள் மட்டுமே காரணமாகும். (...............)

37. நிலையான சொத்தின் கொள்விலையில் இருந்து இழிவுப் பெறுமதியைக் கழிக்க வருவது பெறுமானத்தேய்வு மதிப்பு ஆகும். (...............)

38. ஆரம்ப இருப்பு குறைவாக மதிப்பிடப்படின் அக்காலப்பகுதியில் தேறிய இலாபம் குறைவாகக் காணப்படும். (...............)

39. பங்காளரது இலாபநட்டப் பகிர்வானது அவர்களின் மூலதன விகிதப்படி அமையும் பொழுது மூலதனவட்டி வழங்குவது அவசியமற்றது. (...............)

40. நிகழ்காலப் பொறுப்புக்கள் பொதுவாக ஐந்தொகையில் பிரதிபலிக்கப்படும். (...............)

## கணக்கீடு - 01 பகுதி - II

* **முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

01. பாலா, சிவா, சேது பங்குடைமையில் இலாபநட்டங்களை 2:2:1 என பகிரும் பங்காளர்கள் ஆவர். அவர்களது பங்குடைமை உடன்படிக்கை பின்வருமாறு:
* மூலதன வட்டி ஆண்டுக்கு 12% வழங்கப்படும்.
* பங்காளர் மாதச்சம்பளம் தலா ரூபா 20,000.
* எடுப்பனவுகளுக்கு ஆண்டுக்கு 12% வட்டி அறவிடப்படும்.

2008 செப்டம்பர் 30 இல் சேது ஓய்வுபெற்றார். பாலா, சிவா ஆகிய இருவரும் தொடர்ந்தும் பங்குடைமையினைக் கொண்டு நடத்துவதுடன் முன்னைய ஒப்பந்தத்தினை மாற்றமின்றி பின்பற்றுவர். பங்குடைமை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 இல் ஏடுகளை மூடுகின்றது.

1) 2008 செப்டம்பர் பங்குடைமையின் மொத்த நன்மதிப்பு 200,000. எனினும், நன்மதிப்புக்கென புறம்பான கணக்குகள் ஏடுகளில் பராமரிக்கப்படமாட்டாது. தேவையான சீராக்கங்கள் நடப்புக்கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
2) 2008 செப்டம்பர் பங்குடைமையின் சொத்துக்கள் பின்வருமாறு மீளவிலை மதிக்கப்பட்டன. புதிய பெறுமதிகள் ஏடுகளில் பிரதிபலிக்கப்படும்.

| | ரூபா |
|---|---|
| நிலம் | 3,600,000 |
| தட்டடம் | 3,500,000 |
| உபகரணங்கள் | 260,000 |

3) சேதுவிற்கு சேரவேண்டியத் தொகை பங்குடைமையில் ஒரு நீண்டகால கடனாக ஆண்டிற்கு 10% வட்டியில் பிரதிபலிக்கப்படும்.
4) 2008 ஒக்டோபர் 01 இல் இருந்துதொடர்ந்திருக்கும் பங்காளர் மூலதனக் கணக்கு நிலுவைகளை தலா ரூபா 2,500,000 ஆக பராமரிப்பதெனவும், குறை அல்லது மிகை நடைமுறைக்கணக்கினூடாக சீராக்கப்படும்.
5) 2009 மார்ச் 31 இல் பங்குடைமையின் பரீட்சைமீதி (சேதுவின் இளைப்பாறல் தொடர்பான எத்தகைய சீராக்கங்களையும் மேற்கொள்ளும் முன்னர்) பின்வருமாறு:

| விவரம் | வரவு 000' | செலவு 000' |
|---|---|---|
| பங்காளர் மூலதனக் கணக்கு (2008.04.01) | | |
| - பாலா | | 2,000 |
| - சிவா | | 1,800 |
| - சேது | | 1,200 |
| பங்காளர் நடைமுறைக் கணக்கு (2008.04.01) | | |
| - பாலா | | 300 |
| - சிவா | 50 | |
| - சேது | | 98 |
| பங்காளர் எடுப்பனவுகள் | 540 | |
| விற்பனைகள் | | 8,400 |
| விற்பனைக் கிரயம் | 4,560 | |
| கையிருப்புக்கள் 31.03.2009 | 485 | |
| சம்பளமும் கூலியும் | 584 | |
| மின்கட்டணமும், காப்புறுதியும் | 250 | |
| நிலம் - கிரயத்தில் | 3,200 | |
| கட்டடம்- கிரயத்தில் | 3,600 | |
| அலுவலக உபகரணங்கள் - கிரயத்தில் | 600 | |
| திரண்டத் தேய்வு (2008.04.01) வரை | | |
| - கட்டடம் | | 400 |
| - அலுவலக உபகரணம் | | 240 |
| வியாபார வருமதிகள், சென்மதிகள் | 680 | 1,002 |
| ஐயக்கடன் ஏற்பாடு (2008.04.01) | | 60 |
| காசும் வங்கி மீதியும் | 951 | |
| | 15,500 | 15,500 |

உமக்கு பின்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்படுகின்றன.

1. விற்பனைகளும், இலாப உழைப்பும் ஆண்டு முழுவதும் சீராகக் காணப்பட்டன.
2. 2009 மார்ச் 31 இல் அட்டுறுக்களும், முற்பணங்களும் வருமாறு:

| | அட்டுறுக்கள் (ரூபா) | முற்பணம் (ரூபா) |
|---|---|---|
| மின்கட்டணமும் காப்புறுதியும் | 10,000 | - |
| கூலியும் சம்பளமும் | 19,000 | 3,000 |
| | 29,000 | 3,000 |

பெறுமானத்தேய்வானது பங்காளர் ஓய்வுக்கு முன்னர் கிரயத்திலும், ஓய்வின் பின்னர் மீள்விலைமதித்தல் பெறுமதியிலும் ஆனால், அதே சதவீதத்தில் மேற்கொள்ளப்படும்.
கட்டடம் 5% ,அலுவலக உபகரணம் 20%

ஐயக்கடன் ஏற்பாடானது கடன்படுநரில் 10% பராமரித்து வருவது வழக்கம்.
2008 செப்டம்பர் 30 இல் கடன்பட்டோர் நிலுவை ரூபா 740,000.
பங்காளர் பற்றுக்களின் பகுப்பாய்வு வருமாறு:

| | ரூபா |
|---|---|
| பாலா | 240,000 |
| சிவா | 200,000 |
| சேது (2008.09.30) | 100,000 |
| | 540,000 |

வருமானம், செலவுகள் என்பன குறித்த காலப்பகுதிக்கென இனங்காணப்பட்டவை தவிர்ந்த ஏனைய அனைத்தும் கால அடிப்படையில் பகிர்க.

**வேண்டப்படுபவை:**

1) மீள்மதிப்பிடல் கணக்கு.
2) 2009 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இ.நட்டப் பகிர்வு க/கு.
3) பங்காளர் மூலதனக் கணக்குகள்.
4) பங்காளர் நடைமுறைக்கணக்குகள்.
5) 2009.03.31 இல் உள்ளவாறான ஐந்தொகை.

02. அ. பிரியங்கா வியாபாரத்தில் எழுந்த கொடுக்கல்வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டு வடிவத்தில் கீழே தரப்பட்டுள்ளன.

| | உரிமையாளர் மூலதனம் + | பொறுப்பு = | சொத்துக்கள் |
|---|---|---|---|
| 01) | குறைவடைதல் | - | குறைவடைதல் (நடைமுறையல்லாச் சொத்துக்கள்) |
| 02) | குறைவடைதல் | அதிகரித்;தல் | - |
| 03) | அதிகரித்தல் | - | அதிகரித்தல் (கடன்பட்டோர்) |
| 04) | குறைவடைதல் | - | குறைவடைதல் (இருப்பு) |
| 05) | குறைவடைதல் | - | குறைவடைதல் (காசு) |
| 06) | அதிகரித்தல் | - | அதிகரித்தல் (காசு) |
| 07) | - | அதிகரித்;தல் | அதிகரித்தல் (காசு) |
| 08) | - | - | குறைதல் (காசு) |
| 09) | அதிகரித்தல் | - | குறைவடைதல் (நடைமுறையல்லாச் சொத்துக்கள்) அதிகரித்தல் (காசு) |
| 10) | - | அதிகரித்த;ல் | அதிகரித்தல் (இருப்பு) |

இக்காலத்தினுள் உரிமையாளர் காசாக மேலதிக மூலதனமிடலையோ அல்லது பற்றுதலையோ மேற்கொண்டிருக்கவில்லை.

**வேண்டப்படுவது:**

இடம்பெற்றிருக்கக்கூடிய கொடுக்கல்வாங்கல்களைக் குறிப்பிடுக.

ஆ. பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்களும் சில கணக்கீட்டு வழிகாட்டிகள், நடைமுறைகள் என்பவற்றையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணா அடகு கடை

இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல: J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு (28.02.2009) இற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாமல் இருக்கும் அடகு நகைகள் யாவற்றையும் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதிக்கு (15.05.2010)க்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதிப் பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.05.2010 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212225046 (சி/566907)

உரிமையாளர்.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் தங்கராஜா
ரமணன்

தோற்றம் 11.03.1972 மறைவு 26.04.2007

ஆண்டுகள் மூன்றானாலும் ஆறாது எம்வேதனை
நீண்டதூரம் போனதால் நீங்கவில்லை எம் வேதனை
மீண்டும் வருவாயென விழிவைத்து வேண்டுகின்றோம்
உன் அன்புருவம் எம் நெஞ்சினில் வாழும்

'தங்கநிலா',
வதிரி. (97246) குடும்பத்தினர்.

## 90ஆம் நாள் நினைவு மலர்

மலர்வு 23 ★ 06 ★ 1980

உதிர்வு 23 ★ 01 ★ 2010



### இராமசாமி (மாஸ்ரர்) சுதாகரன்

*அன்புத் தெய்வமே!*
*எங்களின் பாசமிகு தம்பியே*
*உம்மை இழந்து நாம் கண்ணீரில்நனைகின்றோம்*
*உன் திருமண வாழ்த்துபோடவேண்டிய நாங்கள்*
*உன் நினைவுநாளை போட்டுவிட்டு எங்கு சென்றாய்*
*நாங்கள் தவிக்கின்றோம்*
*உன் செவியில் கேட்கவில்லையோ*
*தீ வெந்து நின் உயிர் நீங்கிய*
*உண்மையை யார் சொல்லியும் நம்ப*
*முடியாமல் தவிக்கின்றோம்*
*இறப்பே உமக்கு இல்லை*
*எங்கள் மனமாளிகையில்*
*கணமும் பிரியாது வாழ்ந்திருப்பீர்*
*அமைதி கொள்க!*

அன்னாரின் 90ஆவது நாள் கிரியை இன்று (23.04.2010) வெள்ளிக்கிழமை லண்டனில் வசிக்கும் சகோதரன் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

R.Sri 151 Glebe Court,
Mitcham London Road,
Cr.43 nu Surrey.
T.P. Nc 2086872006 (97217)

உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

## கழிவுநீர் வடிகாலை சீர் செய்யக் கோரிக்கை

குருநகர்,ஏப்.23

குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதியில் அண்ணா சிலைக்கு முன்பாகவுள்ள கழிவுநீர் செல்லும் வடிகாலின் மேல்தட்டு உடைந்து குழியாகக் காணப்படுகிறது. இதனால் இவ்வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனை சீர்செய்து பொதுமக்களின் போக்குவரத்தை சீர்செய்ய அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதிப் பொதுமக்கள் கோரியுள்ளனர்.

## முனியப்பர் கோயில் பகுதி பிரயாணிகளால் அசுத்தமாகலாமா?

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள முனியப்பர் கோயிலில் சுற்றுப்புறங்களில் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு உல்லாசப் பயணம் வரும் மக்களின் வாகனங்கள் நிற்பாட்டப்படுவதனால் இக் கோயிலின் புனிதம் பாதிக்கப்படுவதாக இங்குவரும் இந்துமக்கள் தெரிவித்தனர். கோயிலை அண்டிய பகுதியில் வாகனங்கள் நிற்பாட்டப்படுவது மட்டுமல்லாது கோயிலுக்கு முன்பாக உல்லாசப் பயணிகள் தங்கி இளைப்பாறுமிடமாகவும் இது மாறிவருவதாகவும் பக்தர்கள் கவலை தெரிவித்தனர். தென்பகுதியில் இருந்துவரும் மக்களுக்கு வேறு இடங்களில் வசதியான இடம் ஏற்படுத்த மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சிமெந்துப் பைக்கற்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் ஒரு தொகுதியினருக்கு பிரதேச செயலகத்தினால் சிமெந்துப் பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் தற்காலிக வசிப்பிடங்களில் தங்கியுள்ள ஆயிரத்து 625 குடும்பங்களுக்கு தலா எட்டுப் பைக்கற் சிமெந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இக் குடும்பங்களுக்கு விநியோகிக்கவென யாழ்.செயலகத்தினால் 13 ஆயிரம் பைக்கற் சிமெந்து பிரதேச செயலகத்திற்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (207)

## மின் இணைப்புப் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு

நவாலி,ஏப்.23

இலங்கைதொழிற் பயிற்சி அதிகார சபையினால் சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற வீட்டு மின்னிணைப்பு பயிற்சியில் பயிற்சி பெற்ற மாணவர்களுடனான கலந்துரையாடல் இம்மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை வீதி, சித்தங்கேணியிலுள்ள கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சிபெற்ற அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பயிற்சி நிலையப் [illegible] குகன் கேட்டுள்ளார். [illegible]

## ஐ.தே.கவிலிருந்து விலகுவதற்கு ருக்மன் சேனநாயக்க தீர்மானம்

கொழும்பு, ஏப்.23

ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் ருக்மன் சேனாநாயக்க தாம் வகித்த சகல பதவிகளிலிருந்தும், கட்சியிலிருந்தும் விலகத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரின் இந்த முடிவு குறித்து ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்கவிற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் முதலாவது பிரதமராகப் பதவியேற்ற டி.எஸ். சேனாநாயக்கவின் பேரரான ருக்மன் சேனநாயக்க நீண்ட காலமாக ஐ.தே.கட்சியில் அங்கம் வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசியபட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக இவர் உள்வாங்கப்படாமையினாலேயே அவர் இந்த முடிவை எடுத்தார் எனவும் கூறப்படுகிறது.

தேசியப்பட்டியலின் ஆரம்பத்தில் இவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அவர் பெயர் அகற்றப்பட்டது எனவும் அறியமுடிகிறது. (அ-சி)

இலங்கை அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களமும், இந்து சமய அலுவல்கள் திணைக்களமும் இணைந்து 2009ஆம் ஆண்டுக்கான 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவித்த
'கவிமாமணி' புலவர் கல்வயல்

**திரு. வே. குமாரசாமி**

அவர்களுக்கு
தென்மராட்சி கலைமன்ற ஆதரவில் நடைபெறும்

### 'பாராட்டு விழாவும் நூல் வெளியீடும்'

இடம் :- தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம் சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி.
காலம் :- 25.04.2010 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி
தலைவர் :- திரு. க. கேதீஸ்வரன் (தலைவர், தென்மராட்சி கலைமன்றம்)

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணையாளர் :
ஜெகா எலக்ரிக்கல்ஸ்
இல.11, தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.

நிர்வாகசபை,
தென்மராட்சி கலைமன்றம்,
சாவகச்சேரி. (சி/567114)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 ★ 05 ★ 1966

மறைவு 25 ★ 03 ★ 2010



### அமரர் கந்தையா கிருஷ்ணகுமார்

கடந்த 25.03.2010 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.04.2010) சனிக்கிழமை காலை 7மணியளவில் நயினாதீவு, கங்காதரணி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முதலாம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (97211)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்த தமிழீழ அரசும்

நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல்கள் பெரும்பாலான நாடுகளில் எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது. தமிழீழ அரசுக்கான தேர்தல் என்பது நாடு கடந்தநிலையில் புலத்துவாழ் தமிழர்களால் நடத்தப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகராக செயற்பட்ட வி. உருத்திரகுமாரனின் நெறிப்படுத்தலில் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான வேலைத்திட்டங்கள் நடந்துவருகின்றன.

புலத்து தமிழர்களிடையே நடத்தப்பட்டுவரும் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் வலுவுடமையை பரிசோதிப்பதுவும் நாடு கடந்த தமிழீழ அரசு என்பதுவும் ஒரு நேர்கோட்டில்தான் பயணிக்கின்றதா? நாடுகடந்த தமிழீழ அரசு என்ற கட்டமைப்பு தாயகத்தமிழர்களுக்கும் புலத்து தமிழர்களுக்கும் இடையில் எவ்வாறான மாற்றத்தை கொண்டுவரவுள்ளது ? அவ்வாறான கட்டமைப்பு மூலம் தமிழர்கள் சாதிக்கப்போவது என்ன? என்பது போன்ற வினாக்களுக்கான விடைகளை தேடுகின்றது இப்பத்தி.

கடந்த வருடம் தமிழர்களின் நடைமுறை அரசு முற்றாக அழிந்து கொண்டிருந்தபோது தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தையும் தமிழீழம் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையல்ல என்பதையும் அது ஒட்டுமொத்த தமிழர்களின் கோரிக்கை என்பதையும் வெளிப்படுத்துவதற்காக ஜனநாயக ரீதியாக சர்வதேச சமுதாயத்திற்கு வெளிப்படுத்தவேண்டிய தேவை எழுந்தது.

எனவேதான் 1976 இல் அனைத்து தமிழ் கட்சிகளாலும் முன்வைக்கப்பட்டு 1977 இல் அனைத்து தமிழ் மக்களாலும் மக்களாணை வழங்கப்பட்ட இளைய சமுதாயத்திடம் அதனை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து முப்பதாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்த ஆயுத போராட்டமும் அதனூடாக கட்டமைக்கப்பட்ட நடைமுறை தமிழீழ அரசையும் தமிழ் மக்கள் கண்டு மகிழ்ந்தார்கள்.

ஆனாலும், அவ்வாறு கட்டமைக்கப்பட்ட தமிழீழ அரசு அழிக்கப்பட்ட நிலையில் மீளவும் அதே நோக்கத்தை அடைவதற்காக ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்கும் இன்னொரு பரிணாமத்தில் நாம் இப்போது புகுந்துள்ளோம்.

அவ்வாறான கட்டமைப்புக்களை நிறுவும்போது அதனை மக்களிடமிருந்து ஆணையாக பெற்று நிறுவும்போது அதற்கான வலுவுடமை


வி.ருத்திரகுமாரன்

மீளுறுதிப்படுத்தி அதன் அடித்தளத்தில் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல்களை நடத்தி குறித்த எண்ணிக்கையான பிரதிநிதிகளை தெரிவுசெய்வதுபோல நாடு தழுவிய ரீதியில் உள்நாட்டு அலுவல்களை மேற்கொள்ள தமிழர் அவைகள்

இக்கட்டமைப்புக்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதன் ஊடாகவே தாயக மக்களின் வெளிப் படையான ஆதரவையும் பெற்றுக் கொள்ள முடியும்.

நாடு கடந்த தமிழீழ அரசு என்ற அடிப்படை யானது புதுமையான விடயமல்ல. உலகில் ஏற்கனவே தமது சொந்த நாட்டில் இறையா ண்மையை நிலைநிறுத்த முடியாத தேசங்கள் இவ்வாறு நாடு கடந்த நிலையில் அரசுக்கான கட்டமைப்புக்களை வரித்துக்கொண்டுள்ளன. அவற்றின் பல பொதுப்பண்புகளை உள்ளடக்கியதாகவே நாடு கடந்த தமிழீழ அரசும் அமையவுள்ளமை சர்வதேச நியமங்களை உள்வாங்கிய கட்டமைப்பாக மிளிர உதவும்.

ஈழத்தமிழர்களின் இனஅடையாளங்களை வெளிப்படுத்துகின்ற அதேவேளை தேசிய அடையாளங்களையும் உறுதியாக அடையாளப்படுத்தவேண்டும். அப்போதுதான் புலத்துதமிழர்களின் ஆதரவைபெற்ற முழுமையான


வட்டுக்கோட்டை தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது....
பிரிட்டனில்..... ஆஸியில்.....

பாதுகாக்கப்படுவதோடு சர்வதேச சமூகத்தின் முன்கொண்டுசெல்வது இலகுவாக்கப்படும்.

எனவே ஆரம்பத்தில் தனித்தனியாக சமாந்தரமாக பயணித்த வட்டுக்கோட்டை தீர்மானத்தை மீளுறுதிப்படுத்தும் தேர்தல் பணிகளும் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான கட்டமைப்புக்களும் ஒரு நேர்கோட்டில் வருவது

உருவாக்கப்படவேண்டும். அவ்வாறான தமிழர் அவைகளும் நாடுகடந்த தமிழீழ அரசுக்கான பிரதிநிதிகளும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாக ஒன்று மற்றொன்றின் பகுதியாக அமையவேண்டும். அப்போதுதான் வினைத்திறனுள்ள கட்டமைப்பாக, சர்வதேச ரீதியாக திட்டமிடும் பணிகளை நிறைவேற்றக்கூடிய வலுவைக் கொண்டதாகவும், மக்களின் கருத்துக்களை மேல்மட்டத்திற்கு கொண்டுசெல்லும் கருவியாகவும் அது அமையும்.

அதேவேளை நாடு கடந்த நிலையில் அமைக்கப்படும் அரசானது சொந்த நாட்டில் வாழும்

நாடு கடந்த அரசாக அமையும்.

ஈழத்தமிழர்களின் மூன்றிலொரு பகுதியினர் புலத்து தேசத்தில் வாழ்கின்ற வேளையில் புலத்திலே அமைக்கப்படுகின்ற இவ்வாறான கட்டமைப்பு தாயகத்திலே இருக்கின்ற குரலடங்கிப்போயுள்ள மக்களின் குரலை உயர்த்துவதற்கும் உறுதிப்படுத்தவும் வாய்ப்பபாகவும் அமையவேண்டும்.

நாடு கடந்த தமிழீழ அரசுக்கான கொள்கைகளில் மாறுபாடான கருத்துக்களை அலசி ஆராய்ந்து விவாதித்து அனைவரும் இணைந்து முழுமையான கட்டமைப்பாக்க உழைக்கும்போதே அதன் உண்மையான பரிணாமத்தை நாடு கடந்த தமிழீழ அரசு


நாடு கடந்த தமிழீழ அரசுக்கான பிரிட்டன் வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளருடன் சந்தித்தபோது.....

# ஈழத் தமிழர்களும்!

வட்டுக்கோட்டை தீர்மானத்தை மீளுறுதிப்படுத்தும் வாக்கெடுப்பு பற்றி ஆராயப்பட்டது. அதன் முடிவாக கடந்த வருடம் மே 10 ஆம் திகதி நோர்வேயில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து பத்து வரையான நாடுகளில் இவ்வாறான வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

முன்னர் 1977 ஆம் ஆண்டில் தமிழ் வழங்கப்பட்ட மக்களாணையின் படி அன்றைய

தவிர்க்கமுடியாதது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை மீளுறுதிப்படுத்தும் தேர்தலை தொடர்ந்தே நாடுகடந்த தமிழீழ அரசுக்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படவேண்டும். அதுவே அதற்கான வலுவுடமையை பெற்றுத்தரும். அதுவே அக்கட்டமைப்பானது குறித்த நாட்டிலும் செயற்படுவதற்கான ஜனநாயக [illegible] ஜனநாயக [illegible] தரும்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை

மக்களின் விருப்புக்களையும் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். அடக்கப்பட்ட மக்களாக இருக்கின்ற தாயகமக்களின் விருப்புக்கள் என்பது வெளியில் சுதந்திரமாக சொல்லமுடியாத சூழ்நிலை இருக்கின்றமையால்தான் நாடு கடந்த அரசுக்கான தேவையே எழுகின்றது.

எனவே நாடு கடந்த தமிழீழ அரசை பொறுத்தவரை புலத்தில் வாழும் பெரும்பாலான மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கின்ற ஒரு கட்டமைப்பாகவும் தமிழர்களின் அடையாளத்தை சர்வதேச சமூகத்திற்கு கொண்டுசெல்லும் ஊடகமாகவும் இருக்கவேண்டும்.

பெற்றுக்கொள்ளும். அதனைவிடுத்து எடுத்தோம் கவிழ்த்தோம் என சிறிய விடயங்களை பெரிதாக்கி சேறு பூசுவது தமிழர்களின் ஒருமுகப்பட்ட சக்திக்கு சவாலாக அமைந்துவிடும்.

எனவே அனைத்து தமிழர்களும் கூடி, அலசி ஆராய்ந்து,தமிழர்களுக்கு அவசிய நகர்வாக உள்ள நாடு கடந்த தமிழீழ அரசை உருவாக்கும் பணியில் இணைந்துகொண்டு தமிழீழ இலட்சியத்தில் பயணிப்பதே தாயகத்தில் உள்ள மக்களின் ஏக்கங்களுக்கு ஓரளவு ஆறுதலை தரும்.

நன்றி: 'த நேஷன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக அமைப்பின் திட்டமிட்ட செயலால் பதுளையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழப்பு

## புத்திஜீவிகள் குழு கடும் விசனம்

பதுளை,ஏப்.23

பதுளை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களைத் திட்டமிட்டு இழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது எனக் கூறப்படும் மலையக அமைப்பொன்றிற்கெதிராக பதுளை மாவட்ட தமிழ்ப் புத்திஜீவிகள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

புத்திஜீவிகள் குழுவானது, பதுளை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களைப் பாதுகாக்கும் பொருட்டு குறிப்பிட்ட மலையக அமைப்பிற்கு நிலைமையை விளக்கி, இப்பொதுத் தேர்தலிலிருந்து விலகிவிடுமாறு உத்தியோக பூர்வக்கடிதமொன்றையும் அனுப்பியிருந்தது. அக்கடிதத்தையும் அசட்டை செய்து அந்த அமைப்பு தேர்தலை எதிர்கொண்டு தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக புத்திஜீவிகள் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு :-

பதுளை மாவட்டத்தின் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களை இழக்கச்செய்யும் வகையில் பதுளை மாவட்டம் சாராத ஒருவர் மலையக அமைப்பொன்றின் மூலம் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டார். தான் தோல்வியுற்றாலும் பரவாயில்லை ஏனைய கட்சிகளைச் சார்ந்த தமிழர்கள் எவரும் வெற்றிபெற்று விடக்கூடாதென்ற நிலைபாட்டிலேயே அந்த அமைப்பு இருந்து வந்தது. மாவட்டத்தைச் சாராத எவருக்கும், இம்மாவட்டம் குறித்த பற்றுதல் என்றுமே இருக்கப்போவதில்லை. இவர்கள் விடயத்தில் எமது மக்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

எமது பிரதிநிதித்துவங்கள் பதுளை மாவட்டம் சார்பாக நாடாளுமன்றத்தில் இல்லாதிருக்கின்றமையால் அதன் பாதிப்புகள் எமது சமூகத்திற்கே ஏற்படுமென்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட மலையக அமைப்பு எமது கோரிக்கைக்கமைய தேர்தலிலிருந்து ஒதுக்கியிருக்குமானால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியிலோ, ஐக்கிய தேசியக் கட்சியிலோ போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களில் ஒருவராவது வெற்றி பெற்றிருப்பார்.

குறிப்பிட்ட மலையக அமைப்பிற்குச் சென்ற கணிசமான வாக்குகள் தமிழ் வேட்பாளர்களின் வெற்றிக்கு வழிவகுத்திருக்கும்.

இதனை எமது மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும். கடந்த ஊவா மாகாணசபையில் எமது சமூகப் பிரதிநிதித்துவங்கள் மூன்றாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே இம்மாகாணசபையில் ஐந்து பிரதிநிதித்துவங்கள் எமது சமூகம் சார்பாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது- என்று உள்ளது. (எி)

## மத்திய மாகாணசபை உறுப்பினராக ரகுநாதன்

நுவரெலியா,ஏப்.23

மத்திய மாகாணசபையின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியான பிரகாஷ் கணேசின் வெற்றிடத்திற்கு அக்கட்சியின் உதவிச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட அமைப்பாளருமான முரளி ரகுநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 20ஆம் திகதி காலை 10.30 மணியளவில் மத்திய மாகாணசபைத் தலைவர் சாலிய திஸாநாயக்க முன்னிலையில் மாகாணசபை உறுப்பினராக ரகுநாதன் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட பின் அவர் நிகழ்த்திய கன்னி உரையில் தெரிவித்தவை வருமாறு:-

''என்னை இந்த மாகாணசபைக்கு நியமித்த தலைவர் மனோ கணேசனுக்கு நன்றி தெரிவிப்பதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், சகல மாவட்ட அமைப்பாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

மக்களுக்கான எனது பணியை முழுவீச்சோடு முன்னெடுப்பேன் - என்றார். (எி)

## அவிசாவளைப் பண்ணையில் வேலை செய்த நுவரெலியா தமிழ் இளைஞர் மர்ம மரணம்

### சந்தேகம் என பெற்றோர் முறைப்பாடு

நுவரெலியா,ஏப்.23

அவிசாவளைப் பிரதேசத்திலுள்ள கோழிப் பண்ணை ஒன்றில் வேலை செய்து வந்த தமிழ் இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது..

நுவரெலிய அக்கரப்பத்தனை கிளாங்ஸ்கோ தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

அவிசாவளை பார்த்மார்க் என்ற இடத்தில் வேலை செய்து வந்த லோகேஸ்வரன் (வயது 19) என்ற இளைஞர் கடந்த 15 ஆம் திகதி மரணமடைந்தார் என அவரது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் வழங்குநர்கள் மகனின் சடலத்தைத் தம்மிடம் கையளிக்கும்போது, பெட்டி 'சீல்' வைக்கப்பட்ட நிலையில் இருந்தது என்றும், அதனால் தமக்கு மகனின் மரணத்தில் சந்தேகம் உள்ளது என்றும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

லோகேஸ்வரனின் மரணம் தொடர்பில் அக்கரபத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (எி)

## ஏழாவது நாடாளுமன்றத்திற்கு சப்ரகமுவவில் 5 புதுமுகங்கள்

கொழும்பு,ஏப்.23

நடைபெற்று முடிந்த ஏழாவது நாடாளுமன்றத் தேர்தலில் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலிருந்து ஐந்து புதுமுகப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து ஐ.ம.சு. முன்னணியில் போட்டியிட்ட ஜானக வக்குபுர, ரஞ்சித் டி. சொய்சா, ரோஹண கொடிதுவக்கு மற்றும் ஐ.தே. முன்னணியின் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, கோகலை மாவட்டத்தில் ஐ.ம.சு முன்னணியில் போட்டியிட்ட சப்ரகமுவ மாகாண சபையின் முதலமைச்சர் மஹிபால ஹேரத்தின் புதல்வர் கனகஹேரத் இம்மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார். (எி)

## தாயைக் கத்தியால் குத்த முயன்ற மகன் சம்பவத்தில் ஏற்பட்ட ரகளையில் மரணம்

கொழும்பு,ஏப்.23

தாயைக் கத்தியால் குத்த முயன்ற மகனொருவர் அங்கு ஏற்பட்ட ரகளையில் காயப்பட்டு அதிக இரத்தப் பெருக்கால் மரணமான சம்பவமொன்று பலாங்கொடை - பம்பஹின்ன பிரதேசத்தில் நடந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

மரணமான இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தனது தாயின் வீட்டுக்கு வந்து அவ்வீட்டின் உறுதிப்பத்திரத்தைத் தருமாறு நிர்ப்பந்தித்துள்ளார்.

தாய் அதைக்கொடுக்க மறுத்ததும் ஆத்திரமடைந்த மகன் அவரைக் கத்தியால் குத்த எத்தனித்துள்ளார். அப்போது வீட்டிலிருந்த மற்றொரு மகன் தாயைக் காப்பாற்ற முயற்சித்த போது ஏற்பட்ட ரகளையில் இவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி அதீத இரத்தப் பெருக்கால் மரண மாகியுள்ளார்.

பலாங்கொடை நீதிவான் நாமல் பலல்ல கடந்த திங்கட்கிழமை சம்பவ இடத்தில் மரண விசாரணை நடத்திய பின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காகப் பலாங்கொடை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், இறந்தவரின் சகோதரரைக் கைது செய்யுமாறும் உத்தரவிட்டார்.

பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எி)

## கடந்த வார அனர்த்தங்களினால் பதுளைப் பகுதியில் 66பேர் பாதிப்பு

கொழும்பு,ஏப்.23

சித்திரைப் புத்தாண்டிற்குப் பின்னரான ஆறு தினங்களில் பதுளை பிரிவுக்குட்பட்ட பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வன்முறை மற்றும் விபத்து சம்பவங்களினால் காயங்களுக்குள்ளான 66 பேர் பதுளை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் 59 பேர் தாக்குதல் சம்பவங்களிலும், ஏழு பேர் விபத்து சம்பவங்களிலும் காயமடைந்துள்ளனர். காயங்களுக்குள்ளானவர்களில் 15 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




பதுளைப் பகுதியில் குட்டியகொல்லை, ஸ்பிறிங்வெலி, நெலுவை, மையிலகஸ்தன்னை, எவலஸ்சை தோட்டம், தெல்பத்தை தோட்டம், லணுகலை ஆகிய இடங்களில் ஏற்பட்ட தாக்குதல் சம்பவங்களினாலும்-

பதுளை- பசறை வழியில் ஏற்பட்ட வாகன விபத்தில் மூன்றுபேரும், பதுளை ரிதிபாணை என்ற இடத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் இரண்டு பேரும்-

ஹாலி - எல நகரில் இடம்பெற்ற விபத்தில் இருவருமாகவே 66 பேர் இவ்வாறு காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, போதைவஸ்து மற்றும் மதுபாவனைகளினால் ஏற்பட்ட மோதல் சம்பவங்களில் காயமடைந்தவர்களே அதிகளவில் இருந்து வருகின்றனர். மேற்படி தாக்கு தல் சம்பவங்களை அடுத்து 12 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், பலர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இ.தொ.காவின் மேதினக் கூட்டத்தை தலவாக்கலை நகரில் நடத்த முடிவு

கொழும்பு,ஏப்.23

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினக்கூட்டம் இம்முறை தலவாக்கலையில் நடைபெறும் என இ.தொ.காவின் நிர்வாகச் செயலாளர் எம்.சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இ.தொ.காவின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

மேதின விழாவுக்கான முன்னோடி ஏற்பாடுகள் குறித்து இ.தொ.கா. சௌமிய பவனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தெளிவுபடுத்தும் நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், இம்முறை என்றுமில்லாதவாறு தொழிலாளர் வர்க்க சிந்தனையோடும், உணர்வோடும் மேதினத்தை நடத்த வேண்டும் என அறிவித்துள்ளார்.

எனவே, இ.தொ.கா. தலைமையகமான பிரதேசக் காரியாலயங்களில் கடமையாற்றும் பிராந்திய இயக்குநர்கள், தொழில் உறவு அதிகாரிகள், மகளிர் இணைப்பதிகாரிகள், பிரதேச அரசியல் அமைப்பாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து மேதின விழாவுக்கு முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேதினத்தன்று மு.ப. 10 மணிக்கு தலவாக்கலை மும்முனைச் சந்தியிலிருந்து மலையக பாரம்பரிய, கலாசார நிகழ்வோடும், மேதின ஊர்திகளோடும் பிரமாண்டமான ஊர்வலம் ஆரம்பமாகி பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான மேடைக்கு வந்தடையும்.

அங்கு நடைபெறும் கூட்டத்தில் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் தலைவர் முத்துசிவலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உபதலைவர்களும், உதவிச் செயலாளர்களும், மாகாணசபை உறுப்பினர்களும், மாவட்ட மாநிலப் பிரதி நிதிகளும், மாதர் இளைஞர் அணியினரும், நகரப் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

மேதின விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் விழா ஏற்பாட்டாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் எம்.பி. மேற்கொண்டுள்ளார்.

மாத்தளை, கண்டி, பதுளை, நுவரெலியா, காலி [illegible] மாவட்டங்களைச் சேர்ந்த பெருந்திரளான இ.தொ.கா. அங்கத்தவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வர்- என்றுள்ளது. (எி)

## 2009 இல் காணாமல் போன நுவரெலியா பெண் கொலை

நுவரெலியா,ஏப்.23

நுவரெலிய, டகயம - மூன்றாம் கட்டைப்பகுதியில் பெண் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுனதினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் நுவரெலிய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

நுவரெலிய, டயகம தெற்கு, மூன்றாம் கட்டையில் வசித்து வந்த 40 வயதுடைய தனபாலன் திலகேஸ்வரி என்ற பெண் 2009ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில் காணாமல் போயுள்ளார் என அவரது சகோதரி பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நுவரெலியா குற்றப் புலனாய்வுபிரிவினரால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன பெண் கொலை செய்யப்பட்டு குறித்த பிரதேசத்தில் மலசலகூடக் குழியொன்றில் போடப்பட்டுள்ளார் [illegible] செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் தமக்கு வாக்குமூலம் அளித்துள்ளார் எனக் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய குறித்த பெண்ணின் சடலம் நேற்று நீதிவான் முன்னிலையில் மலசலகூடக் குழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எி)

## பாடசாலைகளை அண்மித்து பால் விற்பனை நிலையங்கள்

கண்டி,ஏப்.23

மலையகத்திலுள்ள பிரதான பாடசாலைகளுக்கு அண்மித்தவையாக பசுப் பால் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு மத்திய மாகாணசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் பசுப்பால் பாவனையை ஊக்குவிக்கும் வகையிலேயே இது மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்குத் தேவையான பசுப்பாலை அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பண்ணைகளில் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 69 பால் விற்பனை நிலையங்களை அமைத்துள்ளதாக மாகாண விவசாய அமைச்சு தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நேற்றுக் கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான செயலமர்வு ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட படைகளின் தலைமைப்பீட அதிகாரி பிரிகேடியர் பிரெங்கிளின் றொட்றிக்கோ மங்கள விளக்கேற்றுவதை முதற் படத்திலும், இலங்கைக் கிரிக்கெட்டின் மத்தியஸ்தர் சங்க முகாமையாளர் றொனிக் குணவர்த்தன உள்ளிட்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் பயிற்சியில் கலந்துகொண்டுள்ள மத்தியஸ்தர்களை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: நேசன், தமிழினியன்)

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் வெற்றியீட்டிய பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே 19, 17, 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**19 வயதுப் பிரிவு**

முதலாம் இடம்- புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, இரண்டாம் இடம்-கொக்குவில் இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம்-யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

முதலாம் இடம்-கொக்குவில் இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்-புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, மூன்றாம் இடம்-வேம்படி மகளிர் கல்லூரி.

**15வயதுப் பிரிவு**

முதலாம் இடம்-கொக்குவில் இந்துக் கல்லூரி, இரண்டாம் இடம்-வேம்படி மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம்-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. (50-23)

# கிரிக்கெட் மத்தியஸ்தருக்கான பயிற்சி நேற்று சென்.ஜோன்ஸில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஏப்.23

இலங்கை கிரிக்கெட் சபை யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்பை நேற்று வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பித்துள்ளது.

இப் பயிற்சி வகுப்பை யாழ்.மாவட்ட பாடசாலைகளின் தலைமைப்[illegible] தி காரியு[illegible]ங்கை இராணுவ [illegible] அணி[illegible] தலை[illegible] வருமான பிரிகே[illegible]யர் பிரெங்கிளின் [illegible]றொட்ரிக்கோ மங்கள விளக்கேற்றி ஆரமபித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் 6ஆவது ஆட்லெறிப் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் ஜெயமான முதலி, இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க முகாமையாளர் றொனிக் குணவர்த்தன, கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கப் பணிப்பாளர் முன்னாள் கே.ரி.பிரான்சிஸ், போட்டி மத்தியஸ்தரும் மத்தியஸ்தர் விரிவுரையாளருமான கே.புஸ்பானந்தன், சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஞானபொன்ராசா மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இப் பயிற்சி வகுப்பில் யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்கள் 32 பேர் கலந்து கொண்டுள்ளார்கள். (50-23-86)

## 15 வயதுப் பெண்கள் பிரிவு -

# கரப்பந்தாட்டப் போட்டியில் அபாரமாக ஆடி அளவெட்டி அருணோதயா சம்பியன்

வலி. வடக்கு, ஏப். 23

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி சம்பியனாகியது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயமும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் சளைக்காமல் மோதிக் கொண்ட போதிலும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை அருணோதயாக் கல்லூரி 25: 16 , 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 25: 12, 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் இரண்டு சுற்றுக்களை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டு விழா; பெண்களுக்கான போட்டியில் வெற்றியீட்டிய அணிகள்

வலி. வடக்கு, ஏப்.23

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற பெண்களுக்கான பெருவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பரிசில்கள் பெற்ற கல்லூரிகளின் விவரம் வருமாறு:

**வலைப்பந்தாட்டம் (15 வயதுப் பிரிவு)**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம், வடமராட்சி மகளிர் கல்லூரி.

**வலைப்பந்தாட்டம் (17 வயதுப் பிரிவு)**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

**வலைப்பந்தாட்டம் (19 வயதுப் பிரிவு)**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம்.

**கரப்பந்தாட்டம் (15 வயதுப் பிரிவு)**

அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம் (17 வயதுப் பிரிவு)**

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம், வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**கரப்பந்தாட்டம் (19 வயதுப் பிரிவு)**

சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்,தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

**எல்லே**

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, வடமராட்சி மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

**மேசைப்பந்தாட்டம்**

யாழ். இந்து மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**கூடைப் பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம், உடுவில் மகளிர் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

**கரம் (15 வயதுப் பிரிவு)**

யாழ். இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்.

**கரம்(19வயதுப் பிரிவு)**

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

**சதுரங்கம் (15 வயதுப் பிரிவு)**

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, வேம்படி பெண்க்ள் உயர்தரப் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**சதுரங்கம் (19 வயதுப் பிரிவு)**

யாழ். இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**பூப்பந்தாட்டம்**

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**உடற்பயிற்சி**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம், கரம்பன் சிறிய புஸ்பம் கன்னியர்மடம் பாடசாலை.

**ஹொக்கி**

உடுவில் மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை. (50-86)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் விளையாட்டு அணியின் வீரர்களுக்கிடையே அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. வீரர்கள் விளையாடத் தயாராக நிற்பதை முதற் படத்திலும், விளையாட்டில் ஈடுபட்டிருப்பதை அடுத் துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் கே.பூரணம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவிலும் நூல் வெளியீட்டு விழாவிலும் இளைப்பாறிய அதிபர் திருமதி எம்.ஜீ.தவரட்ணம் வாழ்த்துரை வழங்குவதையும் வெளியீட்டுரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவபீடப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், கல்லூரி அதிபர் எம்.தெய்வேந்திரராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ரி.கலாமணி நூல் ஆய்வுரை நிகழ்த்துவதையும் நூலின் முதற் பிரதியை கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் என்.குணசீலன் பெற்றுக் கொள்வதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# ஒளியும் பாடலும் நிறைந்த ....

*(13ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அவர் சொல்லுகிறார். விஜயலாதன் மிதிவெடியை எடுத்து விளையாடும் பொழுது அது வெடித்தவேளை தனது கண் பார்வையை இழந்து போயிருக்கிறார். கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலத்தில் படித்த விஜலாதன் இப்பொழுது குற்றெழுத்து முறையை கற்றுக் கொண்டு படிப்பதாக் கூறுகிறார்.

சாதாரண தரம் படிக்கும் இன்னொரு மாணவன் விக்கினேஸ்வரன் ஒன்பது வயதான சிறுவன் ஒருவன் இறுதி யுத்தத்தில் தன்னை மாதிரி கண்களை இழந்து போயிருந்தான் என்றும் அதைப் போல நிறையப் பேர் கண்களை இழந்தவர்கள் இருக்கிறார்கள் எனவும் குறிப்பிட்டான். கண்கள் தெரியாமல் போனதால் அவர்களுடன் நெருக்கமாக பழகியிருப்பதாகவும் இப்பொழுது அவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் ஆனால் அவர்கள் மீள முல்லைத்தீவில் இனியவாழ்வு இல்லம் தொடங்கும் பொழுது அங்கு வருவார்கள் அப்பொழுது சந்திப்பேன் என்று நம்பிக்கையுடன் குறிப்பிடுகிறார்.

விக்கினேஷின் வார்த்தைகள் கடும் நம்பிக்கை கொண்டிருந்தன. அவரின் முகத்தில் ஒளியின் பிரகாசம் தெரிந்தது. கண்கள் இழந்ததைப் பற்றி கவலைப்பட மாட்டேன். அதற்காக தற்கொலை செய்வது எல்லாம் தேவையற்ற செயல். கவலைப் படுவதால் இழந்தது மீளக் கிடைத்து விடுமா? எல்லோரையும் போல என்னால் வாழ முடியும். எல்லோரையும் போல என்னால் முன்னேற முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். மற்றவர்கள் வியக்கும் மனிதனாக வேண்டும். மற்றவர்களின் துயரை துடைக்க நான் செற்படுவேன் என்றும் விக்னேஷ் குறிப்பிடுகிறான்.

வினோதினி என்ற விழிபுலனற்ற சகோதரி இனியவாழ்வு இல்லத்தில் மிகவும் சிறந்த பாடகியாக இருந்தார். அவர் இப்பொழுது காலில் காயப்பட்டு கால் அகற்றும் நிலையில் உள்ளார். இப்படி வலிகளின் மீது வலிகளுடன் இனியவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அலைகின்றனர்.

நாங்கள் எங்கள் இல்லத்தை திரும்ப எங்கள் சொந்த நிலத்தில் அமைக்க விரும்புகிறோம் என்று இல்லத்தின் இயக்குனர் ராஜ்குமார் சொல்லுகிறார். அதற்காக சொந்த இடத்தில் இல்லத்தை மீள் குடிமயமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ராஜ்குமார் கோரிக்கை விடுக்கிறார். சிதைந்த இல்லத்தை மீளமைத்து இந்தப் பிள்ளைகளை அங்கு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். முன்பு தமிழர் புனழ்வாழ்வுக் கழகம், மனிதநேயம், அரச சார்பற்ற நிறுவனங்கள், புலம்பெயர் உறவுகள், புலம்பெயர் நிறுவனங்கள், கிளிநொச்சி அரசாங்க அதிபர் முதலியோர் தமக்கான உதவிகளை வழங்கியதாக குறிப்பிடும் ராஜ்குமார் இப்பொழுது இல்லத்தின் குழந்தைகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் நிரந்தரமான வழிகளைச் செய்ய யாராவது முன்வர வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

யுத்தத்தின் பொழுது இரண்டு 'ஹயஸ்' வாகனங்களும் இரண்டு ஆட்டோக்களும் தொலைந்து போய் விட்டன. அங்கு அமைத்த இல்லம் சிதைந்து விட்டது. இப்படி அவற்றை மீளமைத்து பிள்ளைகள் மீள வாழுவதற்காக இவர்கள் அவசியமான உதவிகளை எதிர்பார்க்கிறார்கள். இப்பொழுது எமது பழைய பிள்ளைகளைக் கொண்டு எங்களைத் தேடி பெற்றோர்கள் வருகிறார்கள். அவர்களுடன் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களும் இந்த இல்லத்திற்கு புதிதாய் இணைகிறார்கள்.

யுத்தமும் காலமும் இவர்களை பிரித்து இவர்களிடமிருந்த வளங்களை அழித்து விட்டது. இனிய வாழ்வு இல்லப் பிள்ளைகளை காயங்களுக்கு உள்ளாக்கி விட்டது. மேலும் அங்கங்களினை பாதித்த பிள்ளைகளை உருவாக்கியிருக்கிறது. அந்தப் பிள்ளைகள் தங்களுக்கான கல்வியைப் பெற்று எதிர்காலத்தை வளம்படுத்த இந்த இல்லம் மீளக் கட்டமைக்கப்பட வேண்டியது மிக அவசிய மானதாயிருக்கிறது. இந்த மனிதாபிமான விடயத் தில் கருணையுள்ளவர்கள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியதன் பாரிய பொறுப் பிருக்கிறது -என்று சொல்லியிருந்தார் ராஜ்குமார்.

# நீறில்லா நெற்றி பாழ்

சைவர்களாகிய எம்மவர் மத்தியில் திருநீறு அணியும் வழக்கம் அண்மைக் காலமாக குன்றவடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

நெற்றியில் திருநீறு அணியும் வழக்கம் வெறுமனே ஒரு சமய சம்பிரதாயம் எனக் கொள்ளப்படாது விஞ்ஞான ரீதியில் இதுவோர் கிருமிநாசினி எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சைவசமய அடிப்படையில் நோக்கினால்...

சிவபெருமானின் பிரசாதமாக அளிக்கப்படுவது 'விபூதி' ஆகும் 'நீறில்லா நெற்றி பாழ்''. என்கிறது எமது சமயம். விபூதி என்பது சகல விதமான உடல் உள வியாதிகளைத் தீர்க்கும் வல்லமை உள்ளது எனப் பொருள்படும். இது எல்லா இல்லங்களிலும் இருக்க வேண்டிய மங்கலப் பொருள். ''மந்திரம் ஆவது நீறு, வேதத்தில் உள்ளது நீறு, பக்தி தருவது நீறு, சத்தியமாவத நீறு, சித்தி தருவது நீறு'' என விபூதியை சம்பந்தர் போற்றுகின்றார்.

இந்த உலகமும் எல்லாப் பொருளும், நாமம் ஒரு காலத்தில் அழிந்து சாம்பராவோம் என்னும் தத்துவத்தைத் திருநீறு குறிக்கின்றது. திருநீற்றினை அணிவதனால் எமது உள்ளும், புறமும் தூய்மை பெறுகின்றது. இறை சிந்தனையைத் தூண்டுகின்றது. இதனைத் தரிப்பதனால் எமக்கு ஆன்மீக ஒளி கிடைக்கின்றமையால் 'பசிதம்' எனவும், ஆன்மாக்களை இரட்சிப்பதனால் 'இரட்சை' எனவும் பாசங்களை நீக்குவதனால் 'சாரம்' எனவும் திருநீறு பல பெயர்கள் கொண்டழைக்கப்படுகின்றது.

விஷ்ணு பக்தர்களுக்குரிய சின்னம் நெற்றியில் திருமண்ணினால் நாமம் போடுதல் ஆகும். இறைவனது திருவடியினைத் தலையில் தாங்குகின்றேன் என்பதையே நாமம் குறிக்கிறது. எல்லாம் முடிவில் மண்ணாகிவிடும் என்ற உலகின் நிலைமையைத் திருமண் உணர்த்துகிறது.

பசுவின் (சீவாத்மா) சாணத்தை (மும்மலங்கள்) சுட்டுப் பெறப்படுவது திருநீறு. மும்மலங்கள் ஞானத் தீயினால் நீறாகிறது என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. சாணம், கோமயம் என்ற அழைக்கப்பெறும் இது அசுத்தங் களையும் நோய்க் கிருமிகளை யும் அகற்ற வல்லது.




சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் திருநீறு தலையிலுள்ள நீர்தோஷம், தலைவலி, உடம்பிலுள்ள கிருமிகள் முதலியவற்றை அகற்றவல்லது. காலை, மாலை நேரங்களிலும், குளித்தவுட னும், பூசை வழிபாடுகளுக்கு முன்னும் சாப்பாட்டிற்கு முன்னும் நெற்றியில் விபூதி தரித்தல் வேண்டும். வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று பூமியில் சிந்தாவண் ணம் விபூதியை எடுத்து அண்ணாந்து 'சிவ சிவ' என்று சொல்லி நெற்றியில் தரித்தல் வேண்டும்.

நன்றி: ஞானச்சுடர்

# ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.23

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 'வாழ்க்கைக்கான ஆங்கிலம்' என்னும் செயலமர்வு நாளை (24.04.2010) காலை 8.30 மணி தொடக்கம் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

செயலமர்வில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ப-207)


# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பழைய மாணவரும் லண்டன் பழைய மாணவர் நலன்விரும்பிகள் சங்கத்தின் பொருளாளருமான செ.சுபேஸ்குமார் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் தம்பிமுத்து செல்வரத்தினம் (அர்ச்சுனா)

அவர்கள் லண்டனில் அமரத்துவம் அடைந்த செய்தியைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயரடைந்திருக்கும் அமரரின் துணைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தவர்களுக்கு கல்லூரிச் சமூகத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி. (97322) பழைய மாணவர் சங்கம்.



# விற்பனைக்கு

[illegible] E.L.F
[illegible]
தொடர்பு கொள்ள வேண்டிய
தொ.பே. இலக்கம் 077 4061271
(97307)



# பெண் கணக்காளர் தேவை

வயது : 25 - 35 வரை
தகைமை : A/L சித்தி (வர்த்தகம்)
(கணனி அறிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
அனுபவம்: குறைந்தது ஒரு வருடம்.

05.05.2010இற்குமுன்னர் நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

மயூரா அன்பளிப்பகம்,
இல.14, மின்சாரநிலைய வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(இ/567125)



THE HALO TRUST

**Vacancies — Fleet & GIS Administrative Assistants**

The HALO Trust is a British Mineclearance NGO working in ten countries worldwide. The HALO Trust have been working in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of war.
We are currently recruiting for administrative assistants to help with the upkeep of our fleet and GIS databases.

**Requirements:**
·High standard of written and spoken English
·Proficiency in Microsoft Word, Excel, Access and Outlook
·Experience in database management
·Experience in Arcmap GIS

Salary is dependent on ability and experience.
Interested candidates should submit their bio-data, contact details and a brief summary of their experience to:

**The HALO Trust**
**12 NALLUR CROSS ROAD JAFFNA**
**SRI LANKA**
**Email: mail@halosrilanka.org**

***All applications must be submitted no later than Monday 26th May 2010***

Please note that only short listed candidates will be contacted and invited for the interview and practical test. This post is on a renewable contracts basis, subject to donor funding. The HALO Trust believes in equal opportunities, both sexes and all backgrounds are encouraged to apply.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளினிக்கு இலங்கையில் இருந்தும் அதிக தொலைபேசி அழைப்புகள்!

## லண்டனிலுள்ள மகளிடம் பேசியதும் அம்பலம்

சென்னை, ஏப். 23

சிறையிலுள்ள ராஜிவ் கொலைக்கைதி நளினி, லண்டனில் தங்கியிருக்கும் தனது மகள் ஹரித்திராவுடன் மட்டும் கடந்த மூன்று மாதங்களில் 50 தடவைகள் கைத்தொலைபேசியில் பேசியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், நளினிக்கு அதிகளவில் இலங்கை, கனடா, சிங்கப்பூரில் இருந்து அழைப்புகள் வந்துள்ளன. தினம் 50 எஸ்.எம்.எஸ்கள் வந்திருப்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நளினியிடம் கைப்பற்றிய கைத்தொலைபேசி, சிம் கார்டுகளை ஆய்வு செய்ததில்,

### இந்தியச் செய்திகள்

அவர் வைத்திருந்த கைத்தொலைபேசி புதிய ரக 'நோக்கியா' என்பதும், அது இயங்கிய நிலையில் இருந்தது என்றும், சிங்கப்பூர் எண்ணில் அவர் பேசிக் கொண்டிருந்தமையும், சென்னையில் பதிவு செய்த எண் ஒதுக்கப்பட்டிருந்தமையும் தெரிந்தது.

கைத்தொலைபேசியி லிருந்து நளினி யார், யாரிடம் பேசினார் என சிறை அதிகாரிகள் சிம் கார்டை ஆய்வு செய்தனர். சமீப காலமாக நளினி பிரிட்டன், கனடா நாடுகளுக்கு அதிகம் பேசியிருப்பது தெரிய வந்தது.

நளினியின் மகள் ஹரித்திரா, லண்டனில் தன் தந்தைவழி உறவினர்களுடன் தங்கி இருக்கிறார். அவருடன் மட்டும் கடந்த மூன்று மாதங்களில் 50 தடவைகள் பேசியதும் தெரிய வந்துள்ளது. மேலும், நளினிக்கு அதிகளவில் இலங்கை, கனடா, சிங்கப்பூரில் இருந்து அழைப்புகள் வந்துள்ளன. தினம் 50 எஸ்.எம்.எஸ்கள் வந்திருப்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

**நளினியை பிடித்தது எப்படி?**

சென்னை சிறைத்துறை அதிகாரிகளுக்கு, நளினி கைத்தொலைபேசி வைத்திருக்கும் விவரம் ஐந்து நாள்களுக்கு முன்தான் தெரிந்தது. மூன்று நாள்களாக நளினி அறையை சிறை அதிகாரிகள் 24 மணி நேரமும் கண்காணித்து வந்தனர். நளினி, கைத்தொலைபேசியில் இருக்கும் போது மெல்லிய குரலில் பேசுவது தெரிந்ததும், அவருக்கு தெரியாமல் ஒட்டுக்கேட்ட போது கைத்தொலைபேசியில் பேசியமை தெரிந்தது.

கடந்த செவ்வாயன்று அவரது அறைக்கு அதிரடியாக நுழைந்து ஆய்வு நடத்திய போது கைத்தொலைபேசி சிக்கியது. நளினி, கைத்தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கும் போது சிறை அதிகாரிகள் வந்து விட்டதால், கைத்தொலைபேசியை துணிக்குள் மறைத்துக் கொண்டார். சிறைக் காவலர்கள் சோதனையிட வந்த போது அதை கழிவறைக்குள் போட்டு தண்ணீர் ஊற்றி விட்டார்.

பின்னர் கழிவறை குழாயை உடைத்துத்தான் கைத்தொலைபேசியை எடுத்தனர் என சிறைத்துறை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொளுத்தும் வெயிலுக்கு தொடங்கியது முதல் பலி

திருநின்றவூர், ஏப். 23

சென்னை நகரில் கொளுத்தும் வெயிலில் மூதாட்டி ஒருவர் மயங்கி விழுந்து பலியானார்.

சென்னை மற்றும் புறநகரில் கோடை வெயில் கொளுத்துகிறது. இந்த நிலையில் கொளுத்தும் வெயிலுக்கு முதல் பலி ஆரம்பமாகியுள்ளது.

திருநின்றவூர் அடுத்த நெமிலிச்சேரி ரயில் நிலையத்தில், சைக்கிள் ஸ்டாண்ட் அருகே 60 வயது மூதாட்டி ஒருவர் வெயிலின் உக்கிரம் தாங்காமல் மயங்கி கீழே விழுந்தார். அருகில் இருந்தவர்கள் அவரை எழுப்ப முயன்றபோது, மயக்கத்திலேயே அவர் உயிரிழந்தமை தெரிந்தது. இறந்தவர் குறித்து திருநின்றவூர் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# போனில் நளினி லண்டன், கனடாவுக்கு பேசினாரா? விவரம் விரைவில் தெரியும்

## சட்டசபையில் அமைச்சர் துரைமுருகன் தெரிவிப்பு

சென்னை, ஏப். 23

வேலூர் சிறையில் நளினியிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட கைத்தொலைபேசியிலிருந்து அவர் எந்தெந்த நாடுகளுக்கு - யார், யாருடன் பேசினார் என்ற விவரங்கள் ஆய்வுக்குப் பின் விரைவில் தெரிய வரும் - என்று சட்டசபையில் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

தமிழக சட்டசபையில் நேற்றுமுன்தினம் கேள்வி நேரம் முடிந்ததும் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.ஞானசேகரன் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருக்கும் நளினியிடம் கைத்தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்ட பிரச்சினை குறித்து பேசியவை வருமாறு -

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட கைதி நளினி, சிறைச்சாலையின் விதிகளை மீறவில்லை என்றும் தண்டனைக் காலம் முடிவடையும் முன்பே தம்மை விடுதலை செய்யவேண்டும் என்றும் சென்னை உச்ச நீதிமன்றில் கூறியிருந்தார்.

ஆனால் 20 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு வேலூர் மத்திய சிறைச்சாலையில் குற்றவாளி நளினி கைத்தொலைபேசி பயன்படுத்தியமையும், அதிகாரிகளைக் கண்டதும் அதை கழிவறையில் போட்டதும் தெரிய வந்துள்ளது.

அவரது அறையில் இருந்து 2 சிம் கார்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவர் லண்டனுக்கும், கனடாவுக்கும் கடந்த 4 வருடங்களாகப் பேசியிருப்பது தெரியவந்துள்ளது.

சிறைச்சாலை விதிகளை மீறியதில்லை என்று சத்தியப் பிரமாண வாக்கு மூலம் கொடுத்து நீதிமன்றில் தம்மை விடுதலை செய்யும்படி கூறியிருந்தார் நளினி. அப்படியானால் அவரிடம் கைத்தொலைபேசி எப்படி வந்தது? சிம்கார்டு எப்படி கிடைத்தது?

அவர் யார் யாரிடம் எல்லாம் பேசினார் என்ற விவரங்களையும் இந்த அவைக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் தெரிவிக்க வேண்டும் - என்றார்.

இதற்குப்பதில்அளித்துசட்டத்துறைஅமைச்சர் துரைமுருகன் பேசியவை வருமாறு -

அரசின் சார்பில் எனக்கு கிடைத்த தகவலை இந்த அவைக்கு தெரிவிக்கிறேன். 20.4.2010 அன்று காலை 6.30 மணிக்கு வேலூர் மத்திய பெண்கள் சிறையில் சூப்பிரண்டு மற்றும் அதிகாரிகள், வழக்கம்போல கைதிகள் அறைகளில் சோதனை போட்டனர். அப்போது நளினி அறையில் துணிப்பையில் செல்போன் ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதை அதிகாரிகள் எடுத்தபோது அந்தக் கைத்தொலைபேசியை நளினி பறித்து அருகில் உள்ள கழிவறையில் வீசி உள்ளார்- என்றார்.

# கொழும்புத் திரைப்பட விழா அழைப்பிதழை தூக்கித் தூர வீசினராம் ரஜினி, கமல், விஜய்!

## இதையெல்லாம் ஏன் வாங்குகிறீர்கள் என்றும் சீற்றம்

சென்னை, ஏப். 23

இலங்கையில் நடக்கும் சர்வதேச இந்திய திரைப்பட விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுமாறு அனுப்பப்பட்ட அழைப்பிதழைப் பார்த்து சூப்பர் ஸ்டார் ரஜினியும், உலகநாயகன் கமலும் மிரண்டு போயிருக்கிறார்கள்.

இந்த அழைப்பை அனுப்பியிருப்பவர் இருவருக்கும் மிக மிக நெருக்கமான அமிதாப் பச்சன்.

கொழும்பில் மிக விரைவில் தொடங்கும் இந்த விருது விழாவில் ரஜினி, கமல், விஜய், அஜீத், சூர்யா என முன்னணியில் உள்ள நடிகர்கள் சிறப்புவிருந்தினர்களாகப் பங்கேற்க வேண்டும் என்றும் அவர்களை மஹிந்த ராஜபக்ஷ மற்றும் திரைப்பட விழா குழுவினர் கௌரவிப்பார்கள் என்றும் கூறப்பட்டதாம்.

விடயம் ரஜினியின் காதுக்குப் போனதும் கடுப்பாகிவிட்ட அவர், இதுகுறித்து பதில் சொல்லக்கூட விரும்பவில்லை என்று கூறி அழைப்பிதழைத் தூக்கித் தூரப் போட்டுவிட்டாராம்.

கமல்ஹாஸனோ அழைப்பிதழைக் கண்டு கொள்ளவே இல்லையாம். இதையெல்லாம் ஏன் வாங்குகிறீர்கள் என்றும் கோபத்தைக் கொட்டினாராம்.

விஜய் உள்ளிட்ட சில நடிகர்களும் அழைப்பிதழை வாங்கவே மறுப்புத் தெரிவித்துள்ளனர். அதாவது மொத்த முன்னணித் தமிழ்த் திரையுலக நடிகர்களும் இந்த அழைப்பை புறக்கணித்து விட்டனர்.

ஆனால் இலங்கையும் தமிழ் சினிமாவும் எந்த அளவு பிரிக்க முடியாதது என்பதை உணர்ந்த விழாக்குழுவினர், இரண்டாம் கட்ட நடிகர்களுக்கு வலை வீசி வருகிறதாம்.

இன்னொரு முக்கியமான விடயம் -

இந்த விழாவின் தலைவரான அமிதாப் பச்சனின் மகனும் மருமகளும் ஜோடியாக இந்த விழாவில் பங்கேற்கிறார்கள்.

இவர்கள் இருவரும் இணைந்து நடித்த 'ராவணன்' படத்தின் சிறப்புக் காட்சியை இந்த விழாவில் திரையிடப் போகிறார்களாம்.

இதற்காக மணிரத்னத்தை சிறப்பு விருந்தினராகக்கலந்துகொள்ள அழைத்துள்ளனர். ஆனால் இலங்கைக்குப் போனால், இங்கு தன் மீது பெரும் மதிப்பு கொண்டுள்ள தமிழ் ரசிகர்களின் கோபத்தைச் சம்பாதிக்க வேண்டி வருமே என்ன செய்வது என இரண்டும்கெட்டான் மனதுடன் தவிக்கிறாராம் மணிரத்தினம்.



நேற்றுமுன்தினம் இமாச்சல் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட சுவாமி நித்தியானந்தாவை சாதாரண உடையில் அழைத்து வரப்பட்டபோது...

# நித்தியானந்தா கைதானமையால் ரஞ்சிதாவும் விரைவில் சிக்குவார்

பெங்களூர், ஏப். 23

நித்தியானந்தா கைது செய்யப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து விரைவில் நடிகை ரஞ்சிதாவும் கைதுசெய்யப்படுவார் என்று தெரிகிறது. அவர் தற்போது கேரளாவில் பதுங்கியிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

கடந்த 2 மாதங்களாக தலைமறைவாக இருந்து வந்த நித்தியானந்தா நேற்றுமுன்தினம் இமாச்சல் பிரதேசத்தில் வைத்து பிடிபட்டுள்ளார். அவரை பெங்களூருக்குக் கொண்டு வர கர்நாடகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நித்தியானந்தாவுடன் சேர்ந்து தலைமறைவான நடிகை ரஞ்சிதாவும் கர்நாடக பொலிஸாரிடம் விரைவில் சிக்குவார் எனத் தெரிகிறது.

நித்தியானந்தாவுக்கு படுக்கை அறையில் சேவை செய்து சிக்கிய ரஞ்சிதா அந்த சர்ச்சைக்குப் பின்னர் தலைமறைவானார். அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியாமல் இருந்தது.

நித்தியானந்தாவின் உதவியாளர்கள், ரஞ்சிதாவை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று பத்திரமாக வைத்திருக்கின்றனர் எனத் தகவல்கள் கூறின. ஆனால் ரஞ்சிதா கேரளாவில் பது[illegible] புதிய தகவல்கள் [illegible] விரைவில் ரஞ்சிதாவையும் பொலிஸார் கைது செய்வார்கள் என்று தெரிகிறது.

# இலங்கை அகதிகள் வருகையைத் தடுக்க மீனவரின் படகு விற்பனைக்குக் கட்டுப்பாடு

இராமநாதபுரம், ஏப். 23

இலங்கையிலிருந்து தமிழகக் கடல் மார்க்கமாக நடந்து வரும் ஊடுருவல்களைத் தடுக்க, பொலிஸாரின் அனுமதியின்றி படகுகளை விற்க மீனவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வழியாக தமிழக கடல்மார்க்கமாக ஊடுருவல் நடந்து வருகிறது. சிலர் அகதிகள் போர்வையில் வந்து செல்கின்றனர். இது போன்று ஊடுருவலுக்கு படகுதான் உதவியாக உள்ளது. எதிர்பார்க்கும் தொகையை விட, இரண்டு மடங்கு அதிகமாக பணம் தரும்போது, மீனவர்கள் தங்களுடைய படகை யாரிடம் கொடுக்கிறோம் எனத் தெரியாமல், விற்பனை செய்கின்றனர்.

படகுகளை வாங்கும் ஊடுருவல்காரர்கள், [illegible] நிறுத்திவிட்டு தப்பி செல்கின்றனர். தமிழகக் கடலோர மாவட்டங்களில் இப்படி படகுகள் விற்பனை செய்யப்படுகின்றன. இனி, மீனவர்கள் தங்களுடைய படகுகளை விற்பனை செய்வதாக இருந்தால், பொலிஸாரின் அனுமதி பெற்று, யாருக்கு விற்பனை செய்கிறோம் என்ற தகவலைத் தெரிவிக்க வேண்டும்.

இதைப் பொலிஸார், மீன்வளத்துறை, புலனாய்வுத்துறை, சுங்கத்துறை, வனத்துறை என பாதுகாப்பு தொடர்பான அனைத்து துறையினரும் கண்காணிக்க வேண்டும் - என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

இராமநாதபுரம் கலெக்டர் ஹரிஹரன் கூறியவை வருமாறு -

மீன்பிடிப் படகுகள் கடலில் சென்றால் உரிய அங்கீகாரம் இருக்கிறதா என்பதை பாதுகாப்புத் துறையினர் சோதனையிட வேண்டும். மீன்துறை உள்ளிட்ட பாதுகாப்பு துறையினர், கடலோரக் காவற்படையினருடன் ஒருங்கிணைந்து, கடல் மார்க்கமாக ஊடுருவல் இல்லாதவகையில் கண்காணிப்பைப் பலப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 507
சீட்டிழுப்பு திகதி: 21.04.2010

வெற்றி எழுத்து: J வெற்றி இலக்கங்கள்: 26 36 50 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 13,116,638.40 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 201 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 371 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 9203 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5318 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 132193 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 21096 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 5,485,940.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.13,649,484.80



## தவறிவிட்டது

Pen drive ஒன்று சங்கானைக்கும் சித்தன்கேணிக்கும் இடையிலான பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
சாயி மணிக்கூட்டு தொழிலகம், சித்தன்கேணி. 0779004568



## வீடு வாடகைக்குண்டு

கச்சேரிக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குண்டு. தனியார் நிறுவனங்கள் அல்லது ஏனைய நிறுவனங்கள், அரச உத்தியோகத்தர்கள் விரும்பத் தக்கது. (வாகன தரிப்பிட வசதியுண்டு)
தொடர்பு: 0777238297


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.23

உரும்பிராய் வடக்கு, ராசாட்டி அன்னமார் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு அன்னைதாசன் க. ஆனந்தராசா அவர்களது சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.23

கெருடாவில், கோட்டைச்சீமா முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 29 ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை குளிர்த்தியும் இடம்பெறும். (204-253)


## தேவை

எமது விருந்தினர் விடுதிக்கு Room Boy உடன் தேவை. நாளை (24.04.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு முன்னர் நேரில் வரவும்.

YARL RESTIN
No. 337, Palaly Road, Parameswara Junction, Thirunelvely. 021 222 1011



CRICKET BONANZA OFFER



Airtel BIGTV dishtv SUN DIRECT TATA Sky

Offer valued until May 31

Sats-Tech Engineers (Pvt) Ltd
300 K.K.S Road, Jaffna. 0217210228, 0212228812
51/102 Wolfendhal Street Colombo-13 0117242479, 0114562929



RK & SONS ELECTRONICS
Main Street, Nelliady

வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு

மேற்படி விலாசத்தில் உள்ள எமது நிறுவனம் கட்டட திருத்த வேலை காரணமாக சில நாள்களுக்கு மூடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருவதோடு எமது வாடிக்கையாளர்களது நன்மை கருதி எமது பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு வேண்டிய பொருள்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.

0775029034 - 0779385356, 0775137255 - 0776660699



# பொருளியற் கல்லூரி BARATHY

மீண்டும் புதிய பிரிவு எமது 3 நிறுவனங்களிலும்

சனி 24.04.2010

நாளை ஆரம்பம் A/L - 2012


## கலை, வர்த்தகப் பிரிவு

| பாடம் | பொருளியற் கல்லூரி யாழ்.நகரில் | பொருளியற் கல்லூரி இணுவிலில் | BARATHY சித்தன்கேணியில் |
|---|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் சுதாகரன் | மகேந்திரன் சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | திருக்குமரன் |
| வணிக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| புள்ளிவிபரவியல் | விக்னேஸ் | விக்னேஸ் | விக்னேஸ் |
| தமிழ் | சத்தியவேந்தன் | பாலா | பாலா |
| இந்துநாகரிகம் | யோகீஸ்வரன் | சுரேஸ் | சுரேஸ் தரன் |
| அளவையியல் | ஆர்.பி.சர்மா | ஜெயசுரேஸ் | ஆர்.பி.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| நாடகம் | கணேஸ் | கணேஸ் | கணேஸ் |
| வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| அரசியல் | ஜெனா | கோகுலன் | கோகுலன் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| விவசாய விஞ்ஞானம் | விக்கி | விக்கி | விக்கி |
| இலகு கணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் | ஐங்கரன் |
| மனைப்பொருளியல் | மஜீபன் | மஜீபன் | மஜீபன் |
| ICT | அம்பி | அம்பி | அம்பி |
| ஆங்கிலம் | நிஷாந்தன் ஜைஷன் | நிஷாந்தன் ஜைஷன் | நிஷாந்தன் ஜைஷன் |
| சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் | சிறிஸ் |

இதுவரையிலும் அனுமதி பெறாத மாணவர்கள் நாளை ஆரம்பமாகும் புதிய பிரிவுக்கு உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.


பாசத்தோடு எமை வளர்த்த அன்னை பரமனடி சேர்ந்த

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் : 1949.02.18
செல்லின் பிடியில் : 2009.04.23

கடந்த 23.04.2009 அன்று புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மாத்தளன் வலயன் மடப் பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது சிக்கி இறைவனுக்குள் நித்திரையான மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட

திருமதி ஜோசேப் மரியநாயகம்
### மேரிபிலோமினா (மலர்)

அன்னையென்று நீ இருந்தாய் அரவணைக்க
அன்புசெய்து வாழ்ந்திருந்தாய் மனஞ்சிறக்க
துன்பமது தந்து ஏன் நீ விட்டகன்றாய்
துடிக்குதம்மா என்மனது துன்பமதில்
உன் ஆன்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக தவசிகுளம் புனித கண்ணகை மாதா ஆலயத்தில் இன்று (23.04.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் உம் அன்பிற்காய் ஏங்கிடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தவசிகுளம், மிருசுவில். 0776555620


slat ACADEMY Lead, Create, Animate.

# Animation துறையில் ஓர் உதயம்

இந்தியாவில் சிலிக்கன் சிற்றி பெங்களூர் மாநிலத்திலிருந்து யாழ்.நகரில் முதன் முறையாக Animation இல் விரிவான கற்கைநெறி Slat Academy இனால் வழங்கப்பட இருக்கின்றன.

Slat Academy தமது கல்வி நிறுவனத்தை யாழ்.நகரில் Magnet Academy உடன் இணைந்து ஆரம்பிக்கின்றது.

*Slat Academy* இனால் வழங்கப்படும் கற்கை நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்



- ★Multimedia
- ★Web Design
- ★Game Design
- ★Graphics
- ★Digital art and 2 D Animation
- ★Digital art and 3 D Animation
- ★Animation Film making

இவற்றிற்கான கற்பித்தலை இத்துறையில் தேர்ச்சியும் அனுபவமுமிக்க இந்திய வல்லுநர்கள், யாழ்.நகரில் உங்களுக்காக வழங்க இருக்கிறார்கள்.

இதற்கு முன்னோடியாக Animation துறைசம்பந்தமான கற்கை நெறிகளும், செயற்பாடுகளும் பயன்களும் உள்ளடக்கிய

## கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் 9-5 மணி வரை அதே சிறப்புமிக்க இந்திய வல்லுநர்களால் நடத்தப்படவுள்ளன.

பயிற்சி முடிவில் பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

- ★O/L, A/L மாணவர்கள்,
- ★பட்டதாரி மாணவர்கள்,
- ★கற்பனைத்திறன், ஆக்கத்திறன் கொண்ட ஆர்வலர்கள்

இத்துறை சார்ந்த அனைவரும் பங்குபற்றிப் பயனடையுங்கள்.

அனுமதிச் சீட்டு 500 ரூபா

தொடர்புகளுக்கு: 0213214756, 0777497186.

### அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும் இடங்கள்

- ★ IIS கணனி நிறுவனம் (நெல்லியடி) கொடிகாமம் வீதி, நெல்லியடி. தொ.பே: 021 226 3335
- ★சிற்றி மெடிக்கல்ஸ் (யாழ்ப்பாணம்) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- ★ Jaffna Electricals இல.4, நவீன சந்தை, சாவகச்சேரி.
- ★Andra Digital Image 6D, உப்புமடம் சந்தி, காங்கேசன்துறை வீதி, கோண்டாவில்.
- ★வரணி மிசன் சேல்ஸ் சென்ரர் 145, ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 021 222 2868

மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் 24 ஆம் திகதி நுழைவாயிலில் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கண் "கிளினிக்"கில் கத்திக் குத்துக் களேபரம்; காதலர்கள் மோதியதால் நோயாளர் பீதி!

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ். போதனா வைத்தியசாலையில் கண் கிளினிக்கில் நேற்று கத்திக்குத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. கத்திக்குத்துச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இருவர் முதலில் வாய்ச் சண்டையில் ஈடுபட்டனர். அது முற்றியதால் இருவரும் மாறி மாறி ஒருவரை மற்றவர் கத்தியால் குத்தினர். கடைசியில் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் காதல் நாடகத்தால் சிறிது நேரம் அல்லோலகல்லோலப்பட்டது வைத்தியசாலையின் கண் கிளினிக் பகுதி.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் கிளினிக் பகுதிக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த சீ.கமகே (வயது 26) என்பவர் தொழில்நுட்பவியலாளர் நியமனம் பெற்று 2 வாரங்களுக்கு முன்னர் கடமைக்கு வந்திருந்தார். அவரைச் சந்திப்பதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தாதியாகப் பணியாற்றும் எஸ்.அஞ்சலி (வயது 22) என்வரும் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவர்கள் இருவரும் காதலர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அஞ்சலி நேற்றுக்காலை 8 மணியளவில் போதனா வைத்திய சாலையின் கண் கிளினிக் பகுதிக்கு வந்தார். அங்கு காதலன் காதலிக்கு இடையே கடும் வாக்குவாதம் மூண்டது. இந்த வாக்குவாதம் எல்லை மீறி இருவரும் பரஸ்பரம் கத்திக்குத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கத்திச் சண்டையினால் தொழில்நுட்பவியலாளரான சீ.கமகே கழுத்தில் படுகாயமடைந்தார். அவ ரது காதலியான அஞ்சலியும் கையில் காயமடைந்தார். இருவரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருவரும் கத்திகளை ஏந்தியவாறு தகராறில் ஈடுபட்டமையால் கண் கிளினிக்குக்கு வந்த நோயாளர்கள் அனைவரும் பீதியடைந்தனர். அப்பகுதி சிறிது நேரம் பெரும் அல்லோலகல்லோலப்பட்டது (50-9-78-224)

# நேற்று நாடாளுமன்றின் முதலாவது அமர்வில்.....

கொழும்பு, ஏப.23

ஏழாவது நாடாளுமன்றத்திற்குத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றில் புதிய சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஏழாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு பலத்த பாதுகாப்பின் மத்தியில் நேற்றுக்காலை 8.45 மணியளவில் ஆரம்பமானது.

சபைக்குள் நுழைந்த எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி எம்.பிக்கள் ஒருவரையொருவர் கட்டித்தழுவி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஆளுங்கட்சியின் எம்.பியும் ஜனாதிபதியின் மகனுமான நாமல் ராஜபக்ஷவுக்கு அக்கட்சி எம்.பிக்கள் பலத்த வரவேற்பளித்தனர். அவரைக் கட்டித்தழுவி வாழ்த்துத் தெரிவித்தனர்.

இராணுவத் தடுப்புக் காவலில் கைதியாக இருக்கும் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா சபைக்குள் நுழைந்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவருக்குக் கைலாகு கொடுத்து அவரை உற்சாகமாக வரவேற்றனர்.

பொன்சேகாவுக்கு முதல் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உட்படப் பலர் பொன்சேகாவுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

சபையின் முதல் நடவடிக்கையாக சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது. சமல் ராஜபக்ஷ அனைத்துக் கட்சியினராலும் ஏகமனதாக சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர், அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துவிட்டு சத்தியப்பிரமாணம் செய்தார். அடுத்ததாகப் புதிய எம்.பிக்கள் அனைவரும் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட சபாநாயகருக்கு கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். பிரதமர் டி.எம். ஜயரட்ண, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயகத் தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் திகாம்பரம், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் பிரமுகர் வண.அத்துரலிய ரத்தின தேரர் ஆகியோர் சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றினர்.

அதன் பின்னர் பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோரின் தெரிவு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவராக நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்கிறது என்று சபாநாயகர் அறிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்டு ஆளுங்கட்சியினர் மேசைகளின் மேல் தட்டி வாழ்த்துத் தெரிவித்தனர். ஆனால், எதிர்க்கட்சியினர் அவ்வாறு எதையும் செய்யாது மௌனம் காத்தனர்.

இறுதியாக, நாடாளுமன்றத்தை அடுத்த மாதம் 4ஆம் திகதிவரை ஒத்திப் போடும்படி பிரதமர் பிரேரித்தார். சபாநாயகரும் அவ்வாறே செய்தார். சபை ஒத்திப்போடப்பட்டதன் பின்னர் அரசுத் தரப்பிலிருந்து மேர்வின் சில்வா ஓடிச்சென்று ரணிலுக்கு கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ண ஆசனத்தை விட்டு இறங்கி வந்து ரணில் மற்றும் பொன்சேகா ஆகியோருக்கு கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார்.

அதேபோல் எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி எம்.பிக்களும் ஒருவரையொருவர் கட்டித்தழுவி வாழ்த்துத் தெரிவித்துப் பின் கலைந்து சென்றனர்.

நாடாளுமன்றம் மே மாதம் 4ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மீண்டும் கூடவிருக்கின்றது. (அ-சி)

## 3 பாடசாலைகளுக்கு கணனிகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 3பாடசாலைகளுக்கு நேற்று கணனிகள் கையளிக்கப்பட்டன.

வலயக் கல்வி அலுவலக கணக்காளர் செ.செந்தூரன் கணனிகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

கல்வித் திணைக்களத்தின் ஈ.எஸ்.டி. பீ.திட்டத்தின் கீழ் இந்தக் கணனிகள் கையளிக்கப்பட்டன.

குடமியன்அ.த.க.பாடசாலை, கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம், நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே கணனிகள் வழங்கப்பட்டன. (ஒ-207)

## புங்குடுதீவில் இன்றிரவு நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம், ஏப். 23

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் (கோவலன் கண்ணகி) என்னும் நாட்டுக்கூத்து நிகழ்வு இன்று இரவு 9 மணிக்கு புங்குடுதீவு அருள்மிகு ஸ்ரீ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட அண்ணாவிகளான கணபதிப்பிள்ளை அருட்குமார், புஷ்பநாதன் புஷ்பரூபி ஆகியோரின் நெறியாள்கையில் இந் நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. (ஒ-10)

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஏப். 23

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 815ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "C" என்ற ஆங்கில எழுத்தும் 16/17/20/61 ஆகிய இலக்கங்களும் போனஸ் இலக்கமாக 41 அதிர்ஷ் டத்துக்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக் கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 266 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,043 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,82,474 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

# கல்விக்கான செயற்பாட்டு வார நிகழ்வு யாழ்.இந்துவில் ஞாயிறு நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஏப்.23

கல்வி அபிவிரத்திக்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டில் உலகளாவிய கல்விக்கான செயற்பாட்டுவார நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 5.30 வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த கல்வி வாரமானது வருடம் தோறும் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை ஒருவார காலமாகப் பிரகடனப்படத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய கல்விக்கான செயற்பாட்டு வாரமாக 'சகலருக்கும் கல்வி' என்ற தாரக மந்திரத்தை முன்னெடுத்து சகலருக்கும் 2015இல் கல்வி வழங்க வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டுவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்தக் கல்விவார நிகழ்வில் அமைச்சர்கள், மாகாண அளுநர், மாகாணக் கல்விச் செயலர், அரச அதிபர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்து சிறப்பிக்க உள்ளனர் என்று மேற்படி அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் வி.ஸ்ரீசக்திவேல் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# வள்ளங்கள் செல்ல தடையாகவுள்ள மண் திட்டை அப்புறப்படுத்தித் தருக!

## சாவகச்சேரி பெரியமாவடி மீனவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.23

சாவகச்சேரி கச்சாய் கடலேரியில் வள்ளங்கள் கொண்டு செல்வதற்குத் தடையாக உள்ள மண் திட்டை அப்புறப்படுத்தித் தருமாறு சாவகச்சேரி பெரியமாவடி கடற்றொழிலாளர் சங்கத்தினர் யாழ்.அரச அதிபரைக் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவது:-

சாவகச்சேரியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கடற் றொழிலாளர்கள் ஆனையிறவு, பூநகரி, கச் சாய் ஆகிய பகுதிகளில் தொழிலில் ஈடுபடுவதற்கு வள்ளங்களில் இவ் வழியாகவே சென்று வருகின்றனர். நீர் வற்றும் காலங்களில் இவ்வழியே படகுகள் கொண்டு செல்ல முடியாததால் பல தொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாதுள்ளனர்.

கடலேரியில் நீர் வற்றும் காலங்களில் இந்த மண் திட்டைக்கடந்து மீனவர்கள் பிரவேசிக்க முடியாத நிலையுள்ளதால் நாளாந்தம் வெறும் கையுடன் மீனவர்கள் வீடு திரும்பும் நிலை காணப்படுகிறது.

கடந்த வாரம் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து சிரமதானம் மூலம் திட்டை அகற்ற மேற்கொண்ட முயற்சி உரிய பயனை அளிக்கவில்லை.

எனவே அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனத்தின் மூலம் இந்த மண் திட்டை அகற்றி கடற்றொழிலாளர்களின் எதிர்கால வாழ்வுக்கு ஒளியூட்டுமாறு சங்கத்தினர் யாழ். அரச அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் விபரித்துள்ளனர். (ஒ-207)

## சைவ சமயப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் தட்டாதெரு, வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வழமைபோன்று சைவசமயப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

தரம்-3 தொடக்கம் தரம்-11 வரையான வகுப்பு மாணவர்களுக்கான இந்தப் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறும். முதல் நாள் 8ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்தப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் 10 மாணவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-10)

## வலி.தெற்குப் பிரதேச சபையின் உலக புத்தக தினவிழா

சுன்னாகம்,ஏப்.23

வலிகாமம் தெற்கு பிதேச சபையின் உலக புத்தக தினவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் மா.சந்திரகாந்தன் பிரதம விருந்தினராகவும்,விவித வித்யா சஞ்சிகை ஆசிரியர் ப.சிவானந்தசர்மா (கோப்பாய்சிவம், இளைப்பாறிய நூலகர் சி.குமரவேல், கலாபூஷணம் சு.துரைசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

இந் நிகழ்வில் வெள்ளிமலை சஞ்சிகை வெளியீடு,நூற்கண்காட்சி ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (50-38)

## "மாஸ்" திரைப்படக் கல்லூரி புதிய வகுப்புகள்

கொழும்பு, ஏப். 23

புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ள "மாஸ்" திரைப்படக் கல்லூரியின் புதிய வகுப்புகள் நாளை சனிக்கிழமை ஆரம்ப மாகின்றன.

கொழும்பு கொட்டாஞ்சேனை கே. சிறில், சி. பெரேரா மாவத்தையில் 267/1, ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மேற்படி கல்வி நிறுவனத்தில் இந்தியாவிலிருந்து வருகைதரும் இயக்குநரும், விரிவுரையாளருமான அருண்மொழி, விரிவுரையாளர் விஜயன் ஆகியோர் புதிய வகுப்புக்களை ஆரம்பித்து வைக்கின்றனர்.

புதிய வகுப்புக்களாக நடிப்பு, கதை, திரைக்கதை வசனம், இயக்கம் போன்றன ஆரம்பிக்கப்படுகின்றன. (ஒ-10)

## வெட்டுக் காயங்களுடன் மூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப். 23

குடும்பத்தகராறு காரணமாக வெட்டப்பட்டு காயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சுழிபுரம் பகுதியில் நேற்று நடைபெற்றுள்ளது. சம்பவத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த காசிநாதர் (வயது 52), சுழிபுரம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சச்சிதானந்தம் (வயது 45) ஆகிய இருவரும் காமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வேலணைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தகராறு ஒன்றில் வெட்டப்பட்டதாக கூறப்படும் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கவிந்தன் (வயது -20) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-10-06)

## மின்சார சபை நலன்புரி சங்க மலர் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப். 23

இலங்கை மின்சார சபையின் வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினரின் மலர் வெளியீடும் பொதுச் சபைக்கூட்டமும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நவாலி வீதி, ஆனைக்கோட்டையில் உள்ள துரைஐயா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சி.குமாரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மேலதிக பொதுமுகாமையாளர் வே. இராசேந்திரனும், கௌரவ விருந்தினராக வடக்கு பிரதிப்பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் அங்கத்தவர்களின் தரம்-5 புலமைப்பரிசிலில் சித்திபெற்ற மாணவர்கள், இளைப்பாறிய அங்கத்தவர்கள் கௌரவிக்கப்படுவர். (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஆறு மாத காலத்துக்குள் வடக்கு மாகாண சபைத் தேர்தல்!

## டலஸ் அழகப்பெருமா தகவல்

கொழும்பு, ஏப். 23

வடக்கு மாகாண சபைத் தேர்தல் இன்னும் ஆறு மாத காலத்துக்குள் நடத்தப்படும். இதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளும். வடக்கு மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய நல்ல சந்தர்ப்பம் உள்ளது - என்று சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை தேர்தல் விடயம் குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. தேர்தலில் ஐக்கிய ரீதியில் தமது பிரதிநிதித்துவங்களைத் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இதேவேளை, வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டியிருக்கின்றது. பொதுவாக நோக்குமிடத்து இன்னும் ஆறு மாத காலத்துக்குள் வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்பதை மிகவும் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன்.

இதற்கான ஏற்பாடுகளை அரசு எதிர்காலத்தில் முன்னெடுக்கும். மேலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும்.



இங்கு எந்தக் கட்சி போட்டியிடுகின்றது என்பது முக்கியமல்ல. ஆனால் வடக்கு மக்கள் சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றனர் என்பதே முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

முக்கியமாக இன்று கிழக்கு மாகாண சபை மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. அப்பிரதேச மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளனர். அதே போன்று வடக்கிலும் இடம் பெறவேண்டும். ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே எமது கடமையாகும் - என்றார். (அ-சி)

## அமைச்சரவை இன்று பதவியேற்பு

கொழும்பு,ஏப்.23

புதிய அமைச்சரவை இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன் சத்தியப்பிரமாணம் செய்யவிருக்கிறது.

35பேர் கொண்டதாக அமையவிருக்கும் அமைச்சரவையில் புதிய முகங்களுக்கு இடமளிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களும் புதிய அமைச்சரவையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அங்கம் வகிப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-1)

## ஆஸ்பத்திரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். வந்த யுவதி ஒருவர் தமது உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக இரவு 7 மணியளவில் கட்டுடை பஸ்தரிப்பு நிலையத்தில் நின்றிருந்தார். அப்போது அங்கு வந்த இருவர் தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் எனக்கூறி அந்த யுவதியை அழைத்துச் சென்று வீடொன்றில் வைத்துப் பாலியல் வல்லுறவு புரிந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இருவரையும் பொலிஸார் கைது செய்ய முற்பட்ட வேளை ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும், மற்றவர் பொதுமக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் நாகராஜா பிரதீபன் (வயது 30) என்ற சந்தேக நபர் நேற்று அதிகாலை 2 மணியளவில் கைவிலங்கினை உடைத்துவிட்டு வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். இவரைக் கைது செய்யும் நடவடிக்கையில் யாழ். பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வேளை, அவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டிருந்தார். (ஒ-1-50-86-288)


**EUROPEAN COLLEGE OF HIGHER STUDIES**

இன்று வெள்ளிக்கிழமை (23.04.2010) ஆரம்பமாகிறது

எமது தெரிவுகளாக சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகம், கல்லூரிகளின் அனுமதிகளையும் இலங்கையில் முதல் வருடத்தைப் பூர்த்தி செய்து எமது கல்வித்திறனை சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைக்க எமது பாரம்பரியம், சமூகவியல் என்பனவற்றை உலகிற்கு பறைசாற்றுவோம்.

★GCE O/L, GCE A/L முடித்து பல்கலைக்கழக அனுமதி பெறாத திறமை மிகு மாணவர்களுக்கான சர்வதேச தரத்தில் உயர்கல்வி கற்பதற்கான ஓர் அரியவாய்ப்பு

STUDY IN

U.K
AUSTRALIA
CANADA
CYPRUS — Germany, Italy, France

முதல் வருட கற்கையை இலங்கையில் பூர்த்தி செய்யலாம்.

Language Studies - English — IELTS, TOFEL, Dip.in.English

(567137)

Management - Business Management, Hotel Management, Hospitality Management, Business Administration.
Law - International Law and order.
Computer Studies - Information Technology Computer multimedia, Computer Hardware, Soft ware.
Nursing - Nursing.
Q.S - Building Construction.

315 ½, Palaly Road, (Parameswara Junction) Thirunelvely, Jaffna.

தொடர்பு: 0213734747


## யாழ்.சிறைச்சாலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், விடுதலைக்காக காத்திருந்த எம்மை அநுரர்தபுரம் சிறைச்சாலைக்கு மாற்றுவதன் மூலம் மேலும் பல வருடங்கள் தடுத்து வைப்பதே நோக்கமாக இருக்கும் எனச் கைதிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்ட கைதிகளும் இவ்வாறு அநுராதபுரம் சிறைக்கு மாற்றப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடம் ஆகிய தரப்புகளுக்கு தமது நிலைமையை தெளிவுபடுத்தி பாதிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் மகஜர் ஒன்றை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

நியாயமான தீர்வு கிடைக்கும் வரையும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைதிகள் தொடரவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

(ஒ-14-288-224)

## இனியாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்களின் பணிக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

30 வருட கால யுத்தம் முடிவுற்ற நிலையில் இந்த நாடாளுமன்றம் கூடுகின்றது என்று பிரதமர் இப்போது உரையாற்றும்போது கூறினார். அது உண்மைதான். பொதுவாக மக்கள் எவரும் யுத்தத்தை விரும்பவில்லை.

யுத்தம் முடிந்ததை நாம் எல்லோரும் வரவேற்கின்றோம். யுத்தம் முடிந்து விட்டதால் இந்த நாட்டில் சமாதானம் வந்து விட்டது என்றோ அல்லது மக்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கான சூழ்நிலை உருவாகிவிட்டது என்றோ சொல்லமுடியாது. அவ்வாறு கூறப்படுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தப் புதிய நாடாளுமன்றம் ஊடாக இந்த நாட்டு மக்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கவேண்டும். அதற்கான பணியை புதிய சபாநாயகர் ஆற்றவேண்டும்.

எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து புதிய சபாநாயகரை ஏகமனதாகத் தெரிவு செய்தமைபோல், இந்த நாட்டில் 60 வருடங்களாக இருந்துவரும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும் நாம் அனைவரும் இச்சந்தர்ப்பத்தில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார். (அ-சி)

## சட்டத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படைகளையும் நாம் மதிக்க வேண்டும்.

மக்களின் உரிமை மிகமுக்கியமானது. ஒருவர் அநாவசியமாகச் சிறைக்கைதியாகின்றமையைத் தடுக்க வேண்டும். நான் கூட பல்வேறு வகையான அநியாயங்களுக்கு இரையாகியுள்ளேன்.

சபாநாயகரின் நீதியான செயற்பாட்டுக்கு என்றும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். இந்தச் சந்தர்ப்பத்தில் புதிய பிரதமர் டி.எம்.ஜயரட்ணவிற்கும் நான் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார். (அ-சி)

## இருவரையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுகொண்டிருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மகேந்திரன், நவாலியைச் சேர்ந்த 24 வயதுடைய மகேஸ்வரன் ஆகிய இருவரும் காலை 8 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள மாதா கோயிலுக்கு அருகில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்தது தெரிந்ததே.

கடத்தப்பட்ட இருவரையும் விடுதலை செய்தவதற்கு 70 இலட்சம் ரூபா தரவேண்டும் என்றும், பணம் தரமறுக்கும் பட்சத்தில் இருவரும் கொலை செய்யப்படுவார்கள் என்றும் கடத்தல்காரர்கள் குடும்பஸ்தரின் மனைவியையும், வாலிபரின் பெற்றோரையும் பல தடவைகள் தொலைபேசி மூலம் மிரட்டியிருந்தனர்.

இக்கடத்தல் கப்பம் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தீவிர விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் கடத்தல் காரர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்கான யுக்திகளை மேற் கொண்டிருந்தனர்.

குடும்பஸ்தரையும் வாலிபரையும் கடத்தல்காரர்களிடம் இருந்து மீட்பதற் காகக் குறிப்பிட்ட ஒரு தொகை பணத்துடனும், தங்க நகைகளுடனும் வாலிபரின் தந்தை நேற்றுக் காலை (வியாழக்கிழமை) கடத்தல்காரர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து சென்றார்.

இதேவேளை கடத்தல் காரர்களைக் கையும் மெய்யுமாக மடக்கிப் பிடிப்பதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்ட மானிப்பாய் பொலிஸார் குறிப்பிட்ட இடங்களில் சாதாரண சிவில் உடையில் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

பணத்துடன் யாழ். கோட்டைக்கு அருகில் குறிப்பிட்ட இடத்திற்கு வருமாறு தொலைபேசியில் தெரிவித்த கடத்தல்காரர்கள் பின்பு இடங்களை மாற்றிமாற்றிக் கூறிவந்தனர். இறுதியாகச் சொன்ன இடத்திற்கு வாலிபரின் தந்தை பணத் துடன் சென்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரையும் அங்கு மறைந்திருந்த பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து குடும்பஸ்தரும், வாலிபரும் மறைத்து வைக்கப்பட்டிருந்தவீட்டிற்குச் சென்ற பொலிஸார் அங்கு மேலும் ஒருவரைக் கைது செய்ததுடன், இரு அறைகளில் தனித் தனியே சங்கிலியால் கால்களையும், கைகளையும் கட்டியிருந்த இருவரையும் மீட்டனர்.

இவர்களை மறைத்து வைத்திருந்த வீட்டிற்குப் பின்புறத்தில் இவர்களைப் புதைப்பதற்காக ஆழக்குழி ஒன்றும் வெட்டப்பட்டிருந்ததைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் குறித்து பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாரின் சாதுரிய மான - அதிரடியான - நடவடிக்கை குறித்து குடாநாட்டு மக்கள் வந்து பாராட்டுத் தெரிவிக்கின்றனர். அவர்களின் கடமை உணர்வை மெச்சிப் பேசிக்கொள்கின்றனர். (ஒ-115-9-86)

## சபாநாயகராகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முருகேசு சந்திரகுமார்(அசோக்) குழுக்களின் பிரதித்தலைவராகவும், வாக்கெடுப்பின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றம் எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்கிறது என்றும் சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது.

காலை 8.45 மணியளவில் ஏழாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு ஆரம்பமானதும் முதலில் சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது.

சமல் ராஜபக்ஷவின் பெயரைப் பிரதமர் டி.எம்.ஜயரட்ண அந்தப் பதவிக்குப் பிரேரித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய அதை வழிமொழிந்தார். வேறு எவரின் பெயரும் இப்பதவிக்குப் பிரேரிக்கப்படாதமையால் சமல் ராஜபக்ஷ சபாநாயகராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

பிரதமரும், கரு ஜயசூரியவும் எழுந்து சென்று சமல் ராஜபக்ஷவை அழைத்து வந்து சபாநாயகரின் ஆசனத்தில் அமர வைத்தனர். எம்.பிக்களின் சத்தியப்பிரமாணத்தைத் தொடர்ந்து பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு இடம்பெற்றது.

இந்தப் பதவிக்கு முன்னர் பிரதி சபாநாயகராகவிருந்த பிரியங்கர ஜயரட்ணவின் பெயரை பிரதமர் பிரேரித்தார். ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான ஜோன் அமரதுங்க அதை வழி மொழிந்தார்.

அதையடுத்து பிரியங்கர பிரதி சபாநாயகராக ஏகமனதாக அறிவிக்கப்பட்டார்.

அடுத்து குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு இடம்பெற்றது. இப்பதவிக்கு முருகேசு சந்திரகுமாரின் பெயரை நிமால் ஸ்ரீபால டி சில்வா பிரேரித்தார். டக்ளஸ் தேவானந்தா அதை வழிமொழிந்தார். அவரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவராக இந்த நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்கிறது என்று சபாநாயகர் அறிவித்தார். (அ-சி)


A/L 2012
கலைவர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 24.04.2010
சனி 3 மணி

O/L DAY CLASS
ஆரம்பம்:
23.04.2010
வெள்ளி 8.30 மணி
விஞ்ஞானம், கணிதம் } S.குணசீலன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org